



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

0760131199 பவிசா. (செல்வி)



வேலணையைப் பிறப்பிடமாகவும், இல: 40, 08ஆம் வாய்க்கால், உருத்திரபுரத்தை, வசிப்பிடமாகக் கொண்ட

அமரர்

# கேதீஸ்வரன் மோகனேஸ்வரி

## (அண்ணியம்மா)

அவர்களின் சிவபதப்பேறு
குறித்த 31ஆம் நாள் நினைவாக

"ஸ்ரீ கருட புராணம்"

**27.03.2022**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ilை.நூலக PP115

# சமர்ப்பணம்

அள்ளிப் பிசைந்து அமுதூட்டி
ஆரத்தழுவிப் பாராட்டி
நாம் கல்விதனில் கற்பதற்கு
பள்ளிக்கு கூட்டி சென்றீர்கள்.
எந்தக் கோயில் சென்றாலும்
எங்கள் பெயரால் அர்ச்சித்து
நல்லன வேண்டி நின்றவரை
நாளும் மறவோம்
உமது அன்பை அம்மா.
அகிலம்தனில் எம்மை எல்லாம்
அல்லல் இன்றி இன்பமாய் வாழ வைத்து
அல்லும் பகலும் அயராது பாடுபட்டு
ஊண், உறக்கம் மறந்து
இரவு பகலாய் இரத்தத்தை வியர்வையாக்கித்
தனைவருத்தித் தரணி எல்லாம் நாம் வாழ
உழைத்த எங்கள் அன்புத் தெய்வம்.
எம்மை எல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்தி விட்டு
இறைவனடி சென்று விட்டீர்.
அம்மா உங்களை இதய கமலத்தில்
நிறுத்தி வைத்து நெஞ்சுருக உங்கள் ஆன்ம
ஈடேற்றத்திற்காகப் பிரார்த்திக்கும் இவ்வேளை
உங்கள் பிரிவு குறித்து வெளியிடப்படும்
ஸ்ரீ கருட புராண மலரினை
உங்களிற்கு சமர்ப்பணம் செய்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

இவ்வண்ணம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

மனம் மகிழ

26
08
1957



மனம் நெகிழ

25
02
2022

# அமரர்
# கேதீஸ்வரன் மோகனேஸ்வரி

அவர்களின்

## "திதி நிர்ணய வெண்பா"

ஆண்டு சேர் பிலவ வருட மாசி பதின்மூன்றாம் நாள்
அபரபக்க நவமி தனில் வேலணையூர் கேதீஸ்வரன்
மோகனேஸ்வரி எனும் மாண்புறு மங்கை
இறையடி சேர்ந்தாள் கண்ணனின் பதம் பணிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | |
|---|---|
| 01. அவா இன்மையே ஆனந்த வாழ்வு | 01 |
| 02. சிறந்த பிறவியும் மூன்று ஆசைகளும் | 09 |
| 03. பிரேத ஜன்மம் நீங்க வழி | 18 |
| 04. தான தருமங்களும் விருஷோற்சனமும் | 20 |
| 05. யமலோகத்திற்குப் போகும் வழி | 27 |
| 06. ஜீவன் செல்லும் பாதையில் பரிதவித்தல் | 34 |
| 07. பாப புண்ணியங்களை ஆராய்ந்து சொல்லும் பன்னிரு சிரவணர்கள் | 44 |
| 08. சித்திரகுப்தன் கணக்கும் நரகங்களும் | 48 |
| 09. யமபுரியும் யமதர்மராஜனும் | 81 |
| 10. பிரேத ஜன்மம் விளைவிக்கும் துன்பம் | 86 |
| 11. தோஷபரிகாரமும் முதன்மையானவர்களைப் பூஜித்தலும் | 90 |
| 12. பிரேத ஜன்மமடையக் காரணங்கள் | 94 |
| 13. ஜனன மரண விதிகள் | 96 |
| 14. புத்திரர்கள், பௌத்திரர்கள் கர்மம் | 101 |
| 15. சபிண்டிகரணமும், சதிபதிகளும் | 107 |
| 16. பப்ருவாகனன் கருமம் செய்தல் | 113 |
| 17. எள், தருப்பை முதலியன | 119 |
| 18. பலவகைத் தானங்கள் | 121 |
| 19. தானச்சிறப்பும் உயிர் பிரியும் விதமும் | 124 |
| 20. தேவேந்திரன் மயங்கிய கதையும், மாத விலக்கு தாம்பத்திய உறவு, கருவளர்ச்சி, உடலியல் பற்றிய விளக்கங்களும் | 127 |
| 21. யமன், அரண்மனை, சித்திரகுப்தன் மண்டபம், பாவ அவத்தைகள் | 135 |
| 22. சில தர்மங்களும் தீட்டுகளும் | 139 |
| 23. ஈமக்கிரியைகள் | 142 |
| 24. பிரயோபவேசம், தலயாத்திரைகள், உலக வாழ்க்கை | 144 |
| 25. சுவர்க்கமும் மோட்சமும் அடைய வழிகள் | 149 |
| 26. ஆசௌசம் | 151 |
| 27. துர்மரணம் அடைந்தால் | 153 |
| 28. காமியா விருஷோற்சர்க்கம் | 156 |
| 29. இன்ப துன்பங்களுக்குக் காரணங்களும், தானத்தால் வரும் பயன்களும் | 157 |
| 30. குழந்தைகளின் பாபங்கள், தர்ப்பணங்கள் | 160 |
| 31. வருஷ நித்திய சிரார்த்தங்கள் | 162 |
| 32. முற்பிறப்பின் நல்வினை தீவினை அறிகுறிகளும் மறு பிறவிகளும் | 164 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 1. அவா இன்மையே ஆனந்த வாழ்வு

திருமாலின் உந்தியில் பிரமதேவன் தோன்றி, இவ்வுலகம் அனைத்தையும் படைத்தான். விசாலமான இந்த உலகத்தில் தவம் புரிவதற்குச் சிறந்த இடமாகவும், ஆரணியங்களுக்கெல்லாம் அரசாகவும் விளங்குவது நைமிசாரணியம். அந்த வனத்தை நோக்கி, புராணங்களைச் சொல்லுவதில் வல்லவரான சூதமாமுனிவர் சென்று கொண்டிருந்தார். அந்த நைமிசாரணியத்தில் வேத வேதாங்கங்களை ஐயந்திரிபற கற்று உணர்ந்தவர்களும் ஸ்ரீ ஹரிகதா சங்கீர்த்தன சீலர்களுமான சவுனகர் முதலான முனிவர்கள் ஆசார சீலர்களாய், சொரூபத்தியானம் செய்பவர்களாய் கூடியிருந்தார்கள். அவர்களைச் சேவிப்பதற்காகவே சூதமா முனிவர் வந்தார். அவரைக் கண்டதும் சௌனகாதி முனிவர்கள் உற்சாகமடைந்து அவரை எதிர்கொண்டு வரவேற்று நன்கு உபசரித்து, உயர்ந்ததொரு தூய்மையான ஆசனத்தில் அவரை அமரச்செய்து பூஜித்து வணங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பிறகு அங்கிருந்த அருந்தவ முனிவர்கள் அனைவரும் சூதபுராணிகருக்கு அஞ்சலி செய்து சூதமா முனிவரே! தங்களிடமிருந்து வைஷ்ணவ சைவ புராணங்களை நாங்கள் கேட்டு மகிழ்ந்திருக்கின்றோம். பிரமனைக் குறித்த புராணங்களை இராஜஸகுணப் புராணங்களாகவும், சிவனைக் குறித்த புராணங்களைத் தாமஸ புராணங்களாகவும் ஸ்ரீவிஷ்ணு புராணம் ஒன்றையே தத்துவங்களைச் சொல்லும் ஸத்துவ புராணமாகவும் நாங்கள் கருதியிருக்கின்றோம். ஆகவே விஷ்ணு சம்பந்தப்பட்ட உயர்ந்த ஒரு புராணத்தைத் தாங்கள் சொன்னால் அதை நாங்கள் கேட்க மிகவும் ஆவலாக இருக்கின்றோம். தாங்களோ, பகவானின் அம்சமாக விளங்கும் வேத வியாஸ முனிவரின் சீடர். அவர் தங்களுக்கு யாவற்றையும் ஓதி உணர்வித்திருக்கிறார். நீங்கள் அறியாதது ஒன்றுமில்லை தர்மார்த்த காம மோட்சம் எனப்படும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நால்வகை புருஷார்த்தங்களையும் கொடுப்பதாகிய சாத்வீகமான புராணம் ஒன்றை தேவரீர் கருணை கூர்ந்து எங்களுக்குச் சொல்ல வேண்டும். இதுவே எங்கள் வேண்டுகோளும் விருப்பமும் ஆகும் என்று விண்ணப்பித்தனர்.

மாமுனிவரே! உலகில் உயிரினங்களுக்குப் பிறப்பும் இறப்பும் எந்தக் காரணத்தால் உண்டாகின்றன? ஜனனம் எடுத்து, பூமியிலே வாழ்ந்து வளர்ந்து அனுபவமடைந்து மரணம் அடைந்த பிறகு, எந்தச் செய்கையால் சுவர்க்கமும் நரகமும் அடைய நேரிடுகிறதெனக் கூறப்படுகிறது? எந்தக் காரணத்தால் தீராத நோய்கள் வருகின்றன? எப்போது பிரேத ஜன்மம், என்ற பூதப் பைசாசாதி ஆவிப்பிறவிகள் தோன்றுகின்றன? எதனால் அத்தகைய ஜன்மம் நீங்கும்? எதனால் முக்தி என்ற மோட்சம் கிடைக்கும்? இவற்றையெல்லாம் எங்களுக்குப் புரியும் வகையில் தெளிவாகச் சொல்லவேண்டும்!" என்று மிகவும் விரும்பிப் பணிவோடு கேட்டார்கள்.

அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி சூதமாமுனிவர் தம் குருநாதரான வியாச மகரிஷியின் திருவடித் தாமரைகளைத் தமது இருதயத்தில் தியானித்து, பிறகு சிரசின் மேல் தம்மிரு கரங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குவித்து, சர்வ ஜகத்காரணனும் ரக்ஷகனுமான ஸ்ரீமந்நாராயணனைத் தொழுது வணங்கிப் பூஜித்து விட்டு, சௌனகாதி முனிவர்களை நோக்கி, 'அந்தணோத்தமர்களே! அருந்தவ முனிவர்களே! யாவற்றையும் நன்குணர்ந்த நல்லவர்களே! நீங்கள் நல்லதொரு கேள்வியையே கேட்டீர்கள். நீங்கள் கேட்ட கேள்விக்கு விடையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஒரு நல்ல புராணத்தைச் சொல்லுகின்றேன். மனம் ஒருமித்து கவனமாகக் கேளுங்கள். முனிவர்களே! தேவ தேவனும், சர்வாந்தர்யாமியும், படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முப்பெருந் தொழில்களை விளையாட்டாகவே செய்பவனும், புருஷோத்தமனும், பரமபத சோபானனுமான ஸ்ரீமந் நாராயணனை, முன்பு ஒரு சமயம் பக்ஷிராஜனான ஸ்ரீ கருடாழ்வான் பணிந்து, இப்போது நீங்கள் என்னிடம் கேட்டது போன்றதொரு கேள்வியை உலக நன்மையின் பொருட்டுக் கேட்டான். அதற்கு ஸ்ரீமந் நாராயணன் தக்க விடையளித்தார். அந்தக் கதையை திருமால் கருடனுக்குக் கூறியவாறே நானும் உங்களுக்குச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

பறவை வேந்தனான கருடன் ஸ்ரீ பரமாத்மாவை நோக்கி, 'ஓ ஜகந்நாதா! பரந்தாமா! எள்ளுக்குள் எண்ணெய் போல் எங்கும் நிறைந்துள்ள பராபரப் பொருளே! ஸ்ரீ ஹரியே! உலகத்தில் ஜீவர்கள் ஏன் பிறக்கிறார்கள்? அவர்கள் மரணமடைந்த பிறகு என்ன காரணத்தால் சுவர்க்க, நரகங்களை அடைகிறார்கள்? எந்தப் பாவத்தால், ஜீவர்கள் மரித்த பிறகு, பிரேத ஜன்மத்தை அடைகிறார்கள்? எந்தப் புண்ணியத்தைச் செய்தால் அந்த ஜன்மம் நீங்கும். எந்தக் கர்மத்தால் நிரதிசய இன்ப வீடான தேவரீரின் உலகை அடைவார்கள்? முன்பு செய்த பாவங்களை மரண காலத்தில் எவ்வாறு நீக்கிக் கொண்டு நல்லுலகம் அடையலாம்? எத்தகைய கருமங்களால் பாவங்கள் நிவர்த்தியாகும்? இறக்கும்போது யாரை நினைத்தால் நற்கதி கிடைக்கும்? இவற்றையெல்லாம் அடியேனுக்குத் தெளிவாகக் கூறியருள வேண்டும்!' என்று வேண்டினான்.


ஸ்ரீமந் நாராயண மூர்த்தியானவரும், எல்லோர் மனத்திலும் புகுந்து அனைத்தையும் பார்க்க வல்லவரும், எல்லாச் செயல்களுக்கும் காரணமாகிய வருமான ஸ்ரீ ஹரிபகவான், புன்னகையுடன் பறவை வேந்தனை நோக்கிக் கூறலானார் :

'கருடனே! நீ நல்லதொரு கேள்வியைக் கேட்டுவிட்டாய்! அதையும் நல்ல முறையில் கேட்டாய் நீ கேட்டவைகள் அனைத்துமே உலகினருக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியாத இரகசியங்கள். அவற்றை நாம் கூறு வோம் கவனமாகக் கேள். எத்தனை நாட்கள் வாழ்ந் தாலும் என்றாவது ஒரு நாள் இறப்பது நிச்சயம் என்பதை ஒரு சேதனனா யினும் நினைப்பதில்லை. உலகில் பிறந்து விட்டது உண்மை என்பது போல இறத் தலும் உண்மை யென்று நினைப்பவன் கோடியில் ஒருவனாவது இருக் கிறானோ, இல்லையோ? உயிர்களைக் கவர்ந்து செல்லும் கூற்றுவன் என்று யமதர்மன் ஒருவன் இருக்கிறான் என்றும், வாழ்வின் இறுதிக் காலத்தில் அவன் கையில் அகப்பட்டேயாக வேண்டும் என்றும் அடுத்தடுத்து நினைத்து திடுக்கிடுபவன் எவனோ அவனே, 'நேற்றைய பொழுது போய் விட்டது! இன்றையப் பொழுதும் போய்விட்டது! இதுபோல் நாளாக நாளாக நமது வாழ்நாள் வீணாளாகக் கழிகின்றதே? நமன் வந்து விட்டால் என்ன செய்வது?' என்று நினைத்துப் பயந்தாவது நல்ல தருமங்கள் இயற்றி, அறநெறிப்படி வாழ்வான். ஒருவன் தனக்குரிய கர்மங்களை ஒழுங்காகச் செய்து வருவானாகில், அக்கருமங்களே அவனைக் காப்பாற்றும். இன்ன குலத்தில் பிறந்தவன் இன்ன மரபுப்படி இத்தகைய கர்மங்களைச் செய்யவேண்டும் என்று வேத சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றன. கருடா! அத்தகைய குலாசார தர்மங்களை உணர்ந்து ஒருவன் தான் பிறந்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலத்திற்கு ஏற்ற கர்மங்களைச் செய்வதோடு, மேலும் கீழும் செல்லாமல் உரிய கருமங்களையே எவன் ஒருவன் முறைப்படிச் செய்கிறானோ, அவனே எல்லாவிடத்திலும் மேன்மையடைவான்.

பிரம்ம, ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என நான்கு வருணத்தார் இருக்கின்றார்கள். அவர்களில் பிராமணருக்கு, ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற ஆறு கர்மங்கள் உள்ளன. ஷத்திரியருக்கு ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படை பயிற்றல், பொருதல் என்று ஆறு வகை கர்மங்கள் உண்டு. வைசியருக்கு ஓதல், வேட்டல், பொருளீட்டல், ஈதல், பசுக்களைக் காத்தல், ஏருழல் என ஆறு கருமங்கள் உண்டு. சூத்திரருக்கு, ஓதல், முன்னவர்க்கு பணியாற்றல், பொருளீட்டல், உழுதல், பசுக்காத்தல், வேட்டல் முதலிய ஆறு கர்மங்கள் உண்டு ஓ! கருடா, அவரவர் குலமரபுக்குரிய ஒழுக்கப்படி நடப்பதே அவரவர்க்கு பெரிய தவமாகும்! அத்தவத்தில் வழுவாது ஒழுங்காக வாழ்பவர் எவரோ, அவரே போகத்தையும் யோகத்தையும் ஒருங்கே அடைந்து, நெடுநாள் வாழ்ந்து, இறுதியில் தமக்குரிய உலகை அடைவார்கள். ஆகையால் யாவரும் தத்தமக்கு உரிய ஒழுக்கத்தில் நிலை நிற்பதே சிறப்பாகும். யாவராயினும் எந்தப் பொருளையும் விரும்பலாகாது. எத்தகைய மாதவத்தையும் அத்தகைய இச்சையே கெடுத்து விடும். அவாவை ஒழித்து பற்றற்றவர்களே பேரறிஞர்களாவர்! என்று திருமால் திருவாய் மலர்ந்தருளினார்.

## 2. சிறந்த பிறவியும் மூன்று ஆசைகளும்

ஸ்ரீமந் நாராயணமூர்த்தி கூறியவற்றை, கருடன் மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான்.

பிறகு ஸ்ரீ வாசுதேவன், கருடனை நோக்கிக் கூறலானார்:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவைகளுக்கு அரசே! உலகில் எண்பத்து நான்கு லட்சம் யோனி பேதங்கள் உள்ளன. அவை அண்டசம், உற்பிசம், சராயுசம், சுவேதசம் என்று நான்கு வகையில் உள்ளன. அந்த நான்கு வகையில், அண்டஜம் என்ற வகையில் முட்டையில் இருந்து இருபத்தோரு லட்சம் பறவைகள் முதலியன தோன்றின. பூமியினின்று தோன்றினவாகிய உற்பிச வகையில் இருபத்தோரு லட்சம் மரஞ், செடி, கொடி முதலிய தாவர வகைகள் தோன்றின. கருப்பப்பையில் இருந்து தோன்றுவதான சராயுசம் என்ற வகையில் இருபத்தோரு லட்சம் மனிதர் முதலானவர்கள் தோன்றினர். வேர்வையில் இருந்து தோன்றுவதான சுவேதசம் என்ற வகையில் இருபத்தோரு லட்சம் கொசு முதலியவைகளும் தோன்றியுள்ளன. கருடா! பிறவிகள் அனைத்திலும் மானுடப் பிறவி கிடைப்பது அரிதினும் அரிது. அந்த மனிதப் பிறவியே புண்ணியப் பிறவியாகும். பொருள்களைப் பார்ப்பதற்குரிய கண்களும், விஷயங்களைக் கேட்பதற்குரிய காதுகளும், இனிமையை உணர்வதற்குரிய நாக்கும், வாசனைகளை அறிவதற்குரிய நாசியும் காமவின்பந் துய்ப்பதற்குரிய மெய்யும் (உடம்பும்) நன்மை தீமைகளைப் பகுத்து உணர்வதற்கு உணர்வும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதால், மானிடப் பிறவியே சிறப்புடையது. அம் மானிடரில் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு ஜாதியர் உள்ளனர். ஆடைகளை வெளுக்கும் வண்ணாரும், தோல் தைப்பவரும், நாட்டியமாடுவோரும், ஓடம் விடுவோரும் கம்மாளரும், நுளைஞரும், வேடரும் ஆகிய இவர்கள் சூத்திர ஜாதியிலும் அடுத்த ஜாதியராவர். உணவு, உறக்கம், அச்சம், புணர்ச்சி ஆகிய இவை அனைத்தும் எல்லா உயிரினங்களுக்கும் உரியதான இயற்கையாகவுள்ளன. ஞானம் மட்டும் எல்லா உயிர்களுக்கும் பொதுவானதல்ல.

சில தேசங்களில் மக்கள் ஒரே காலுடையவராகவும் சில தேசங்களில் இரண்டு கால்களையுடையவராகவும் சில தேசங்களில் அநேகம் கால்களையுடையவராகவும் இருக்கிறார்கள். கிருஷ்ணசாரம் என்ற கறுப்பு நிறமுடைய மான்கள் எந்தப் பூமியில் வசிக்கின்றனவோ அந்தப் பூமியே புண்ணிய பூமியாகும். அந்தப் பூமியில் தேவர்களையும் முனிவர்களையும் பிதுர்க்களையும் பூஜிப்பவர்களுக்கு நன்மைகள் மிகவும் உண்டாகும். அந்தப் புண்ணிய பூமியிலே தான் முப்பத்து முக்கோடி தேவர்களும் எப்போதும் சாந்நித்தியமாக இருப்பார்கள்.

கருடனே! பூதப் பிரேத, பைசாசாதிகளில் ஆவியுருவம் மட்டுமேயுண்டு. அவற்றில் தேகம் பெற்ற ஜீவர்கள் சிறப்புடையவர்கள். அந்த ஜீவர்களில் பசு, பக்ஷிப் பிறவிகளெடுத்து, சிறிது அறிவோடு ஜீவிக்கும் தேகிகள் சிறப்புடையன. அவற்றைவிட மனிதர் சிறப்புடையவர்கள். அம்மானிடருள்ளும் பிராமணர்கள் மிகவும் சிறப்புடையவர்கள். அப்பிராமணர்களிலும், உபசார வாழ்க்கை நடத்தாமல், லௌகீக அகடவிகட சாமர்த்தியச் சழக்குகளில் ஈடுபடுவதை விட்டு விட்டு வேதார்த்தங்களை உள்ளபடி கற்றுணர்ந்தவர்கள் சிறப்புடையவர்கள். அவர்களையும் விட தாம் உணர்ந்த வழியிலேயே நிலையாக நிற்பவர்கள் இன்னும் சிறப்புடையவர்கள். பிரம்மஞானம் அடைந்தவர்கள் இன்னும் அதிகச் சிறப்புடையவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கருடா! பல கோடிப் பிறவிகளாலேயே அடையப்படுவனவாகிய சுவர்க்கமோட்சங்களை அடைவதற்கு மானுடப் பிறவியே காரணமாக இருக்கிறது. அத்தகைய மானுடப் பிறவியை அடைந்து, நல்ல வினைகளைச் செய்து நல்ல உலகத்தை அடையாமல், நரகலோகத்தில் தள்ளக்கூடிய தீய செயல்களையே புரிந்து அத்தகைய உயர்ந்த மானிடப் பிறவியையே வீணாக்குபவர்கள் தான் மிகப்பலராக இருக்கிறார்கள். புண்ணியத்தால் அடைந்த அந்த மானுடப் பிறவியால், பாக்கியம் அடையாதவர்கள், தமக்குத் தானே வஞ்சனை செய்து கொள்பவர்களாவார்கள்.

மண் ஆசை, பெண்ணாசை, பொருள் ஆசை எனப்படும் இம்மூன்று ஆசைகளால், மயக்கமுற்று செய்யத் தகாதவற்றைச் செய்து, தன் மனச்சாட்சிக்கும் மனிதாபிமான உணர்வுக்கும் மாறுபாடான தீயச் செயல்களைச் செய்து தர்மங்களை அறியாமல் உழல்பவன் எவனோ, அவன் மிருகங்களுக்கு ஒப்பாவானேயல்லாமல், தன்னைப்போன்ற மனித வர்க்கத்தினரோடு ஒப்பிடத்தக்கவனல்லன். அவனை விடத் தீயவன் ஒருவனுமிரான். ஆசைப்பெருக்கத்தால் ஆசையானது பேராசையாகுமே அல்லாமல், அறிவுணர்வும் அன்புணர்வும் அறநெறி வாழ்வும் வளராது, பேராசையால் பிணிக்கப்பட்ட மனிதன், தன் பேராசை மிக்க மனத்தாலேயே, இவ்வளவு அவ்வளவென, அளவு எதுவுமில்லாமல் யாவுமே நிறையக் கிடைத்தாலும் 'இன்னும் வேண்டும்', 'இதைவிட அதிகம் வேண்டும்' என்று அலையாய் அலைவானே தவிரத் தனக்குக் கிடைத்ததைக் கொண்டு ஒருபோதும் திருப்தியடைய மாட்டான்.

அத்தகையவனுக்கு ஒரு நூறு பொன் கிடைத்தால் அதைக் கொண்டு திருப்தியடைந்துவிட மாட்டான். ஆயிரம் பொன் வேண்டும் என்று இச்சிப்பான். அந்த இச்சைக்காக அறநெறிகளை மீறுவான், மனச்சாட்சியை மீறுவான், இந்நிலையில் அவனுக்கு ஆயிரம் பொன் கிடைத்தால், அதோடும் திருப்தியடைய மாட்டான். ஆயிரம் பொன் அடைந்தவன் லட்சம் பொன்னை இச்சிப்பான். லட்சம் பொன் அடைந்தவன் கோடிப் பொன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இச்சிப்பான். கோடிப் பொன் அடைந்தவன் ஒரு தேசத்தின் பகுதியைத் தனதாக்கிக் கொள்ள இச்சிப்பான்.

பிறகு அரசனாக விரும்புவான். அரசனான பின், புவி முழுதுக்கும் ஏகச் சக்கராதிபதியாக விரும்புவான். அவ்வாறு சக்கரவர்த்தியான பிறகோ அப்போதும் ஆசை விடாமல் தேவனாக வேண்டுமென இச்சிப்பான். தேவனானவுடன் தேவேந்திரன் ஆவதற்கு இச்சிப்பான். இவ்விதமாக இச்சையானது மேலும் மேலும் பெருகுமே அன்றி, ஓர் அளவோடு அது நிற்பதில்லை. இந்த இச்சையானது பொருள் ஆசையாக இருப்பது மண்ணாசையாக மாறும், மண் ஆசை வளர வளரப் பெண்ணாசை வளரும். பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை ஆகிய இம் மூன்றும் மனதில் பெருகப் பெருக அவன் மனிதத் தன்மையை இழந்துவிடுவான் குழப்பத்துக்கு ஆளாவான். அறிவு சரிவர வேலை செய்யாமல், ஆசையுணர்வே அதிகமாவதால், தன்னாசை நிறைவேற, தான் அடைய இச்சிக்கும் பொன்னுக்கும், மண்ணுக்கும், பெண்ணுக்குமாகச் சுயநலக்காரனாக மாறுவான். அக்கிரமக்காரனாக, பலருக்குத் துரோகம் செய்து தன் ஆசைகளை நிறைவேற்றுவதில் வெறியனாகி விடுவான். அவனது ஆசைகள் வளருகிற அந்த அளவுக்கு அவன் வாழும் காலம் நீடிப்பது இல்லை.

மேலும், இத்தகைய இச்சையை ஒழிக்காதவன் கண்டவருக்கெல்லாம் கரங்குவிப்பான். பிறரால் இகழப்படுவான். இறுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்த பிறகு, நரகத்துக்கே ஆளாவான். 'கொடிய கேடுகள் ஒருங்கே அடைவதற்கு ஆசை எனப்படும் இந்த அவாவே காரணம்!' என்றும் 'ஆசையே அழிவுக்குக் காரணம்' என்றும் போதிக்கும் மகான்களோ, யாவராலும் போற்றப்பட்டு, தம் இறுதி நாளான அந்திம காலத்தில் சுவர்க்க லோகத்தை அடைவார்கள், புலன்கள் சென்ற வழியில் மனதைச் செல்ல விடாமல், மனதையடக்கிச் சுதந்திரமாக எவன் ஒருவன் இருக்கிறானோ, அவனே எல்லா வகையான நன்மைகளுக்கும் உரியவனாவான். சுதந்திரம் இல்லாதவன், பாலிய பருவத்தில் தாய் தந்தையரது சொற்கேட்பவன், யௌவனப் பருவத்தில் மோக்ஷ ஸ்திரீக்கு மூதேவியாகியவளின் கட்டளைக்குப் பணிந்து அவள் கட்டளைகளை தலைமேல் தூக்கி நடப்பவன், வயோதிகப் பருவம் வந்ததும் தன் புத்திரர், பௌத்திரர்கள் துணிந்து 'கிழப் பிணமே வாய்திறவாமலே வெறுமனே விழுந்துகிட' என்று இழித்தும் பழித்தும் அதட்டியும் பேசும் ஏச்சு மொழியைக் கேட்டு, மனம் பொறுமிக் கிடப்பான். ஆகையால், கல்வியும் வித்தையும் கற்றுணர்ந்தவனே ஆனாலும் ஞானம் (மெய்யறிவு) இல்லாவிட்டால் பெண்ணைப் போல என்றுமே சுதந்திரம் இல்லாதவனாகக் கிடப்பான்!

'கருடனே! கேட்பதாலும் ஸ்பரிச உணர்வினாலும் பார்வையினாலும் நாவின ருசியாலும் முகரும் நாசியாலும் நாசமடைவதற்கு எத்தனையோ உதாரணங்கள் இருக்கின்றன! புள்ளிமானானது, புல்லாங்குழலின் இசையைக் கேட்டு மயங்கித் தான் இருக்குமிடத்தை விட்டு அசையாமல் இருந்து, வேடனாற் பிடிக்கப்படுவதால், , அந்தப் புள்ளிமான் காதால் கெடுவதாகும். புணர்ச்சியை விழைந்த ஆண் யானை ஒரு பெண் யானையைப் பின் தொடர்ந்து சென்று, யானை வேட்டைக்காரர்கள் தோண்டிய படுகுழியில் விழுவதால், அந்த யானை ஸ்பரிச இன்பத்தால் கெடுவதாகும். விட்டிற் பூச்சிகள் மழைக் காலத்தில் எரியும் விளக்கைக்கண்டு, கனிந்திருக்கும் நல்லதொரு கனி என்று நினைத்து, அதில் பாய்ந்து விழுந்து, எரிகின்ற விளக்கின் ஜீவாலையில் விழுந்து எரிந்து தீய்ந்து போவதால் அது கண் பார்வையால் கெடுவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனீக்கள் தேன் சுவையை விரும்பித் தம் கூட்டிலே தேனைச் சேர்த்து அதில் தங்கியிருக்கும் போது தேன் சேகரிக்கும் வேடர்கள் தீயால் கொளுத்தி தேனீக்களை விரட்டியும் சாகடித்தும் தேனைக் கவர்ந்து செல்வதால் அத்தேனீக்கள் நாவால் கெடுவனவாகும். தூண்டில் முள்ளின் முனையில் கோர்த்த மண்ணுள்ளிப் புழுவின் இறைச்சியின் நாற்றத்தை விரும்பிய மீன், அதைப் பற்றியிழுத்து, தூண்டில் முள் நெஞ்சில் செருகி துடிதுடித்து மடிவதால் அந்த மீன் நாசிப்புலனால் கெடுவதாகும்.

கருடா! இவ்வாறு ஓர் இந்திரிய உணர்வினாலேயே ஒவ்வோர் ஜீவராசிகள் நாசம் அடையும் போது பஞ்ச இந்திரிய இச்சைகளையுடைய மனிதன் அடையக்கூடிய கேடுகள் கொஞ்சமாக இராது என்பதில் சந்தேகமும் உண்டாக முடியுமா? இல்லற வாழ்வின் சுக துக்கங்களில் எது அதிகமாயினும், பெண்டு பிள்ளைகள் அதிகமாகிப் பந்த பாசத்தால் கட்டுண்ட மனிதன் நிம்மதியடைய மாட்டான். பாலியனாயினும் யுவனாயினும் விருத்தனாயினும் நாட்கள் கழிந்து செல்வதையே கணித்துக் கொண்டிருக்கும் 'மிருத்யு' (மரண தேவன்) என்று ஒருவன் இருக்கத்தான் இருக்கிறான். அவன் இருப்பதை உணர்ந்து நடப்பவன் தான் இல்லை.

உலகில் மனிதன் பிறந்து பிறந்தே இறக்கிறான். யாரிடமும் சொல்லாமல் கேளாமல் வந்து பிறப்பதைப் போலவே, பெண்டு பிள்ளைகள், உற்றார் உறவினர்கள், பொருளாசையால் தேடிய பொருள், மண்ணாசையால் தேடிய மனை, மாளிகை ஆகிய அனைத்தையும் விட்டு, உற்றோரும் உறவினரும் பெற்றவர்களும் பார்த்திருக்கச் சொல்லியது சொல்லாமலேயே மனிதன் மாண்டு விடுகிறான். பெற்றோர்கள், பெண்டு பிள்ளைகள் ஆகியவர்களில் ஒருவரும் தனக்குத் துணையில்லாமல், ஒருவனாகவே, அவன் எப்படிப் பூமியில் தனியனாகப் பிறந்தானோ, அப்படியே அவன் மட்டுமே தனியனாகவே மடிந்து போகிறான்.

ஒருவன் இறந்தவுடன், அவன் உடலைக் காஷ்டம் போலப் பூமியில் கிடத்தி, உற்றாரும் உறவினரும் எல்லோருமாகச் சேர்ந்து ஆ, ஊ என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுது ஆற்றுவார்கள். அவ்வாறு அவர்கள் அழுது புலம்புவதால் செத்தவன் அடையும் பயன்தான் என்ன? பொய்யான பத்திரங்கள் எழுதுதல், பொய் சொல்லுதல் ஏமாற்றுதல் வழிப்பறி செய்தல், கொலை புரிதல் முதலிய தீய தொழில்களைப் புரிந்து ஒருவன்



பொருளைச் சம்பாதிக்க, அவனைச்சார்ந்த அனைவருமே அவன் சம்பாதித்த பொருள்களை உரிமையுடன் அனுபவிப்பார்கள். பொய் ஓலை எழுதலாகிய அத்தகைய தீய செயலைச் செய்ததால் வருகின்ற கொடிய பாவத்திலும், பொருள்களை அனுபவிப்பவர்களுக்குப் பங்கு ஏதேனும் உண்டோ என்றால், ஒரு சிறிதும் இருப்பதில்லை. அவர்கள் பாவத்தின் பயனில் பங்கு கொள்வதில்லை. அந்தப் பாபச் செயலைச் செய்து பிறர் பொருளையோ உரிமையையோ அல்லது உழைப்பையோ, கவர்ந்தவன் யாவனோ, அவன் ஒருவனே, அந்தப் பாவம் முழுமைக்கும் பாத்தியமுடையவனாகி, தீய நரகத்தை அடைவான்.

அவ்வாறு, தீய தொழில்களைச் செய்து அவன் ஈட்டிய பொருளாவது அவன் மாண்ட பிறகு அவனோடு செல்லுமோ என்றால், அதுவும் கொஞ்சங்கூடச் செல்லாமல், அவனை விட்டு விட்டு, அவன் வீட்டிலேயே தங்கி விடும்! உறவினர் முதலியவர்களும் அவனது சவத்தோடு, மயானம் வரை சென்று விட்டு, உடனே தம் வீடு மீண்டு விடுவார்கள். இறப்பதற்கு முன்பு அவனவன் செய்த புண்ணியங்களே மயானத்தையும் தாண்டி அவனவனுடன் செல்வனவாகும். எனக்கு பக்தனாகித் தொண்டு புரியும் செந்தண்மை பூண்ட அந்தணனுக்கு எந்தப் பொருள் கொடுக்கப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லையோ, அந்தப் பொருள், அதை உடையவனுக்குச் சொந்தமல்ல. உலோபியிடம் இருக்கும் பெரும் பொருள், ஐயகோ! நாம் நல்ல அந்தணர்களின் கையில் கொடுக்கப்படவில்லையே! தீர்த்த யாத்திரைகளுக்கும், தல யாத்திரைகளுக்கும் நாம் பயன்படவில்லையே! புண்ணியச் செயல்களுக்குப் பயன்படுத்தப்பட வில்லையே! கிருமிக் கூடாகி உடலானது அநித்தியமாயிற்றே! மலக் குடலாகிய மனித உடல் எரிந்தோ அழிந்தோ போகக் கூடியதாயிற்றே! நம்மை வைத்திருக்கும் உலோபி இந்த உண்மையை அறியாமல் இருக்கிறானே! அவன் இறந்த பிறகு நம்மை வேறு எவன்தான் கவர்ந்து செல்வானோ? அவன் ஒருங்கே கவர்ந்து நம்மை எந்த விலை மகள் கையிலே கொடுப்பானோ என்று கதறும்.

பூர்வ ஜன்மத்தில் தானதர்மங்களைச் செய்தவனே, மறு பிறவியில் மஹாபாக்கியவானாகிறான். ஆகையால், அந்த ஜன்மத்திலும் அவன் தான தர்மங்களைச் செய்தால், அதற்கடுத்த பிறவியில் அதிக தனவானாக இருப்பான். எவன் ஒருவன், தானதர்மங்களைப் பக்தி சிரத்தையின்றிச் செய்தாலும் அந்தத் தானதர்மங்களைச் செய்தவனாக மாட்டான். தான தர்மங்களைப் பக்தி சிரத்தையோடு செய்பவன் தான் எண்ணியவற்றை எல்லாம் எண்ணியவாறே எய்துவான். அரும்பெரும் பேறான மோக்ஷமும் அவனுக்குக் கிடைக்கும். பக்தி சிரத்தையோடு செய்யப்படும் தருமமோ தானமோ தினையளவே சிறிதாக இருந்தாலும் மலையளவு பெரிய நன்மையைத் தரும்.

ஒரு பொருளும் இல்லாத முனிவர்களெல்லாம் தம் நல்ல மனம் நற்செய்கைகளாலேயே நிரதிசய இன்ப வீடாகிய எம்முலகை அடைகிறார்கள். ஆகையால் உள்ளத் தூய்மையும் பக்தியும் இல்லாமல், தானம், தவம், தருமம் முதலியவற்றைச் செய்தாலும் அவை ஒரு சிறிதும் பயன்படாமற் போய்விடும். முக்திக்குச் சாதனமான பரம பக்தியையாவது பிரபக்திமார்க்கம் எனப்படும் தேவ சேவைகளை (திருத்தொண்டுகளையாவது) செய்வதும் தான தர்மங்களைச் செய்வதுமே உத்தமமாகும்! இவ்வாறு ஸ்ரீ நாராயணர் உணர்த்தியருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. பிரேத ஜன்மம் நீங்க வழி

பெரிய திருவடியான கருடாழ்வான், ஸ்ரீமந் நாராயண பகவானைத் தொழுது, 'வைகுண்ட நாதரே! மனிதர்களுக்கு மிகவும் கொடியதான பிரேத ஜன்மம் வராமல் ஒழியும் மார்க்கம் எது என்பதை தேவரீர் தயவுசெய்து கூறியருள வேண்டும். என்று பிரார்த்தித்தான். சர்வாந்தர்யாமியான ஸ்ரீமந் நாராயண பகவான் கருடனை நோக்கிக் கூறலானார்:


ஓ கருடா! மனிதர்கள் இறந்தவுடன் செய்ய வேண்டிய கருமங்களைப் பற்றிக் கூறுகிறேன். கேட்பாயாக.

பிரேத ஜென்மத்தை நிவர்த்திக்க விரும்பிய யாவரும் தாம் இறப்பதற்கு முன்னதாகவே தமது கையாலேயே விருஷோற்சர்க்கம் செய்தல் வேண்டும். ஐந்து வயதுக்கும் மேற்பட்ட யார் இறந்தாலும் அவர் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, அவருக்கு பிரேத ஜன்மம் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு, கர்மம் செய்பவன் விருஷோற்சர்க்கம் செய்தல் அவசியம். பிரேத ஜன்மம் வராமல் இருப்பதற்கு இந்தக் கருமத்தைத் தவிர வேறு கர்மங்கள் செய்வதற்கில்லை. உயிரோடு இருக்கும்போதோ, இறந்த பிறகோ யாருக்கு விருஷோற்சர்க்கம் செய்யப்பட்டதோ, அவனுக்குப் ஜன்மம் வருவதில்லை. இந்த விருஷோற்சர்க்கம் செய்யாமல், வேறு எந்த வகையான தான தர்மங்களைச் செய்தாலும் விரதங்களை அனுஷ்டித்தாலும், வேள்விகளைச் செய்தாலும் பிரேத ஜன்மம் பீடிக்காமல் ஒழியாது' என்று திருமால் திருவாய் மலர்ந்தருளினார்.

கருடன் அவரை வணங்கி, 'பகவானே! இந்த விருஷோற்சர்க்கம் என்பதை ஒரு மனிதன் இறப்பதற்கு முன்பாயின் எந்தக் காலத்தில் செய்யவேண்டும்? இறந்த பிறகாயின் எச்சமயத்தில் செய்ய வேண்டும்? அதனால் ஏற்படும் பயன் என்ன? அதைத் தயவு செய்து சொல்லியருள வேண்டும் என பிரார்த்தித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதற்கு அடியார்க்கு எளியவரான கருணையங் கடவுள், கருடனை நோக்கி, கருடனே! இறந்தவனைக் குறித்து விருஷோற் சார்க்கம் என்பதைச் செய்யாமல், சிரார்த்தம் முதலிய எதைச் செய்தாலும் அவற்றால் எவனுக்கும், பயன் ஏதும் ஏற்படாது. அவனுக்கு அவன் உயிர் நீங்கிய பதினொன்றாம் நாளன்று விருஷோற்சர்க்கம் செய்யப்படவில்லையோ, அவனுக்குப் பிரேத ஜன்மம் நிச்சயமாக ஏற்பட்டே தீரும். அது உறுதி. விருஷோற்சனம் செய்யப்பட்டால், இறந்தவன் பிரேத ஜன்மத்தை அடையாமல், பெரியோர்கள் அடைகின்ற உலகத்தை அடைவான். முக்தி தரும் ஷேத்திரங்களில் ஏதாவது ஒன்றில் இறந்தவன், எமனால் பீடிக்கப்படாமல், நல்ல உலகத்தை அடைவான். விருஷோற்சனம் எவனுக்குச் செய்யப்பட்டதோ, அவனும் அத்தகைய உலகையடைவான். புத்திரனாவது, மனைவியாவது, பெண் வயிற்றுப் பிள்ளையாவது பெண்ணனாயினும் விருஷோற்சனம் செய்யலாம். இறந்தவனுக்குப் புத்திரன் இருப்பானாயின், அந்தப் புத்திரன் மட்டுமே விருஷோற்சனத்தைச் செய்ய வேண்டும். வேறு யாரும் அதைச் செய்யலாகாது என்று கூறினார்.

அதைக் கேட்டதும் கருடன் அவரை வணங்கி, ஸ்ரீ வாசுதேவா! புத்திரன் முதலிய உரியவர் ஒருவரும் இல்லாதவனும் இல்லாத பெண்ணுமாக இருந்து ஒரு நபர் மடிந்தால், அந்த நபருக்கு உரிய உத்திரக் கிரியைகளை யார் செய்ய வேண்டும்? இந்த விஷயத்தைப் பற்றித் தெளிவாகக் கூறியருள வேண்டும் என்று விண்ணப்பித்தான். அதற்கு ஸ்ரீமந் நாராயணர், கருடனே! பிள்ளையில்லாமல் இறந்தவன். நரகத்தையடையாமல் நல்லுலகை ஒருபோதும் அடையமாட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகையால், எத்தகைய அரிய கர்மத்தைச் செய்தாகிலும் ஆண் மகன் ஒருவனைப் பெற்றுக் கொள்ள வேண்டும், ஒருவன் தனக்காக நல்வினை எதையுமே செய்து கொள்ளாமல் இறந்தாலும் கூட அப்படி இறந்தவனுக்கு அவனுடைய புத்திரர்கள் கிருத்தியங்களைச் செய்யாமல் விட்டு விட்டாலும் அவன் இரவு பகலாக, பசியோடும் தாகத்தோடும் ஐயையோ! ஐயையோ என்று கூச்சலிட்ட வண்ணம் உலகமெங்கும் நெடுங்காலம் வரை அலைந்து திரிந்து, பிறகு புழுக்கள், கிருமிகள் முதலியவற்றின் ஜன்மங்களை எடுத்து, மீண்டும் மனித ஜாதியில் கடையோன் வயிற்றில் பிறந்து பிறந்து மரிப்பான்''

ஆகையால் ஒரு மனிதன் வியாதியால் பீடிக்கப்படுவதற்கு முன்பும், வயோதிகத்தை அடைவதற்கு முன்பும், செயல்கள் ஒடுங்கிப் போவதற்கு முன்னரும் தான் நல்லுலகை அடைய வேண்டியதற்குரிய நல்வினைகளைச் செய்யத் தெரிந்தவன், அத்தகைய நற்கர்மங்களைச் செய்யக் கடவன். அவ்வாறு செய்யாமல், பிறகு செய்து கொள்வோம் என்று ஆலோசிப்பானாயின், அது தீப்பற்றி வீடு எரியும்போது, அதை அணைக்க அந்த நேரத்தில் கிணற்றைத் தோண்டும் முயற்சியில் ஈடுபடுவதை ஒக்கும் என்று கூறினார்.

## 4. தான தருமங்களும் விருஷோற்சனமும்

வேத வடிவினனாகிய கருடன் சர்வலோக நாதரான ஸ்ரீமந் நாராயணனை வணங்கி, 'ஹே, பரமாத்மா ஒருவன் மனத் தூயமையோடு, தானதர்மங்களைத் தன் கையாலேயே செய்வானாயின் அதனால் அவன் அடையும் பயன் என்ன? அவனுக்காக அவனுடைய மகன் முதலியோர் தானதர்மம் செய்வார்களானால் அதனால் உண்டாகும் பயன் என்ன? தான தர்மம் செய்யும்போது முறை தவறாகச் செய்தால் ஏற்படும் பயன் என்ன? இவற்றைத் திருவாய் மலர்ந்தருள வேண்டுகிறேன்!' என்று விண்ணப்பஞ் செய்ய, பாம்பணையில் துயிலும் பரமாத்மா கூறலானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருடனே! மனத் தூய்மையில்லாமலும் மனவுறுதி இல்லாமலும் செய்யப்படும் நூறு கோதானங்களுக்கு எத்தனை பயன் உண்டோ,அத்தனைப் பயனும் சித்த சுத்தத்தோடு சாஸ்திரங்களில் விதித்த வண்ணம் ஒரு பசுவைத் (தானம் வாங்குவோரும் நல்லவராக இருக்க வேண்டும்) தானஞ் செய்தாலும், அத்தானத்தால் உண்டாகி விடும். ஒருவன் இறந்த பிறகு அவனைக் குறித்துச் செய்யப்படும் லட்சம் கோதானங்களுக்கு என்ன பயனோ, அத்தனைப் பயனும் அவன் இறக்கும் காலத்தில் செய்யும் ஆயிரங் கோதானத்தாலேயே கிட்டி விடும். ஆகையால்தான், கருடனே! ஒருவன் தனது மரண காலத்திற்குள்ளேயே கோதானம் முதலிய சிறந்த தானங்களைச் செய்வது மிகவும் நல்லது என்பதைத் தெரிந்துகொள்.

தானமும் நல்லதாக இருக்க வேண்டும். தானம் வாங்குவோரும் நல்லவராக இருக்க வேண்டும். தானம் கொடுக்கப்படும் இடமும் நல்லதொரு ஷேத்திரமாக இருக்க வேண்டும். தானம் கொடுப்பவனுடைய மனமும் தூய்மையானதாக இருக்க வேண்டும். இவையனைத்துமே ஒருங்கு சேர்ந்து விட்டால், அது ஒரு கோடிப் பயனைத் தரும். கற்றுணர்ந்த சான்றோருக்குக் கொடுக்கப்படும் தானம், நாளுக்கு நாள் விருத்தியடையும். தானத்தை வாங்கிக் கொள்பவர் உத்தமராக இருந்து விட்டால், தானம் கொடுப்போனுக்கு அதிகப் புண்ணியமுண்டாகும். விஷத்தைப் போக்கும் மந்திரமும், குளிரைப் போக்கக் கூடிய அக்கினியும் தத்தமது சக்திகளைத் தத்தமது செயலால் இழந்து விடுவதுமில்லை. அந்தச் சக்திகள் குறைவதுமில்லை. அதுபோலவே, தானம் வாங்கும் உத்தமரும் அவருடைய நற்கருமத்தாலும் நல்லொழுக்கத்தாலும் குற்றமற்றவராவர்.

உத்தமப் பயனையடைய விரும்புவோன் கோதானம் முதலிய தானங்களைச் செய்யும்போது வேத சாஸ்திரங்களை ஓதியுணர்ந்த செந்தண்மை பூண்ட அந்தணனான உத்தமனுக்கே கொடுக்க வேண்டும். வேத சாஸ்திரங்களை ஓதாமலும், ஒழுக்க வழியில் நில்லாமலும் பிராமணன் என்ற பெயரை மட்டும் கொண்டவனுக்குக் கோதானம் கொடுத்தால், அந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோதானமே தானங்கொடுத்தவனுக்கு நரகத்தைக் கொடுக்கும். மேலும் தானம் வாங்குவதற்கே தகுதியில்லாதவன் தானம் வாங்குவானாயின் அவன் இருபத்தோரு தலைமுறை உள்ளவர்களோடு நரகம் புகுவான். ஒரு பசுவை, ஒருவனுக்கு மட்டுமே தானம் கொடுக்க வேண்டும். எப்போதாயினும் ஒரு பசுவைப் பலருக்குத் தானமாகக் கொடுக்கக் கூடாது. அப்படிக் கொடுத்து, அந்தத் தானத்தை வாங்கியவர் அதை விற்று அந்தத் தொகையைப் பங்கு போட்டுக் கொண்டாலும் ஒருவர் ஒரு மாதம் வைத்திருப்பது, மற்றொருவர் அடுத்த மாதம் வைத்திருந்து அனுபவித்துக் கொள்வது என்று விதித்து கொண்டாலும், தானம் கொடுத்தவன் தனது தலைமுறையினரோடு நெடுங்காலம் நகரத்தில் வாசஞ் செய்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதுக்களிடம் நல்ல பொருள்களைப் பக்தி சிரத்தையோடு தானங் கொடுப்பவன், அந்தப் பிறவியிலாவது மறு பிறவியிலாவது அதற்குரிய நற்பயனைச் சந்தேகமின்றி அடைவான். அந்தப் பயன். பெட்டியில் வைத்துப் பூட்டிய பொருளாகவே நினைக்கத்தக்கது. அதிகத் தனம் உடையவன் இறந்த பிறகு அவனது பிள்ளைகள் அப்பனுக்கென்று பக்தியாகவும் சிரத்தையோடும் மனத் தூய்மையோடும் செய்யும் கிருத்தியங்களால் அவன் அடையக்கூடிய நல்லுலகை விட மேலானதாகிய உலகத்தைப் புத்திரன் இல்லாதவனும் தரித்திரனுமாகிய ஒருவன் சொற்ப அளவுடைய தர்மத்தைத் தான் வாழுங் காலத்தில் தானே தன் கையால் செய்வானாகில் அடைந்து விடுவான்.



கருடனே! அயலூருக்குப் பயணம் செல்பவன் கட்டுச் சோற்றைக் கையிலே கொண்டு செல்வானாகில், எவ்வாறு வழியிலே பசியைப் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையே இல்லாமற் செல்வானோ, அவ்வாறே ஒருவன் உயிரோடு இருக்கும் காலத்தில் அன்னதானம் கோதானம் முதலிய தானங்களைத் தன் கையாலேயே செய்து விடுவானேயாகில் மரணமடைந்து செல்லும்போது பசி தாகம் எதுவும் அடையாமல் நல்லுலகைச் சேர்ந்து சுகிப்பான். கையிலே கட்டமுதைக் கட்டிக் கொள்ளாமல் செல்பவன் பசி தாகத்தால் வருந்துவதைப் போல, தான தர்மங்களை வாழுங் காலத்தில் தன் கையாலேயே செய்யாதவன் இறந்து செல்லும் போது வழியில் அதிகத் துன்பமடைவான்.

புனிதமான தலத்தில் புண்ணிய காலத்தில் செய்த நல்வினையாகிய நற்கருமம், நெய் பெய்த அக்கினி வளர்வதைப் போலப் பயனாக வளரும். புண்ணிய க்ஷேத்திரமில்லாத எந்த இடத்திலாயினும், புண்ணிய காலமல்லாத எந்தவொரு காலத்திலேனும் விருஷோற்சனம் செய்து, நல்ல ஒழுக்க சீலமில்லாத அந்தணனுக்குத் தானம் கொடுத்து விட்டாலுங்கூட அந்த விருஷோற்சனம் என்ற புண்ணிய கர்மத்தின் மகிமையால், உத்தம க்ஷேத்திரத்தில் உத்தம காலத்தில் உத்தமப் பிராமணனுக்குத் தானம் கொடுத்தால் என்ன பயன் உண்டோ, அந்தப் பலன் நிச்சயமாகக் கைகூடும். ஆகையால் ஒரு மனிதன் நற்கதியடைவதற்கு முதற் காரணமாக அமைவது விருஷோற்சனமேயாகும்.

கருடனே! இன்றிருப்போர் நாளை இருப்பார் என்று எண்ணுவது திடமில்லை. மனித உடல் அநித்தியமாகையால், நல்ல காரியங்களையும் நற்செயல்களையும் நாளை செய்துகொள்வோம் என்று நினைக்காமல் நற்கர்மங்களை நினைத்தவன்றே செய்வது நல்லது. புத்திர பாக்கியமுடையவன் தன் கையால் எந்தவொரு தருமத்தையும் செய்யாமல் இறப்பானேயாகில் நற்கதியடையமாட்டான். புத்திரனேயில்லாதவன் நல்வினைகளைச் செய்து மரிப்பானாகில் நற்கதியை அடைவான். யாகம் செய்வதையும் கோதானம் முதலிய சிறந்த தானங்களைச் செய்வதையும் விட விருஷோற்சனம் செய்வதே மிகவும் உத்தமமான நற்கருமமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை மாதத்துப் பௌர்ணமியிலாவது மற்றெந்தப் புண்ணிய தினத்திலாவது, உத்தராயண காலத்து சுக்கில பட்சத்திலாவது, கிருஷ்ண பட்சத்திலாவது, துவாதசியிலாவது தூய மனத்தோடு உத்தமமான திருத்தலத்தில் நல்ல திதி யோக நட்சத்திரத்தில், நல்ல முறையில் வேத சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த ஒழுக்கமுடைய அந்தணர்களை வருந்தி அழைத்து, சுபம் முதலியவற்றைச் செய்விக்க வேண்டும்.

மேலும் தன்னைத் தூய்மையாளனாகச் செய்து நவக்கிரகங்களையும் பூஜித்து, மாதுர்தேவதைகளை அர்ச்சனை செய்து, பூர்ணாகுதி கொடுத்து மஹாவிஷ்ணுவைக் குறித்து சிரார்த்தம் செய்து, மந்திர நீரால் ரிஷபக் கன்று ஒன்றை நீராட்டி, ஆடை ஆபரணம் கந்த புஷ்பங்களால் நன்றாக அலங்கரித்து, மேலும் நான்கு ஆண் கன்றுகளோடு அந்தக் காளைக் கன்றானது அக்கினியை வலம் வரச் செய்து, வடதிசை நோக்கி நின்று அந்த ரிஷபக் கன்றை நோக்கி, 'தருமமே நீயே ரிஷபமானாய்! பிரமனாலே ஆதியில் படைக்கப்பட்டாய்!' என்று சொல்லி இறந்தவனுக்காகத் தானஞ் செய்தால் அவனைக் குறித்தும், செய்பவன் தனக்கே செய்து கொள்வானாயின் தன்னைக் குறித்தும் அதன் வாலில் மந்திர நீர் விட்டு, அந்த நீரைத் தன் கரத்தால் ஏந்தி, தன் சிரசின் மீது, புரோக்ஷித்துக் கொண்டு. ஆண்கன்றுகளோடு அந்த ரிஷபக் கன்றையும் விட்டு விட வேண்டும்.

கருடா! இந்த விருஷோற்சனமானது இறந்தவனைக் குறித்துச் செய்யப்பட்டதேயானால், உடனடியாக ஏகாதிஷ்ட சிரார்த்தத்தைச் செய்துவிட வேண்டும். இறவாதிருப்பவன் தனக்குத் தானாகவே செய்து கொள்வானாயின் தனக்குப் பிரியமாக இருக்கும் நற்பொருள்களை அந்தணருக்குத் தானமாகக் கொடுக்க வேண்டும். விருஷோற்சனம் செய்யா விட்டால் பிரேத ஜன்மம் பற்றாமல் விடாது. ஆகையால் அந்த விருஷோற்சனம் செய்யாமலேயே, மற்ற நற்கருமங்களைத் தனக்குத் தானே செய்து கொண்டாலுங் கூட மரித்த பிறகு புத்திரர் முதலியவர்கள் பற்பல நல்வினைகளைச் செய்தும்கூட அவற்றால் எந்தவிதப் பயனுமில்லை என்று உணர்வாயாக. ஒருவன் மரித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினொன்றாம் நாளிலாவது சோடச சிரார்த்தத்தை சபிண்டி கரணத்துக்கு முன்னதாகவே செய்து, ததியாராதனம் செய்து பலதானமும் கொடுக்க வேண்டும். பருத்தியாடையின் மீது செம்பினால் வட்டில் செய்து வைத்து, அதில் சாளக்கிராமம் வைத்து, ஆடை முதலியவற்றால் அலங்கரித்து, ஆராதனை செய்து, நற்பிராமணனுக்கு அதையும் தானமாகக் கொடுக்க வேண்டும்.

வைதரணி என்ற நதியை தீத் துன்பமில்லாமல் கடக்கும் பொருட்டுக் கரும்பினால் ஓடஞ் செய்து, வெண்பட்டினால் அதைச் சுற்றி, நெய் ஊற்றிய வெண்கலப் பாத்திரத்தை அதனுள்ளே வைத்து, ஸ்ரீமந் நாராயணனை அர்ச்சித்து அந்த ஓடத்தைப் பிராமணனுக்குத் தானமாகக் கொடுத்தால் நலமுண்டு. 'கருடனே! எள், இரும்பு, பொன், பருத்தி, உப்பு, நவதானியங்கள் ஆகியவற்றையும் தவிர்க்காமல் தகுதி வாய்ந்த அந்தணருக்குத் தானமாகக் கொடுக்க வேண்டும். தானம் கொடுப்பவன் எளியவனாக இருந்தால், அவற்றில் ஏதேனும் ஒன்றைக் கொடுத்தாலும் போதுமானது. சக்தியை அனுசரித்துப் பொருள் கொடுத்துத் திலதானமும் சய்யாதானமும் செய்ய வேண்டும். இந்த இரண்டு தானங்களுக்கும் தட்சணையை அதிகமாகக் கொடுத்து அந்தணரை உவப்புடன் ஏற்கச் செய்ய வேண்டும். சய்யாதானம் வாங்கும் அந்தணனை இருக்கச் செய்து தானம் செய்வது சிறப்புடையது. புத்திரன் இல்லாமல் இறந்தவனுக்குப் பௌத்திரன் முதலியவர்களில் யாராவது செய்தால் நற்கதியுண்டாகும்.

தன் சக்தியை அனுசரித்து நித்தியதானம் செய்பவன் யாவனோ, அவன் தன் வாழ்வின் இறுதியில் நற்கதியை அடைவான். உடலானது திடமாக இருக்கும் போதே திருவணை முதலிய க்ஷேத்திராடனமும் கங்கை யாத்திரையும் செய்ய வேண்டும். தாய் தந்தையர் இறந்த பிறகு ஆண்டாண்டு தோறும் அவர்களுக்கு சிரார்த்தம் செய்ய வேண்டும். தாய், தந்தை, குரு முதலியவர்க்குத் தன்னால் இயன்ற புண்ணியத்தைச் செய்து கொடுக்க வேண்டும். கருடா! மரித்தவரைக் குறித்து கிரியைகளைச் செய்யும்போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணர்க்கு எவன் ஒருவன் பூரி (தக்ஷிணை) கொடுக்கிறானோ அவன் தான் வேண்டிய நல்லவைகளை எல்லாம் அடைந்து மகிழ்வான். அவன் பிரேத ஜன்மத்தை அடைய மாட்டான், யோகிகள், சந்நியாசிகள், துறவிகள் முதலியவர்கள் எந்த லோகத்தை அடைவார்களோ, அந்தப் புண்ணிய லோகம் அவனுக்குக் கிட்டி விடும். கருடா! ஒருவன் மரித்த பிறகு செய்ய வேண்டிய இக் கிரியை பற்றி உனக்கு ஒருவாறு கூறினேன் என்று கூறியருளினார்.

## 5. யமலோகத்திற்குப் போகும் வழி

ஸ்ரீ வேத வியாச முனிவரின் மாணவரான, சூதபுராணிகர் நைமிசாரணிய வாசிகளான மகரிஷிகளை நோக்கி, அருந்தவ முனிவர்களே! அதன் பிறகு, கருடாழ்வான், திருமகள் கேள்வனைப் பணிந்து வணங்கி, 'சர்வலோக நாயகா! யமலோகம் என்பது இங்கிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது? அதன் தன்மை யாது? அவற்றைத் தயை செய்து கூறியருள வேண்டும்' என்று கேட்கவும் கருணைக் கடலான கார்மேக வண்ணர், கருடனை நோக்கிக் கூறலானார்:

கருடனே! மனிதர்கள் வாழும் மானுஷ்ய லோகத்திற்கும் யமபுரிக்கும் இடையில் எண்பத்தாறாயிரம் காதம் இடை வெளியுள்ளது. அந்த யமலோகத்தில் வாழும் யமதர்ம ராஜனான கூற்றுவன், உலகத்தினர் ஒவ்வொருவருக்கும் ஆயுட்காலம் முடிந்ததும் ஜீவனைப்பிடித்து வரும்படியாகத் தன் தூதர்களிடம் கூறுவான். யாவுமே அஞ்சத்தக்க உருவத்தைபுடையவர்களும், கனலும் காயும் சினம் உடையவர்களும், பாசம், முசலம் முதலிய ஆயுதங்களைத் தரித்தவர்களும், கார்மேகம் போன்ற கறுப்பு நிற ஆடைகளை அணிந்தவர்களுமான மூவகைத் தூதர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவி யனுப்புவான். அவ் யமகிங்கரர்கள் மூவரும் சென்று, வாழ்நாள் முடிந்த ஜீவனைப் பாசத்தால் கட்டிப்பிடித்து, காற்றின் உருவமான தேகத்தில் அடைத்துக் கொண்டு, யமலோகத்திற்குச் செல்வார்கள். அங்கு சென்றதும் அந்த ஆவியுருவச் சீவர்களை, யமபுரிக்குத் தலைவனும் நாயகனுமான கால தேவனுக்கு முன்னால் அவிழ்த்து நிறுத்தி 'தர்மராஜரே! தாங்கள் இட்ட கட்டளைப்படி, வாழ்நாள் முடிந்த ஜீவனைத் தங்களது சந்நிதி முன்பு கொண்டு வந்து நிறுத்திவிட்டோம். இனி தாங்கள் ஆக்ஞைப்படி நடக்கச் சித்தமாக இருக்கிறோம் என்று கூறி ஒருபுறமாக ஒதுங்கி நிற்பார்கள்.

எருமைவாகனனாகிய யமதர்ம ராஜன் அத்தூதர்களை நோக்கி, 'ஏ கிங்கரர்களே! நன்று! நன்று! இந்தச் சீவனை மீண்டும் கொண்டு போய், வீட்டிலேயே விட்டு இன்றிலிருந்து பன்னிரண்டாம் நாள் கழிந்த பிறகு முறைப்படி அவனை மீண்டும் நம் திருச்சபை முன்பு கொண்டு வந்து நிறுத்துக! என்று கட்டளையிடுவான். உடனே யமதூதர்கள் ஒரு நொடி நேரத்திற்குள், அந்தச் சிவனைக் கட்டிப்பிடித்து, எண்பத்தாறாயிரம் காத வழி கடந்து வந்து அந்தச் சீவனின் இல்லத்திற்கே கொண்டு வந்து விட்டு விடுவார்கள். இது போல இறந்த ஜீவன், யமலோகத்திற்குச் சென்று மீண்டும் பூவுலகத்திலுள்ள அவனது இருப்பிடத்திற்கே மீண்டும் வருகின்றபடியால், இறந்தவனது உடலை உடனடியாக எரிக்கவோ அல்லது புதைக்கவோ செய்யாமல் சிறிது நேரம் கழிந்த பிறகே அவ்வாறு செய்ய வேண்டும்.

யம தூதர்களால் ஆவி யுருவில் பாசத்தால் கட்டுப்பட்டிருந்த ஜீவன், அவர்களால் அவிழ்த்து விடப்பட்டவுடன், வாயு வடிவமுடைய அந்த உயிர், சுடுகாட்டிலே, தன் சிதைக்குப் பத்து முழ உயரத்தில் ஆவி வடிவில் நின்று, திரும்பவும் புக முடியாதவாறு, தீப்பற்றிக் கொழுந்து விட்டு எரியும் தன் உடலைப்பார்த்து, 'ஐயகோ! அந்தோ! ஐயையோ! என்று ஓலமிட்டு அழும்! அதே ஜீவன் புண்ணியஞ் செய்த ஜீவனாக இருக்குமானால், 'இந்தவுடல் எரிந்து ஒழிந்ததே நல்லது!' என்று மகிழ்ச்சி அடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருடா! சிதையிலே தீமூட்டி எரியும் தீயிலே உடலானது எரிந்து வெந்து சாம்பலாகும் போது, தலையானது வேகும் வரையில், அந்தச் சிவனுக்குத் தன் உடல் மீதும், அந்த உடல் சம்பந்தப்பட்ட பொருள்கள், உறவு தொடர்பு ஆகியவற்றின் உள்ள ஆசையானது ஒழியாது. தீயிலே சிரசு முதல் பாதம் வரை தேகமெல்லாம் வெந்து சாம்பலானவுடனே சீவனுக்குப் பிண்டத்தாலான சரீரம் உண்டாகும். இறந்தவனின் புத்திரன் முதல் நாளன்று போடும் பிண்டத்தால் சிரசும், இரண்டாம் நாள் போடும் பிண்டத்தால் கழுத்துந்தோளும் மூன்றாம் நாள் பிண்டத்தால் மார்பும், நான்காம் நாள் போடும் பிண்டத்தால் வயிறும், ஐந்தாம் நாள் போடும் பிண்டத்தால் உந்தியும், ஆறாம் நாள் போடும் பிண்டத்தால் பிருஷ்டமும், ஏழாம் நாள் போடும் பிண்டத்தால் குய்யமும் எட்டாம் நாள் பிண்டத்தால் துடைகளும், ஒன்பதாம் நாள் அவன் போடும் பிண்டத்தால் கால்களும் உண்டாகி, பத்தாம் நாளன்று அவன் போடும் பிண்டத்தால் முழுதும் பூரணமாக உண்டாகும்.




ஜீவன் உடலைவிட்டுப் பிரியும் முன்பே, மனைவி மக்களோடு அவன் வாழ்ந்து வந்த வீட்டுக்கு வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டின் உள்ளே செல்லாமலே அந்த வீட்டின் வாசலில் நின்று. வீட்டுக்குள் போவோர். வீட்டில் இருந்து வெளியே வருவோர் களை பார்த்து, தாகத்தால் ஆ, ஆ என்று கதறிக்கொண்டு பதறி நிற்பான். அந்த ஜீவன் பிண்டவுருவைப் பெற்ற பதினொன்றாம் நாளிலும் பன்னிரண்டாம் நாளிலும் புத்திரனால் பிராமண முகமாய்க் கொடுக்கப்பட்டவற்றை உண்டு, பதின் மூன்றாம் நாளன்று யமதூதர்கள் யமதர்மனின் கட்டளைப்படி, அங்கு வந்து அந்தப் பிண்ட உருப்பெற்ற ஜீவனைப் பாசத்தால் பிணித்து கட்டிப் பிடித்து இழுத்துக் கொண்டு செல்ல, அவன் தன் வீட்டைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கதறிக் கொண்டே யமலோகத்தை அடைவான்.



கருடனே! பிண்ட சரீரம் பெற்று ஜீவன், யம கிங்கரர்களால் பாசத்தால் பிணைத்துக் கட்டப்பட்ட நிலையில், யமகிங்கரர்களோடு நாள் ஒன்றுக்கு இருநூற்றுப்பதினேழு காதவழி இரவும் பகலுமாக நடந்து செல்லவேண்டும். அவன் போகும் வழியில், கூரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்களையுடைய வாள் போன்ற இலைகளை உடைய ஒரு கானகத்தைக் கடந்து செல்ல வேண்டியிருக்கும். கருடா! மரங்கள் அடர்ந்த காடுகளில் செல்வது யாருக்கும் கடினமானது அல்லவா? சூரியிலைகளால் நிறைந்த வனத்தில் எவ்விதம் செல்வது? அக்காட்டின் ஊடே நடக்கும் பிண்ட ஜீவன் பசியாலும் தாகத்தாலும் மிகவும் வருந்தித் தவிப்பான் அவ்வாறு செல்லும் வழியில் அவன் படும் துன்பத்தை யார்தான் சொல்ல முடியும்? இது ஒருபுறம் இருக் கட்டும்.




வைவஸ்வத பட்டணம் என்ற ஒரு பட்டினமுண்டு. அந்தப் பட்டினம் உயர்ந்த மாளிகைகள் ஒன்றோடொன்று நெருங்கியதாகவும் யாவருக்கும் அச்சந்தரும் மிகவும் கோர ரூபமுடைய அநேகம் பிராணிகளுக்கு இருப்பிடமாகவும் துக்கத்தையே கொடுப்பதாகவும் அமைந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் செய்தவர்கள் மிகப் பலர். அந்த நகரத்திலிருந்து அண்டத்தின் முகடு கிழிய. எப்போதும் ஆ, ஆ, ஊ, ஊ என்று ஓலமிடுகிறார்கள். அங்கு வெப்பத்தால் கொதிக்கும் கொதிநீர் தான் காணப்படும் குடிப்பதற்கேற்ற ஒரு துளித் தண்ணீர் கூட அங்கு கிடைக்காது. மேகங்களெல்லாம் அருந்துவதற்கு அருகதையற்ற இரத்தம் முதலியவற்றையே பொழிவதாக இருக்கும். முன்பு இறந்த ஜீவன். பதின்மூன்றாம் நாளன்று யமபுரிக்குச் செல்வான் என்று சொன்னேன் அல்லவா? அவன் நிலையைக் கூறுகிறேன். கேள்.



குரங்கைக் கயிற்றால் பிணைத்து இழுத்துச் செல்வதைப் போல, யமகிங்கரர்கள் பத்தாம் நாள் பிண்டத்தாலான ஜீவனைப் பாசக்கயிற்றால் கட்டி இழுத்துக்கொண்டு செல்லும் போது, அந்த ஜீவன் தன் புதல்வனை நினைத்து, 'ஐயகோ! என் அருமை மகனே நான் கஷ்டத்தோடு அவதிப்படுகிறேனே! ஐயோ நான் என்ன செய்வேன் என்ன செய்வேன்? சர்வேசுவரன் ஒருவன் உண்டென்றும் சுவர்க்கம். நரகம் என்ற இடங்கள் உள்ளன என்றும் அவற்றிற்கும் செல்ல நன்னெறி தீயநெறி என இரு நெறிகள் உண்டென்றும் உலகில் உயிரும் உடலுங்கொண்டு நான் வாழ்ந்த காலத்தில் உலக மக்களின் பிறப்புக்கும் இறப்புக்கும் அதற்கப்பாலும் உள்ள வாழ்வுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதமானவற்றைச் சொன்னவர்களோடு முரண்பட்டு ஸ்ரீயப்பதி என்று ஒருவன் இருக்கிறானோ, கடவுள் இல்லாமல் மனிதன் வாழ முடியாதோ, மற்றவைகளும் உளவோ, இறந்த பிறகு இன்னவையெல்லாம் உள்ளன என்று கற்பனை செய்து மயக்கத்தால் பிதற்றுகிறீர்களே என்று வன்கண்மை



பேசி, சாதுக்களையும் ஞானிகளையும் பாகவத சந்நியாசிகளையும் ஏசிப்பேசிப் பரிகாசம் செய்தேனே! அவற்றின் பயனையெல்லாம் இப்போது நான் அனுபவிக்கிறேன்.

என் முயற்சியாலோ, என் உழைப்பாலோ, சக்தியாலோ, எதையும் செய்ய முடியாமல் தனியனாய்த் தவியாய்த் தவிக்கிறேனே! மலை போன்ற ஆயுதத்தால் யமகிங்கரர்கள் இரக்கமில்லாமல் என்னை அடித்துப் புடைக்கிறார்களே! அந்தோ! நான் பூமியில் வாழ்ந்த காலத்தில் பெரியோர்களுக்கு ஓர் உதவியுஞ் செய்தேன் அல்லேன் தீர்த்த யாத்திரைகள் செய்தேனல்லேன்! மாதவங்கள் எதுவும் புரிந்தேன் அல்லேன்! மாதவஞ்செய்த யோகியரையும் முனிவரையும் போற்றினேன் அல்லேன்! தண்ணீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாத இடங்களில் தண்ணீர்ப் பந்தல் எதையுமே வைத்தவன் அல்லேன்! ஒரு கிணறு வெட்டவில்லை. பசுக்கள் மேய்வதற்குரிய பசும்புல் பயிரிட்ட பூமியை வைத்திருக்கவில்லை! மந்தை வெளியை என் சொந்த நிலம் என்றேன்! இப்போது எந்த நிலமும் இல்லாமல், இருக்கும் உடலும் இல்லாமல் ஆவியாய் அவதியால் அலறித் தவிக்கிறேனே!

பூமியில் வாழ்ந்த காலத்தில் தானஞ் செய்தேனல்லேன்! வேத சாஸ்திரங்களைப் பழித்தேன்! புராணங்களைப் பொய்கள் என இகழ்ந்தேன்! கல்வி கற்போருக்குக் கல்விச் சாலைகள் உண்டாக்க மறுத்தேன்! இராமாயண, பாரத, பாகவதங்களையும் புராணங்களையும் கையால் எழுதியேனும், எழுதச்செய்தேனும், விலை கொடுத்து வாங்கியேனும் அவற்றைப் படிக்க விரும்பியவருக்கு மனதாரக் கொடுத்தேனல்லேன். பெரியவர்கள் சொன்னதைக் கேட்கவுமில்லை. படிக்க வைத்தாவது புராண வசனங்களைக் கேட்டதுமில்லை. ஸ்ரீஹரியின் புனித தினமாகிய ஏகாதசியில் உபவாசம் இருந்தேனல்லேன். நல்வினை, நற்செயல் ஒன்றைக்கூட கனவிலாவது நினைத்தேனல்லேன். தீவினைகளில் ஒன்றைக்கூட விடாமல் அத்தனையும் செய்தேன்! இப்போது என் செய்வேன்? யாரிடம் அழுது சொல்வேன்! என்று அழுது கூக்கூரல் இட்ட வண்ணம், ஒவ்வொரு குரலுக்கும் யமகிங்கரர் அவனைத் துன்புறுத்த, அவன் அவர்களால் யமபுரிக்கு இழுத்துச் செல்லப்படுவான்!' என்று திருமால் கூறியருளியதாகச் சூதபுராணிகர் கூறினார்.

## 6. ஜீவன் செல்லும் பாதையில் பரிதவித்தல்

சூதபுராணிகர் நைமிசாரணிய வாசிகளை நோக்கி, திருமாலின் திருவடி மறவாத பக்தர்களே என்று கூறலானார்.

கருடனுக்குத் திருமால் பின் வருமாறு கூறியதாவது:–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யமதூதர்களால் பாசக் கயிறால் கட்டுண்டும் அவர்களிடம் உதையுண்டும் செல்லும் ஜீவன், தன் மனைவி மக்களோடு பூமியில் வாழ்ந்த காலத்தில் அடைந்திருந்த இன்பத்தை நினைத்து நினைத்துத் துன்பமடைந்து பசியாலும் தாகத்தாலும் மெலிந்து சோர்வுற்று, இளைத்து, மிகவும் ஈன ஸ்வரத்தோடு ஐயகோ! நம்மோடு வாழ்ந்திருந்த மனைவி மக்கள் எங்கே? நம் பெற்றோரும் உற்றோரும் மற்றோரும் எங்கே? உறவினர்கள் எங்கே? நண்பர்கள் எங்கே? ஏவலாளர் எங்கே? எல்லோரும் நம்மைத் தன்னந்தனியாக இந்த யம படர்களிடம் சித்திரவதைப்படும்படி விட்டு விட்டார்களே! பொய் ஓலை எழுதுதல் முதலிய தீய தொழில்களைப் புரிந்து, மாற்றார் பொருள்களை மதி நுட்பத்தால் கவர்ந்தோமே : அப்பொருள்களாவது இப்போது என்னிடம் இருக்கிறதா? ஊரையடித்து உலையில் போட்டோமே! உழைத்தவன் உழைப்பை உறிஞ்சி, உற்றாரையெல்லாம் சுகிக்க வைத்தோமே! பிறரை நயமாக வஞ்சித்து, அவர்களது பொருளைக் கவர்ந்து நம் குடும்பம் வாழ வேண்டும் என்று மனச்சாட்சிக்கு மாறாக நடந்து பொருள் சேர்த்துச் சுகத்தைக் கொடுத்தோமே!

அப்பொழுது சுகத்தை அனுபவிக்க நம்மோடு கூடிக் குலாவியவர்கள் ஆகிய நம் மனைவி மக்கள், சுற்றத்தார் இவர்களில் யாராவது ஒருவர், இப்போது என்னோடு வந்தார்களா? என்னைத் தனியே போக விட்டு, இந்த யமர்களால் அழைத்துச் செல்லப்படும் இத்தகைய கொடிய பாதைகளில் அவதிப்படும்படி என்னை விடுத்து, அவர்கள் மட்டும் நம் வீட்டிலிருந்து சுகம் அனுபவிக்க நாம் ஏன் பிறர் பொருளை வேண்டினோம். நாம் செய்த வஞ்சனையைச் சிறிதும் அறியாமல், நம்மை நல்லவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றோ, பிறர் உள்ளத்தைப் புரிந்து கொள்ளும் உயர்ந்தவன் என்றோ நம்பிச் சீவாதாரமாகிய பொருளை நம்மிடம் இழந்தோர்களுடைய வயிறு எவ்வாறு எரிந்ததோ, அதுபோல இப்போது நம் வயிறு பற்றியெரிகிறதே? இனிமேல் என்ன செய்வோம்? ஏது செய்வோம் என்று அலறித் துடிப்பான்.

அப்போது அவனை இழுத்துச் செல்லும் யமதூதர்கள், அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்து, 'அட மூடா! இப்போதுதான் உனக்குப் புத்தி வந்ததோ? உனக்குத்தான் உலகம்! உனக்குத்தான் மனைவி மக்கள்? உனக்குத்தான் உற்றார் உறவினர், உன் வாழ்க்கைதான் உலகில் வாழத்தக்கவன் வாழ வேண்டிய வாழ்க்கை! உன் மனைவி மக்களே உனக்கு நித்தியம் என்று அறஞ் செய்யாமல் அதர்மஞ்செய்து ஆடம்பரமாகப் பூவுலகில் வாழ்ந்தாயே? அத்தகையவர்கள் உனக்கு இப்போது செய்யும் உதவி யாதடா? நீ செய்த புண்ணிய பாவமே உனக்கு இவ்வுலகில் இன்பத்தையும் துன்பத்தையும் தர வல்லன! பூமியில் நீ வாழ்ந்த காலத்தில் தேய்த்தலிலும் துருத்துதலிலும் உன் உடலுக்கு மகிழ்ச்சியும் உன் உள்ளத்திற்கு இன்பத்தையும் தந்ததாக யார் யாரையோ போற்றி அவர்களுக்குப் பொருள் கொடுத்தாய்.

ஆனால் உழைத்தவன் தனக்குரிய ஊதியத்தை உன்னைக் கெஞ்சிக் கேட்டாலும் 'மனிதாபிமான உணர்ச்சியோடு வர்த்தகம், தொழில் முதலானவற்றையெல்லாம் இணைக்கக்கூடாது' என்று ஏதேதோ உனக்குத்தான் சாதுர்யமாகப் பேசத் தெரியும் என்று பேசி அவனை அனுப்பி, இச்சைக்குரியவள் எந்த நேரத்திலும் இவ்வுடலுக்கு இன்பந் தருபவள் என்றெல்லாம் விலைமகளை உன்னுடையவளாகவே நினைத்துப் போற்றிப் புகழ்ந்த உன் மனிதாபிமானம் மங்கையபிமானம் ஆயிற்றே, அதனை இணைத்துத் தொழில் புரிந்தாயே! அத்தகையவர்கள் இப்போது எங்களிடம் நீ படுகின்ற அடியின் தழும்புப் புண்களைத் தடவியாவது கொடுக்க வந்தார்களா? பிறர் பொருளை அபகரித்தல் முதலிய அதர்மங்களைச் செய்யாமல் தர்மஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தவனாயின் உனக்கேன் இப்போது இந்தக் கேடு வருகிறது? எங்கள் கைகளில் அகப்பட்டு நீயேன் விழிக்க வேண்டும்? நீ ஏன் இப்போது தவித்துத் துடித்துக் கதற வேண்டும்? இப்போது ஏன் எங்களை விழித்துப் பார்க்கிறாய்?' என்று பேரொலியுடன் கண்டித்து, மீண்டும் பாசத்தால் நையப் புடைத்து முசலத்தால் புடை புடையென்று புடைப்பார்கள்!

'கருடா! தீய தொழில் புரிந்தோர் அடையும் கதியைப் பார்! பிறகு அந்தச் சேதனன் சிறிது தூரம் காற்றின் வழியிலும் சிறிது தூரம் புலிகள் நிறைந்த வழியிலும் யமகிங்கரர்களுடன் சென்று ஓரிடத்தில் தங்கி, இறந்த இருபத்தெட்டாம் நாளில், பூமியிலுள்ள தன் புதல்வனால் செய்யப்படும் ஊனமாகிய சிரார்த்த பிண்டத்தைப் புசித்து முப்பதாம் நாளன்று யாமியம் என்ற நகரத்தைச் சேர்வான். அங்கு பிரேதக் கூட்டங்கள் கூட்டங் கூட்டமாகக் குடியிருக்கும். புண்ணிய பத்திரை என்ற நதியும் வடவிருட்சமும் அங்கு உள்ளன. சிறிதளவு நேரச் சிரமப் பரிகாரத்தை முன்னிட்டு, யமகிங்கரர்களின் உத்தரவுக்குப் பயந்து அவ்யாமியம் என்ற நகரத்தில் சிறிது காலம் தங்கியிருந்து விட்டு இரண்டாவது மாசிக பிண்டத்தை அருந்தி, இரவிலும் பகலிலும் யமகிங்கரர்களால் இழுத்துச் செல்லப்பட்டு, யாருக்கும் பயத்தை ஏற்படுத்தும் ஆரண்யத்தின் ஊடே சென்று, வழி நடக்கும் வேதனையோடு ஓவென்று ஓலமிட்டு அழுது. தூதர்கள் செய்யும் கொடுமையால் மிகவும் வருந்தித் துன்பமுறச் செல்லும் வழியில் திரைபக்ஷிக மாசிக பிண்டத்தை வேண்டி சங்கமன் என்ற அரசனுக்குரிய சௌரி என்ற நகரத்தைச் சார்ந்து, அங்கு மூன்றாம் மாசிக பிண்டத்தைப் புசித்து அப்பால் சென்று, வழியிலே பொறுக்கமுடியாத குளிரினால் மிகவும் வருந்துவான்.

அங்கு யமகிங்கரர்கள் பலர் ஒன்றாகச் சேர்ந்து, வருந்துகின்ற அந்த ஜீவனின் மீது கற்களை எறிவார்கள். அந்தக் கல்மழையினால் வருத்தம் அடைந்து குருரன் என்ற வேந்தனின் ஆளுகையில் இருக்கும் குருரபுரம் என்ற பட்டினத்தை அடைந்து அங்கு ஐந்தாவது மாசிக பிண்டத்தையுண்டு, அப்பால் நடந்து கிரௌஞ்சம் என்ற ஊரையடைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அந்த ஊரில் ஆறாவது மாசிக பிண்டத்தை உண்டு. அரை முகூர்த்தகாலம் வரை அங்கே தங்கியிருந்து, சிரமப்பரிகாரம் செய்து கொண்டு பிறகு யாவரும் பயப்படும்படியான பயங்கர வழியிலே செல்வான். அந்த வழியலே போகும்போது முன்பு பூமியில் தான் வாழ்ந்ததையெல்லாம் நினைத்து நினைத்து வாய் விட்டுப் புலம்புவான். அப்போது யமபடர்கள் சினங் கொண்டு அவ்வாயிலேயே புடைப்பார்கள். அடுத்தடுத்து அந்த ஜீவன் யமகிங்கரர்களால் துன்பப்பட்டு வருந்திச் செல்லும் வழியில் அஞ்சத்தக்க ரூபமுடைய படகோட்டிகள் பதினாயிரம் பேர்கள் கூட்டமாக அவன் முன்பு ஓடிவந்து, தீப்பொறி பறக்க விழித்து 'ஏ ஜீவனே உன்னைக் குறித்து எப்போதாவது வைதரணி கோதானம் என்ற தானத்தைச் செய்திருந்தாயானால், இனி நீ கடந்து செல்ல வேண்டிய வைதரணி நதியை நீ இனிதாகக் கடக்க, நாங்கள் உனக்கு உதவி செய்வோம்.

இல்லாவிட்டால் அந்த நதியிலே உன்னைத் தள்ளிப் பாதாளம் வரையிலும் அழுத்தித் துன்பப்படுத்துவோம். ஓ ஜீவனே அந்த வைதரணி நதி, நூறு யோஜனை நீளமுடையது. நதியென்றால் நீர் பாயும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்துவிடாதே! அந்த நதியிலே தண்ணீரே இராது! இரத்தமும் சீழும், சிறுநீரும், மலங்களுமே நிறைந்து துஷ்ட ஜந்துக்களிலும் கொடிய ஜந்துக்கள் வாழும் இடமாக இருக்கிறது. நாற்றம் அறியும் நாசியில்லாத பிராணியும் அந்த நதியின் துர்நாற்றத்தைப் பொறுப்பது அரிது! ஜீவனே! நீ பூவுலகில் உடலோடு வாழ்ந்த காலத்தில் உன் கையால் கோதானம் செய்திருந்தாயேயானால், ஒரு பசுவானது இங்கு வந்த உன்னை இந்த நதிக்கப்புறம் சேர்த்து விடும்படிச் செய்யவேண்டும் என்பதற்கு அடையாளமாக எங்களருகே வந்து நிற்கும். அத்தகைய தானத்தை நீ செய்திராவிட்டால் அந்த அடையாளப் பசுவும் வரமாட்டாது. நீ அந்த வைதரணி நதியிலே விழுந்து கிடந்து, நீண்ட நெடுங்காலம் மூழ்கித் தவிக்கவேண்டும்! என்று ஓடக்காரர்கள் கூறுவார்கள்.

ஓ வைனதேயனே! அத்தகைய வைதரணி நதியை, பூவுலகில் வாழ்ந்து வாழ்நாள் முடிந்து இறந்து எமனுலகம் செல்லும் வழியில் கடக்கவேண்டிய நிலை ஒவ்வொரு ஜீவனுக்கும் இருப்பதால், பாரத வருஷத்தில் பிறந்து வாழ்கின்ற ஜீவன்கள் அந்த நதியைக் கடக்கும் பொருட்டு, அந்த வைதரணி கோதானம் என்ற தானத்தைச் செய்யவேண்டும். அந்த ஜீவன், பூவுலகில் வாழ்ந்த காலத்தில் செய்யாமற் போனாலும் அவனிறந்த பிறகு அவன் குலத்தில் பிறந்த அவன் மகனாவது அவனைக் குறித்துச் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட வைதரணி கோதானத்தைச் செய்திருந்தால், அந்த ஜீவன், அந்த நதியைக் கடந்து நமனுக்கு இளையோனாகிய விசித்திரன் என்பவனது பட்டினத்தைச் சார்ந்து, ஊனஷாணி மாசிகப் பிண்டத்தை உண்டு அங்கிருந்து புறப்படும்.

தானம் செய்யாத ஜீவன் ஏழாம் மாசிகப்பிண்டத்தை உண்ணும்போது சில பிசாசுகள் அவன் முன்பு பயங்கரத் தோற்றத்துடன் தோன்றி, அந்த ஜீவனைப்பார்த்து, அடா மூடனே! நீ பூவுலகில் வாழ்ந்திருந்த போது உன்னைப் பெரிய மனிதன் என்று நம்பி வந்து, உன்னை யாசித்தவர்களுக்கு ஒன்றும் கொடுப்பதற்கில்லை என்று உன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்க்குவந்தபடி இழித்தும் பழித்தும் பேசி அனுப்பினாய் அல்லவா? இப்போது உன் பசிக்கென்று உனக்காக மாதந்தவறாமல் மாசிக சிரார்த்தத்தைச் செய்து. உன் கைக்குக் கிடைத்து, நீ ஆவலோடும் பசியோடும் புசிக்கத் துடிக்கும் இந்த அன்னம் நீ உண்பதற்கு உரியதல்ல, அதை எங்களிடம் கொடுத்து விடு!' என்று பலவந்தமாகப் பிடுங்கிப் பறித்துக் கொண்டு சென்று விடும்.



'பறவைகளின் அரசே! ஒரு பொருளுமே இல்லாத வறிஞனாகப் பூவுலகில் வாழ்ந்தாலும் கூட தன்னை யாசித்தவர்களுக்கு இல்லை என்று பதில் சொல்லி அனுப்பாமல், தன்னால் இயன்றதையோ, தன்னால் செய்யக்கூடிய சிறு உதவியையாவது, தன்னை யாசித்தவனுக்குக் கொடுத்தேயாக வேண்டும். அப்படிக் கொடுக்க மறுத்தவன், யாசகம் கேட்டவனைக் குறைகூறிய ஜீவன், உலகில் மரித்து, இந்த விசித்திரம் என்னும் பட்டினத்திற்கு யமதூதர்களால் இழுத்து வரப்பட்ட சமயத்தில், பூமியில் அவன் புத்திரன் அவன் பொருட்டுக் கொடுக்கும் மாசிக பிண்டம், அவனுக்குச் சேராமல் பைசாசங்களின் கரங்களிலேதான் சேரும்.

பிறகு அந்த ஜீவன் பசியோடு இருந்து பேய்கள் பறித்த போது தன்கையிலிருந்து சிதறிய பிண்டத்தின் மிச்சத்தை உண்டு, 'ஐயகோ! நான் பூமியில் உண்டு உணவுப் பொருள்களைப் பதுக்கி கொண்டு, என்னிடம் யாசகம் கேட்டவர்களுக்கு, யாசகம் கொடுக்காமல் மறுத்த பாவத்தின் பயனோ இது? கடத்தற்கரிய வழியை யெல்லாம் கஷ்டமாகக் கடந்து வந்தேனே! அந்த வழியெல்லாம் நடந்து வந்தேனே! வயிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசிக்க, நாக்கு வறள இப்போது நான் தவிக்கும் தவிப்பைக் கேட்பவர்கள் இந்த யமகிங்கரர்களையும் பிசாசுகளையும் தவிர, ஒருவருமில்லையே! வயிறு பசிக்கிறது! ஏதாவது கொடுங்கள்!' என்று என்னைப் போன்ற ஒரு மனிதன் தன் சப்த நாடிகளையும் ஒடுக்கிக்கொண்டு பூமியில் பொருள் மிகுந்தவனாக வாழ்ந்த என்னை நவ்வியபோது, அவனுக்கு அரை வயிற்றுப் பசிதீரவாவது அன்னம் கொடுத்தேனா? சாக்காடு என்று ஒன்று நிச்சயமாக இருக்கிறது என்று புராணங்களில் படித்ததை நம்பினேனா! செத்த பிறகு என்ன கதிவந்தால் என்ன, இருக்கும்போது நமக்கு ஏன் கவலை!' என்று இறுமாந்திருந்தேனே! இப்போது இங்கு நான் படும் தொல்லையை யாரிடம் சொல்வேன்? என்னவென்று சொல்வேன்!' என்று துக்கப்படுவான்.

அப்போது அவனருகே இருக்கும் யமகிங்கரர்கள் அவனைப் பார்த்து 'முழு மூடனே! பூமியில் பிறக்கும் வாய்ப்பைப் பெற்று, மனிதனாகப் பிறந்தவனது மானிட ஜன்மம் அரிது அந்த ஜன்மம் ஜீவனுக்கு வேண்டியவற்றை எல்லாம் அளிக்கவல்ல கற்பகவிருட்சம் என்று சொல்லத்தகும். மானிடப் பிறவியைப் பெற்ற ஜீவனுக்கு அரியது எது? அவன், இம்மைக்கும் மறுமைக்கும். தருமங்களையும், தானங்களையும், பூஜைகளையும் ஏராளமாகத் தான் வாழ்கிற காலமெல்லாம் செய்து, புண்ணியங்களைக் கொள்ளை கொள்ளையாகச் சேர்த்திருக்கலாமே! அதைவிட்டு மறுமைக்குப் பயன்தராத பொருளைச் சேர்ப்பதிலேயே காலங்கழித்த மானிடனை என்னவென்று சொல்வது?

மானிடப் பிறவியில் மனிதனாகப் பூமியில் வாழ்கின்ற காலத்திலேயே செய்கிற நல்வினைத் தீவினைப் பயன்களைத்தான், மனிதன் இறந்த பிறகு பிற உலகங்களில் அனுபவிக்கலாமேயல்லாமல், மனித உடலை இழந்து ஆவியுடனே மற்ற உலகங்களில் எதையுமே செய்ய இயலாது! உத்தம உலகத்தையடைந்து இன்பமடைதலும் அதமமான உலகத்தை அடைந்து துன்பத்தை அடைவதும், மண்ணுலகத்தில் வாகனாதிகளில் ஆடம்பரமாக, அகம்பாவமாக ஆனந்தமாகப் பெரியோரை மதிக்காமல் செல்வதும், அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனத்தை ஓட்டுவதும், சிவிகை ஊர்தலும், சிவிகையைச் சுமத்தலும், உலுத்தன் உழைப்பாளியை உழைக்கச் செய்வதும், உழைப்பாளி, உலுத்தனிடம் உழைத்து உழைத்து உருக்குலைவதும், அந்தப் பூவுலகில் மனிதர்கள் செய்யும் புண்ணிய பாவங்களின் பயனேயாகும் என்பதை அறிவாயாக! அவற்றை என்ன இந்நிலையில் உள்ள நீ அறிந்து இனி செய்குவை?' என்பார்கள்.

கருடனே! உதககும்பதானம் என்ற ஒருவகைத் தானமானது செய்யப்பட்டதாயின் ஜீவன், அந்த உதக கும்பத்திலுள்ள நீரைப் பருகியாவது சிறிதளவாவது தாகவிடாய் தீர்ந்து ஏழாம் மாதத்தில் அவ்விடத்தைவிட்டு மீண்டும் நடந்து செல்வான். பறவைகளுக்கு அரசே! ஜீவன் யமபுரிக்குச் செல்லும் வழியில், இதுவரை பாதி தொலைவைக் கடந்து விட்டவனாகையால், அம்மாதத்தில் அவனுக்குரியவர் பூவுலகில் அந்தணர்க்கு அன்னதானம் செய்யவேண்டும். பிறகு அந்த ஜீவன் பக்குவப்பதம் என்ற பட்டினத்தைச் சார்ந்து, எட்டாவது மாசிக பிண்டத்தை உண்டு, அங்கிருந்து நடந்து துக்கதம் என்ற ஊரையடைந்து, மஹா துக்கமடைந்து, ஒன்பதாவது மாசிக பிண்டத்தை ஆங்கு ஏற்று அங்கிருந்து நீங்கி, நாதாக்கிராந்தம் என்ற பட்டினத்தை அடைந்து அங்கு தங்கி பத்தாவது மாசிக பிண்டத்தை உண்பான்.

விருஷோற்சனம் செய்யாமையால், அநேகம் ஜீவர்கள் பிரேத ஜன்மத் தோடு அப்பட்டினத்தில் கூட்டங் கூட்டமாகக் கூடி, 'ஓ ஓ' வென்று ஓயாமல் ஓலமிட்டுக் கதறிக் கொண்டிருப்பார்கள். அவ்வாறு கதறும் அச் சீவர்களைப் பார்த்து அங்கு வந்த ஜீவனும் கத்திக் கதறிவிட்டு, அப்பால் நடந்து, அதப்தம் ஊரையடைந்து பதினொன்றாம் மாசிக பிண்டத்தை அவ்விடத்தில் தங்கியுண்டு, அங்கிருந்து சீதாப்ரம் என்ற நரகத்தை அடைந்து, அங்கு சீதத்தால் வருந்தி, பன்னிரண்டாவது மாதத்து வருஷாப்தியப் பிண்டத்தை உண்டு, அங்கிருந்து புறப்பட்டு நான்கு திசைகளையும் யமகிங்கரர்களையும் அந்த ஜீவன் பரிதாபமாகப் பார்த்து ஈனக்குரலில் 'யமகிங்கரர்களே! என்னோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்நாளும் வாழ்வதாக உறுதியளித்த என் மனைவியைக் காணோமே என்னைத்தவிர யாரையுமே ஏறிட்டும் பார்க்கமாட்டேன் என்ற காதற்கிழத்தியையும் காணோமே உயிர் காப்பான் தோழன் என்று உலகம் புகழ்ந்து பாராட்டும் என் நண்பனைக் காணோமே! என் மனைவி மக்கள் ஒருவரையும் காணோமே! ஏழையேன் என் செய்வேன்?' என்பான்,

அப்போது யமதூதர்கள், அந்த ஜீவனை நோக்கி, 'முழுமூடனே! உன் மனைவி மக்கள் இங்குமா இருப்பார்கள்? அவர்கள் மேல் உனக்குள்ள ஆசை இன்னமும் உனக்கு ஒழியவில்லையோ? நீ செய்த புண்ணிய பாவங்களின் பயன்களைத்தான் இங்கு நீ காண்பாய்!' என்று அறைவார்கள். ஜீவன் யமகிங்கரர்கள் கூறுவதைக் கேட்டு 'ஐயோ! முன்னமே நீங்கள் சொன்னதை மறந்தல்லவோ ஏதேதோ பிதற்றுகிறேன்' என்று தனக்குள் தானே துன்பமனுபவித்துக் கொண்டு, மனம் புழுங்கி நடந்து வைவஸ்வத பட்டினம் என்ற நகரத்தைச் சேர்வதற்கு முன்பே, ஊனாப்திக பிண்டத்தை அருந்தி, அந்தப் பட்டினத்தை அடைவான். அந்தப் பட்டினமே யமபுரியாகும்.

அந்த யமபுரி நூற்றி நாற்பத்து நான்கு காதவழி அகலமுள்ளதாய், கந்தர்வ, அப்சரசுகளோடு கூடியதாய், எண்பத்து நான்காயிரம் பிராணிகள் வாழுமிடமாக இருக்கும். ஜீவர்கள் செய்யும் புண்ணியங்களை அறிந்து. யமதர்மனுக்குத் தெரிவிக்கும் பன்னிரண்டு சிரவணர்கள் என்பவர்கள் அந்த நகரில் இருப்பார்கள். ஜீவர்கள் அனைவரும் அந்தப் பன்னிரு சிரவணர்களையும் ஆராதனை செய்ய வேண்டும். அச்சிரவணர்களை ஆராதித்தால், அந்த ஜீவன் யமபுரியை வந்து சேர்ந்தபோது, அவன் செய்த பாபங்களையெல்லாம் எடுத்து யமனுக்குச் சொல்லாமல், அவன் செய்த புண்ணியங்களை சிரவணர்கள் யமதர்மராஜனுக்கு எடுத்துரைப்பார்கள். ஆகையால், பன்னிரு சிரவணர்களை ஆராதித்து வருவது மிகவும் நன்மையை மறுமைக்குத் தரவல்லது' என்று திருமால் கூறியருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. பாப புண்ணியங்களை ஆராய்ந்து சொல்லும் பன்னிரு சிரவணர்கள்

சூதமாமுனிவர், சௌனகாதி முனிவர்களை நோக்கிக் கூறலானார்.

'கேளீர் முனிவர்களே! வேத வடிவினனான பெரிய திருவடி, பரம காருண்யரான திருமாலின் திருவடிகளைத் தொழுது, 'பெருமாளே! தேவரீர் முன்பு கூறியருளிய அச்சிரவணர்கள் பன்னிருவரும் யாவர்? அவர்கள் யாருடைய புதல்வர்கள்? வைவஸ்வத நகரத்தில் அவர்கள் இருப்பதற்குக் காரணம் என்ன? மனிதர்கள் செய்யும் புண்ணியங்களை அச் சிரவணர்கள் எவ்வாறு அறிகிறார்கள்? இவற்றையெல்லாம் அடியேனுக்கு நவின்றருள வேண்டுகிறேன் என்று வேண்டினான். அதற்கு திருமால், மகிழ்ந்து கூறலானார்.

'புள்ளரசே! கேட்பாயாக! ஊழிக்காலத்தில் தன்னந்தனியனான ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர், அயனாராதி தேவரோடு யாவரும் யாவும் தன்னுள்ளே ஒடுங்கிக் கொண்டு நெடும்புனலில் பள்ளி கொண்டிருந்தார். அப்போது அந்த விஷ்ணுவின் உந்திக்கமலத்தில் நான்முகனாகிய பிரமன் தோன்றி, ஸ்ரீ ஹரியைக்குறித்து, நெடுங்காலம் மாதவம் புரிந்து, வேதங்களையும் படைப்புத் தொழிலையும் அறிந்து யாவரையும் யாவற்றையும் படைத்தருளினார். அவ்வாறு படைத்தவுடனேயே உருத்திரன் முதலிய தேவர்கள் எல்லோரும் அவரவர் தொழில்களைச் செய்யத் துவங்கினார்கள். எல்லோரையும்விட ஆற்றல் மிக்க யமதர்மராஜனும் ஜைமினி என்ற நகரத்தை அடைந்து, சிம்மாசனத்தில் வீற்றிருந்து, ஜீவர்கள் செய்யும் பாப புண்ணியங்களை அறிய வேண்டும்' என்று ஆராயத் தொடங்கினான்.

அவ்வாறு அறியத் தொடங்கிய அவனுக்கு சேதனர்கள் செய்யும் பாப புண்ணியங்களை அறிந்து கொள்ள முடியவில்லை. பலகாலம் முயன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவனால் அந்தச் செயலில் வெற்றியடைய முடியவில்லை. எனவே, யமதர்மராஜன், மனம் வருந்தி, நான்முகனைக் கண்டுவணங்கி 'சதுர்முகனே! மஹாதேவனே! அடியேன் ஜீவர்களின் பாவ புண்ணியங்களை உணர்ந்து அவர்களைத் தண்டிக்கவும் ரக்ஷிக்கவும் வேண்டும் என்று ஜைமினி நகரத்தில் இருந்து நீண்ட நாட்கள் ஆராய்ந்தேன். எவ்வளவுதான் முயன்றாலும் பூவுலகில் ஜீவர்கள் செய்யும் பாவ புண்ணியங்களை என்னால் தெளிவாக அறிந்து கொள்ள முடியவில்லை. அவற்றை இன்ன தின்னதென்று அறிந்தால் அல்லவோ பாவிகளைச் சிக்ஷிக்கவும் புண்ணியசாலிகளை இரட்சிக்கவும் முடியும்? ஆகையால் அவற்றை உணர்ந்து கொள்ளவும் அறிந்து தக்கவை செய்யவும் எனக்கு அருள் புரிய வேண்டும்' என்று பிரார்த்தித்தான்.

அதைக் கேட்டதும் நான்முகன், ஒரு தர்ப்பைப் புல்லை எடுத்தெறிந்து, நீண்ட கண்களை உடையவர்களும் மிக்க மேனியழகுடையவர்களும், மனக்கண்ணால் யாவற்றையும் அறிந்து கொள்ளக் கூடியவர்களான பன்னிரண்டு புதல்வர்களைப் படைத்து, யமதர்மனைப் பார்த்து தர்மனே! உலகத்தில் பிறந்த ஜீவர்கள் அனைவரும் நினைப்பதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேசுவதையும் செயல்புரிவதையும் அவர்கள் உடன் இருப்பவர்களைப் போல, இப்பன்னிருவரும் உணர்ந்தறிய வல்லவர்கள், இவர்கள் ஜீவர்கள் செய்வதை எல்லாம் அறிந்து உனக்கு அறிவிப்பார்கள். இவர்களைக் கொண்டு, ஜீவர்கள் செய்யும் பாவ புண்ணியங்களை அறிந்து, சிக்ஷையும் ரக்ஷையும் செய்வாயாக' என்று சொல்லி, அப்பன்னிருவரையும் யமதர்மனுடன் செல்லும்படிப் பணித்தார். காலனும் பிரமனை வணங்கி விடைபெற்று அந்தப் பன்னிரு சிரவணர்களோடு தென்புலத்தை அடைந்து, சேதனர்களுடைய புண்ணியங்களையும் பாவங்களையும் அறிந்து அவற்றுக்குத் தக்கவாறு தண்டித்தும் காத்தும் வருவானாயினன்.

'பக்ஷி ராஜனே! பூவுலகில் வாழ்வின் இறுதிக் காலம் முடிந்தவுடனே, அங்குஷ்டப் பரிமாணமேயுள்ள வாயு வடிவினான ஜீவனை யமகிங்கரர்கள், யமபுரிக்கு இழுத்துச் செல்வார்கள். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு வகை புருஷார்த்தங்களில் தர்மஞ் செய்த உத்தமர்கள் யாவரும் தர்ம மார்க்கமாகவே வைவஸ்வத நகரம் என்னும் யமபுரிக்குச் செல்வார்கள். பொன், பொருள் முதலியவற்றைப் பெரியோர்க்கும் சான்றோருக்கும் கொடுத்தவர்கள் விமானங்களில் ஏறிச்செல்வார்கள். பெரியோர்கள் விரும்பியவற்றை விரும்பியவாறே கொடுத்தவர்கள் குதிரைமீதேறிச் செல்வார்கள்.'

'மோட்சத்தில் இச்சை கொண்டு, வேதசாஸ்திர புராணங்களை அறிந்து, தெய்வபக்தி செய்பவர்கள் தேவ விமானம் ஏறி தேவருலகை அடைவார்கள். இந்த நான்கு வகையிலும் சம்பந்தப்படாத பாவிகள் கால்களால் நடந்தே செல்வார்கள். அவர்கள் செல்லும் வழியில் காடுகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்து செல்ல வேண்டியிருக்கும். அந்த வழியிலுள்ள மரங்கள், செடிகள், கொடிகள் முதலியவற்றின் இலைகள் கூரிய உடைவாள் போல் அமைந்திருக்கும். மணல்கள் எல்லாம் வறுத்துக் கொட்டிய பறல்களால் நிறைந்திருக்கும்.

அந்த மார்க்கத்தில் நடந்து செல் லும் போது மிகவும் வருத்தம் உண்டாகும். பூமியில் வாழுங் காலத்தில், ஜீவன் சிரவணரைப் பூஜித்தவனாக இருந்தால், அச் சிரவணர்கள் அந்த ஜீவனின் பாவங்களைப் பொருட்படுத்தாமல் புண்ணியங்களை மட்டுமே யமதர்ம தேவனிடம் சொல்வார்கள். சிரவணரைப் பூஜிப்பவர்களுக்குப் பாவம் செய்ய அவர்கள் மனமே இடம் தராது. பன்னிரண்டு கலசங்களில் தண்ணீர் நிறைத்து, அன்னம் பெய்து, அக்கலசங்களை அந்தந்தச் சிரவணரைக் குறித்து அந்தணருக்குத் தானம் செய்ய வேண்டும். அத்தகைய ஜீவனுக்கு அச் சிரவணர்கள் யமலோகத்தில் சகலவிதமான நன்மைகளையும் செய்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கருடா! பன்னிரண்டு சிரவணர்களின் தோற்றம் முதலியவற்றைச் சொல்லும் இந்தப் புண்ணிய சரிதத்தை பக்தியோடு கேட்டவர்கள், பாபம் நீங்கிப் புனிதராவார்கள் என்று கூறியருளினார்.

## 8. சித்திரகுப்தன் கணக்கும் நரகங்களும்

சூதமாமுனிவர், சௌனகாதி முனிவர்களுக்குப் பன்னிரண்டு சிரவணரின் சரிதத்தைச் சொல்லிய பிறகு மேலும் தொடர்ந்து சொன்னார்

'முனிவர்களே! திருவிக்கிரமரான திருமால், கருடனை நோக்கிக் கூறலானார்

கருடா! ஜீவர்கள் பூவுலகில் வாழ்ந்த காலத்தில் செய்த பாவ புண்ணியங்களையெல்லாம் சித்திர குப்தன் என்ற யமலோகக் கணக்கன், சிரவணர்களின் மூலமாக அறிந்து யமதர்ம ராஜனுக்கு அறிவித்து, அவனது உத்திரவுப்படியே அவரவரது பாவங்களின் தன்மைக்கேற்ற தண்டனைகளை வாசித்துச் சொல்ல யமதர்மன் கிங்கரர்களைக் கொண்டு அத்தண்டனைகளை அவ்வப்போதே நிறைவேற்றச் செய்துவிடுவான். ஜீவனானவன் வாக்கால் செய்த பாப புண்ணியங்களை வாக்காலும், உடலால் செய்த பாப புண்ணியங்களை உடலாலும், மனத்தால் செய்த பாவ புண்ணியங்களை மனத்தாலும், அனுபவிக்க வேண்டியிருக்கும், பெரியோர்களைப் போற்றுதல், வேத சாஸ்திர புராணங்களைப் பக்தி சிரத்தையாகப் படித்தல் முதலிய புண்ணியச் செயல்களைச் செய்தவன், எங்கும் தன் வாக்குத் திறமையால் வெற்றியை அடைவான். பெரியோரை ஏசிப்பேசுதல், இகழ்ந்து பேசுதல், நீச மொழிகளை உச்சரித்தல் முதலிய பாவங்களைச் செய்தவர்களின் வாயிலிருந்து புழுக்களாகச் சொரியும்! புண்ணிய நதிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராடியவர்கள், பாகவதர்கள், பௌராணிகர்கள், ஆசாரியர்கள், தெய்வீக விஷயங்களை உலகிற்கு உபதேசிப்பவர்கள். ஞானிகள் இவர்களுக்குத் தண்டம் சமர்ப்பித்தவர்களும் இது போன்ற பலவகை புண்ணியச் செயல்களைச் செய்தவர்களும் நல்ல இணக்கமுடைய சரீரத்தைத் தனக்கு இசைவாகப் பெற்று மகிழ்வர். பரஸ்திரீகமனஞ் செய்தவர்கள், பிறவுயிர்களை வாட்டி வதைத்தவர்கள் முதலியவற்றைச் செய்தவர்கள் கொடூரமான சரீரத்தையடைவார்கள்.

ஆதிபகவனுடைய திவ்ய மங்கள விக்கிரகத்தைத் தினசரி பூஜித்தவர்களும் தியானித்தவர்களும், எல்லோருக்கும் நல்லவற்றையே செய்தவர்களும், ஊருக்கு உழைத்தவர்களும், நன்மையையே எப்போதும் கருதியவர்களும் எப்போதும் மகிழ்ச்சியுடனிருக்கும் மனத்தைப் பெற்றிருப்பார்கள். எப்போதும் பிறருக்குத் தீமை செய்வதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பவர்களும், கெடுதலான சிந்தனை செய்பவர்களும் எப்போதும் வருந்தும் மனமுடையவர்களாவார்கள்.

'கருடா! யமபுரியின் தன்மையையும் அந்த யமபுரிக்குச் செல்லும் பாதையிலுள்ள இன்ப துன்பங்களையும் உனக்குச் சொன்னேன். இறந்தவனைக் குறித்து அன்னதானம், கோதானம், தீபதானம் முதலியவற்றைச் செய்தல் வேண்டும். அன்னதானம் செய்தால் இறந்து செல்லும் ஜீவன் மார்க்கத்தில் வருந்தாமற் செல்வான். தீபதானம் செய்யப்பட்டால், ஜீவன் இருள் மார்க்கத்தில் வழி தெரிந்து இனிதாகச் செல்வான். கார்த்திகை மாதத்தில் சுக்கில பட்சத்தில் சதுர்த்தசியில் தீபதானம் செய்தாலும், விருஷோற்சர்க்கம் செய்தாலும் ஜீவனானவன் நல்லுலகில் நற்கதியடைவான். பதினோரு நாட்கள் செய்யும் பிண்டங்களால் சிரசு, ரோமம் முதலியவை நன்றாக அமையும். தண்ணீர்க் குடத்தைத் தானம் செய்தால் யமகிங்கரர்கள் திருப்தியடைந்து, அந்த ஜீவனை வருந்தச் செய்ய மாட்டார்கள் சையாதானம் செய்யின் ஜீவன் விமானத்தில் ஏறி நல்லுலகை அடைவான். இறந்தவனின் ஜீவன், பதினொன்றாம் நாள் முடியும் வரையில், அவன் மனைக்கு முன்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகத்தோடு நிற்பானாகையால், அவனைக் குறித்துச் செய்யும் தானங்களைப் பதினோராவது நாளிலாவது பன்னிரண்டாம் நாளிலாவது செய்யவேண்டும்' என்று கூறியருளினார்.

கருடன், பக்தவத்சலப் பெருமானை நோக்கி 'ஆபத்பாந்தவா! அனாதரக்ஷகா! முன்பு ஒரு சமயம், பததானம் செய்ய வேண்டும் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். அந்தப் பததானம் என்பது யாது? அந்தத் தானத்தை எவ்விதம் செய்ய வேண்டும்? என்று கேட்க, மாலைமணி வண்ணன் கூறலானார்:

'கருடா! குடை, மாரடி, தண்டம், வஸ்திரம், மோதிரம், உதக கும்பம், ஆசனப்பலகை, அன்னம், பூஜைத்திரவியம். பூணூல், தாமரச் செம்பு, அரிசி ஆகியவற்றை சத்பிராமணருக்குத் தானமாகக் கொடுக்க வேண்டும். குடைதானம் செய்தால், ஜீவன் யமபுரியை நோக்கிச் செல்லும்போது குளிர்ந்த நிழல் நிறைந்த மார்க்கமாகக் கிங்கரர்களால் அழைத்துச் செல்லப்படுவான். மாரடிதானம் செய்தால். குதிரைமேல் ஏறிச் செல்வான். இவ்வாறு செய்யும் தானங்களில் யமதூதர்கள் மகிழ்ச்சியடைந்து, ஜீவனை வருந்தச் செய்யாமல் செல்வார்கள் என்று கூறியருளினார்.

ஓ, நைமிசாரணிய வாசிகளே! அதன் பிறகு, பக்ஷிராஜனான கருடன், திருமகள் கேள்வனைச் சிரம் வணங்கி, 'கருணாநிதியே! கார்மேக வண்ணரே! நரகங்கள் என்பவை யாவை? அவை எவ்வாறு இருக்கின்றன? அவற்றில் யார் யார் எவ்வெவ்வாறு தண்டிக்கப் படுகிறார்கள்? அவற்றை அடியேனுக்கு விபரமாக தெரிவிக்க வேண்டும்' என்று கேட்க பாம்பணைப்பரமன், கருடனை நோக்கி, 'காசிப் புத்திரனே பாவஞ்செய்தவர்களுக்குக் காலதேவனால் நிச்சயிக்கப்பட்ட தீவாய் நரகங்கள் ஆயிரம் பதினாயிரமல்ல எண்பத்து நான்கு லட்சமிருக்கின்றன் அவற்றில் தாமிஸ்ரம், அந்ததாமிஸ்ரம், ரௌரவம், கும்பீபாகம், காலசூத்திரம், மஹாரௌரவம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசிபத்திரம், பன்றி முகம், அந்த கூபம் கிருமிபோஜனம், அக்கினிகுண்டம், வஜ்ரகண்டகம் சான்மலி, வைதரணி, பூயோதம், பிராணரோதம், விசஸனம், லாலாபக்ஷம், சாரமேயாதனம், அவிசி பரிபாதனம், க்ஷாரகர்த்தமம், ரக்ஷோகணம், சூலப்புரோதம், தந்த சூகம், வடாரோதம் பர்யாவர்த்தனகம், சூசி முகம் முதலிய இருபத்தெட்டுநரகங்கள் மிகக் கொடியனவாகும்.

1. தாமிஸ்ரம்:
2. அந்ததாமிஸ்ரம்:
3. ரௌரவம்:
4. மஹா ரௌரவம்
5. கும்பீபாகம்
6. காலசூத்திரம்
7. அசிபத்திரம்
8. பன்றிமுகம்
9. அந்தகூபம்
10. கிருமி போஜனம்
11. அக்கினி குண்டம்
12. வஜ்ர கண்டகம்
13. சான்மலி
14. வைதரணி
15. பூயோதம்
16. பிராணரோதம்
17. விசஸனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. லாலாபக்ஷம்

19. சாரமேயாதனம்

20. அவீசி

21 பரிபாதனம்

22. க்ஷாரகர்த்தமம்

23. ரக்ஷோகணம்

24. சூலப்புரோதம்

25. தந்தசூகம்

26. வடாரோதம்

27. பர்யாவர்த்தனகம்

28. சூசீமுகம்

இத்தகைய இருபத்தெட்டு நரகங்கள் ஒவ்வொரு வகையிலும் ஏராளமானவையாக மிகக் கொடியனவாக அமைந்திருக்கும்.

இறந்தவனைக் குறித்து நாள் தோறும்கொடுக்கப்படும் உதககும்பதானத்தை, யமதூதர்கள் பெற்றுத் திருப்தி அடைவார்கள். மாசிக, வருஷாப்திகம் முதலியவற்றால் ஜீவன் திருப்தியடைவான், அவற்றால் யமகிங்கரர்களும் திருப்தியடைவார்கள்.


`வைனதேயா! ஒருவன் இறந்த ஓராண்டு முடியுந்தருவாயில், அவனது ஜீவன் பிண்டத்தாலாகிய சரீரத்தோடு யமபுரியை அடைவான் என்றோமே! அந்த ஜீவன் யமலோகத்தை அடையும் முன்பாக அந்தப் பிண்ட சரீரத்தைத் தவிர்த்து, அங்குஷ்ட பரிமாணமுள்ள ஒரு புதிய வடிவம் பெற்று, ஒரு வன்னிமரத்தில் சிறிது காலம் தங்கியிருந்து அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. தாமிஸ்ரம்

பிறன் மனைவி, குழந்தை, பொருள், இவற்றைக் கொள்ளையடிப்போர் அடையுமிடம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. அந்ததாமிஸ்ரம்

கணவன் அல்லது மனைவியை வஞ்சித்து வாழ்வோர் கண்களில் இருள் கவிய மூர்ச்சித்து விழும் நரகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. ரௌரவம்

அக்கிரமமாகப் பிறருடைய குடும்பங்களை அழித்து பலவந்தமாகப் பொருள் பறிக்கும் சுயநலக்காரர்கள் அடையும் நரகம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. மஹா ரௌரவம்

ருரு என்ற ஒரு வகையான அகோரமான மான்கள் பாவிகளைச் சூழ்ந்து துன்புறுத்தும் நரகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. கும்பீபாகம்

தன் சுவைக்காக ஜீவன்களை வதைத்தும் சித்திரவதை செய்தும் புவியில் வாழ்ந்து மரித்தவன் அடையும் நரகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. காலசூத்திரம்

பெரியோரையும் பெற்றோரையும் துன்புறுத்திய வெறியர்கள் அடையும் நரகம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. அசிபத்திரம்

தன் தெய்வத்தை நிந்தித்து தனக்குரிய தர்மங்களை அதர்மிகளடையும் நரகம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. பன்றிமுகம்

அநியாயமாகப் பிறரைத் தண்டித்து அகந்தையுடன் அநீதிகளும் பலவகைக் கொடுமைகளும் புரிந்த அக்கிரமக்காரர்கள் அடையும் நரகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. அந்தகூபம்

சித்திரவதை, துரோகம் கொலை முதலியவற்றைச் செய்த கொடியோர் அடையும் நரகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. கிருமிபோஜனம்

தான்மட்டும் உண்டு பிறரைத் துளைக்கும் கிருமிகள் போல வாழ்ந்து பக்தி நியமம் முதலிய நல்லொழுக்கமில்லாமல் வாழ்ந்த பாவிகள் அடையும் நரகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. அக்கினி குண்டம்

பிறர் உரிமைகளையும் உடைமைகளையும் தனக்கிருக்கும் வலிமைகளால் அபகரித்துக் கொள்ளும் பலாத்காரப் பாவிகளடையும் நரகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. வஜ்ரகண்டகம்

கூடத்தகாத ஆண் அல்லது பெண்ணைக் கட்டித் தழுவிக்கூடி மகிழும் மோக வெறியர்கள் அடையும் நரகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. சான்மலி

நன்மை, தீமை, உயர்வு தாழ்வு இவற்றைப் பாராமல் உயர்வு, தரங்கெட்டு, எல்லோருடனும் எவருடனும் கூடிமகிழும் மோகந்தகாரப் பாவிகள் அடையும் நரகம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. வைதரணி

அதிகார வெறியாலோ கபடவேஷத்தாலோ, நயவஞ்சகத்தாலோ, நல்வழிகளைக் கெடுத்துத் தர்மத்திற்குக் கேடுபுரியும் அதர்மிகள் அடையும் நரகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. பூயோதம்

கூச்சமில்லாமல் இழிமகளைக் கூடி, ஒழுங்கீனங்கள் புரிந்தும் தன் வழியைவிட்டு ஓர் இலட்சியமுமில்லாமல் மிருகங்களைப் போலத் திரியும் கயவர்கள் அடையும் நரகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. பிராணரோதம்

பிராணிகளைத் துன்புறுத்திக் கொலைபுரியும் கொடுமைக்காரர்கள் அடையும் நரகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. விசஸனம்

டம்பத்திற்காக பசுவதை புரிந்து யாகம் முதலியவற்றைச் செய்யும் பித்தலாட்டக்காரர்கள் அடையும் நரகம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. லாலாபக்ஷம்

வாழ்க்கைத் துணைவியை வற்புறுத்தி விபரீத மோக இச்சைக்கு ஆளாக்கி கெடுக்கும் தீயோர்கள் அடையும் நரகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. சாரமேயாதனம்

வீடுகளுக்கு தீ வைப்பது சூறையாடுவது, ஜீவவதை புரிவது விஷமூட்டுவது, கூட்டங் கூட்டமாகக் குடிமக்களைக் கொள்வது போன்ற செயல்களைச் செய்த பாவிகள் அடையும் நரகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. அவீசி

பொய்சாட்சி கூறுதல் முதலிய அகம்பாவச் செயல்புரியும் அகம்பாவிகள் அடையும் நரகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. பரிபாதனம்

எக்குலத்தினராயினும் மதுபோதைப் பொருள்களைக் கொடுத்தும் குடித்தும் குடிகளைக் கெடுக்கும் குடிகேடர்கள் அடையும் நரகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. க்ஷாரகர்த்தமம்

தன்னை மட்டுமே பெரியதாக மதித்து பெரியோரையும் நல்லோரையும் அவமதித்து, இறுமாப்புடன் தீச்செயல் புரிந்த பாவிகள் அடையும் நரகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. ரக்ஷோகணம்

நரமேதயாகம் புரிதல், ஆணாயினும் பெண்ணாயினும் மனித மாமிசம் புசித்தல், சாதுவான பிராணிகளை வதைத்தல் முதலான தீ வினை புரிந்தோரை அவர்களால் வதைக்கப்பட்டவர்களே, முன்னின்று வதைக்க அவதிப்படும் நரகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24. சூலப்புரோதம்

எந்தவிதத் தீமையும் புரியாதோரைக் கொல்லுதல், நயவஞ்சகமாகக் கொல்லுதல், தற்கொலை செய்து கொள்ளுதல், நம்பிக்கைத் துரோகம் புரிதல் முதலிய பாவச் செயல்களைப் புரிந்த பாவிகள் அடையும் நரகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. தந்தசூகம்

தீமையே புரிந்த துரோகிகளடையும் நரகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26. வடாரோதம்

பிராணிகளைக் கொடூரமாக வதைத்த கொடுமைக்காரர்கள் அடையும் நரகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27. பர்யாவர்த்தனகம்

வீட்டுக்கு வந்த விருந்தினரை வெறுத்து நிந்தித்த லோபிகளும், பகிர்ந்துண்ண விரும்பாத சுயநல வாதிகளும் அடையும் நரகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28. சூசீமுகம்

செல்வச் செருக்காலும் செல்வாக்கினாலும் கர்வங் கொண்டு பிறரைத் துன்புறுத்துகிறவர்களும், அநீதியாய்ப் பொருள் சம்பாதித்து அதை நல்ல அறநெறிகளில் செலவிடாமல், கள்ளத் தனமாகப் பதுக்கி வைப்பவர்களும் அடையும் நரகம். அறனும்,








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு கர்மத்தாலாகிய சரீரத்தைப் பெறுவான். அப்போது யமகிங்கரர்கள் அந்த ஜீவனை யமபுரிக்கு அழைத்துச் சென்று, தர்ம ராஜனின் கொலுமண்டபத்திற்குக் கொண்டு செல்வார்கள் என்று திருமால் கூறியருளினார்.

## 9. யமபுரியும் யமதர்மராஜனும்

சூதமாமுனிவர் . நைமிசாரணியவாசிகளை நோக்கிக் கூறலானார்:

முனிவர்களே! ஸ்ரீவாசுதேவன், கருடனிடத்தில் நரகலோக எண்ணிக்கைகளையும் அந்த லோகத்தில், பாவஞ்செய்தவர்கள் அனுபவிக்கின்ற அவஸ்தைகளையும் சொல்லிவிட்டு, பூவுலகில் மரித்தவனைக் குறித்து தினந்தோறும் செய்யப்படும் ஈமச் சடங்குகளாலும் மாசிக சிரார்த்தங்களாலும், மரித்தவனின் ஜீவன் பிண்டத்தாலாகிய சரீரத்தோடு,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமபுரி வரை சென்று, அந்த இடத்தில் அந்தப் பிண்ட சரீரத்தை விடுத்து. கட்டை விரலளவுடைய ஆகிருதியுடன் ஒரு வன்னி மரத்திலிருப்பான் என்றும் பின்னர் கர்மசரீரம் பெற்ற பிறகே யமபுரிக்கு யமகிங்கரர்களால் அழைத்துச் செல்லப்படுவான் என்றும் கூறிவிட்டு திருமால் மேலும் தொடர்ந்து கூறலானார்:

'பறவைகளுக்கு அரசே! அங்குஷ்ட பரிமாணமுள்ள ஜீவன், கர்மசரீரம் பெற்று, வன்னி மரத்தை விட்டு, யமகிங்கரர்களுடன் இருபது காத தூர வழி விஸ்தாரமுள்ள சித்திரகுப்தனது பட்டினத்தின் வழியாக யமபுரிக்குச் செல்வான். அந்த யமப் பட்டணம் புண்ணியஞ் செய்தோரின் பார்வைக்கு மிகவும் ரம்மியமாகக் காணப்படும். எனவே, இறந்தவனைக் குறித்துப் பூவுலகத்தில் இரும்பாலாகிய ஊன்றுகோல், உப்பு, பருத்தி, எள்ளோடு பாத்திரம் ஆகிய பொருள்களைத் தானம் செய்யவேண்டும். இத்தகைய தானங்களால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யமபுரியிலுள்ள யமபரிசாரகர்கள் மிகவும் மகிழ்ந்து ஜீவன் யம பட்டினத்தை நெருங்கியதுமே, கால தாமதப்படுத்தாமல் அவன் வந்திருப்பதை யமதர்ம ராஜனுக்குத் தெரிவிப்பார்கள்.

யமனுடைய அரண்மனையில் தர்மத்துவஜன் என்ற ஒருவன் சதாசர்வ காலமும் யமனருகிலேயே இருந்து கொண்டிருப்பான். பூமியில், இறந்தவனைக் குறித்து கோதுமை, கடலை, மொச்சை, எள், கொள்ளு, பயறு. துவரை ஆகிய இந்த ஏழு தானியங்களைப் பாத்திரங்களில் வைத்துத் தானஞ் செய்தால், அந்தத் தர்மத்துவஜன், திருப்தியடைந்து, யமனிடத்தில் 'இந்த ஜீவன் நல்லவன் புண்ணியம் செய்த புனிதன்!' என்று விண்ணப்பஞ் செய்வான்.

கருடா! பாபஞ் செய்த ஜீவனுக்கோ அந்த யமபுரியே பயங்கரமாகத் தோன்றும், அவனுக்கு தர்மராஜனாகிய யமனும் அவனது தூதர்களும் யாவரும் அஞ்சத்தக்க பயங்கர ரூபத்தோடு தோற்றமளிப்பார்கள். அந்தப் பாவஞ் செய்தவனும் அவர்களைக் கண்டு பயந்து. பயங்கரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலமிடுவான். புண்ணியஞ் செய்த ஜீவனுக்கு யமதர்ம ராஜன் நல்ல ரூபத்தோடு தோற்றமளிப்பான், புண்ணியஞ் செய்த ஜீவன் யமனைக் கண்டு மகிழ்ந்து, இறைவனின் தெய்வீக ஆட்சியை வியப்பான் யமதர்ம ராஜன் ஒருவனேதான் என்றாலும் பாவிக்குப் பயங்கர ரூபத்தோடும் புண்ணியஞ் செய்தவனுக்கு நல்ல ரூபத்தோடும் தோன்றுவான். புண்ணியஞ் செய்த ஜீவன், யமனருகே தோன்றுவானாயின், இந்த ஜீவன் புண்ணியஞ் செய்தவனாகையால் சூரிய மண்டல மார்க்கமாக பிரம்ம லோகம் சேரத் தக்கவன் என்று கருதும் யமதர்மராஜன் தான் வீற்றிருக்கும் சிம்மாசனத்திலிருந்து சட்டென்று எழுந்து நின்று மரியாதை செலுத்துவான்,

யமலோகத்திலுள்ள கிங்கரர்கள் அனைவரும் பாசம், உலக்கை முதலிய ஆயுதங்களை ஏந்தி வரிசை வரிசையாக அணிவகுத்து நிற்பார்கள், மரித்த ஜீவனுக்காக மாசிக சோதக கும்ப முதலியனவற்றையும் பததானத்தையும் முறையாக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவில்லையென்றால் அத்தகைய ஜீவனை, யமகிங்கரர்கள் பாசத்தால் கட்டிப்பிணைத்து உலக்கையால் ஓச்சி, ஆடு மாடுகளை போல இழுத்துக் கொண்டு, காலன் எதிரே நிறுத்துவார்கள். அங்கு பூர்வ ஜன்மத்தில் அந்த ஜீவன் செய்த புண்ணிய பாவங்களுக்கு ஏற்ப வேறு ஜன்மம் அடைவான் அதிக புண்ணியஞ் செய்திருந்தால், அந்த ஜீவன், யம தூதர்களால் துன்புறுத்தப்படாமல் யமதர்மன் முன்பு சென்று, தேவனாக மாறித் தேவருலகம் செல்வான்.

அந்த ஜீவன் பாபஞ் செய்தவனாயின், அவன் யமதர்மனைக் காண்பதற்கும் அஞ்சுவான். உடல் நடுங்கப் பயப்படுவான். கால தூதர்கள் அவனைக் கட்டிப் பிணைத்து, யமதர்மன் முன்பு கொண்டு சென்றதும், யமதர்மராஜனின் கட்டளையை ஏற்று, நரகத்தில் விழுந்து பிறகு, கிருமி, புழு, முதலியவற்றின் ஜன்மத்தையடைவான். அந்த ஜீவனுக்குப் புண்ணியம் மிதமாக இருக்குமானால் முன்பு போல, மானிடப் பிறவியைப் பெறுவான். தான தருமங்களைச் செய்தவன் யாராயினும் அவன் எக்காரணத்தாலேனும் எந்த ஜன்மத்தை அடைந்தாலும், அவன் செய்த தானதர்ம பயன்களை அந்த ஜன்மத்தில் அடைவான். மனிதன் வாழுங்காலத்தில், 'நான் ஐஸ்வரியத்தில் தனவந்தன், அறிவிலே பேரறிஞன், வலுவிலே மிகவும் பலசாலி, கலைத்துறையில் பெருங் கலைஞன், விஞ்ஞானி, மதத் தலைவன், ஏகபோகச் சக்கரவர்த்தி' என்றெல்லாம் புகழப் பெறுவான்.

அவன் இறந்தவுடனேயே, அவன் உடலில் அரை ஞாண் கயிறு கூட அறுத்தெறியப்பட்டு விடும். அவனது ஜீவன் நீங்கியவுடனே அவன் உடலைக் குழியில் புதைக்கப்படும். அது மண்ணோடு மண்ணாகும். கண்டம் கண்டமாகத் துண்டு செய்து எறிந்தால், நரி முதலியவை தின்று பவ்வி ரூபமாகும். தகனஞ் செய்யின் சாம்பலாகும். மனித உடலின் தன்மை அத்தகையது. ஆயினும் ஜீவனுக்கு மானிடப் பிறவி கிடைப்பது அரிது. மானிட தேகம் பெறுவது அரிது. அப்படியே மானிட தேகம் கிடைத்தாலும் கூன் குருடு, செவிடு, மலடு, நீங்கிப் பிறத்தல் அரிது. அப்படியே பிறந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம குலத்தில் ஜனிப்பது அரிது அதனினும் அரிது பிரமகுலத்தில் ஜனித்து ஒழுக்கத்தால் பெற வேண்டிய முக்தியைப் பெறவில்லை என்றால் தவம் முதலியவற்றைச் செய்து வருந்தித் தன் கரத்தில் அடைந்த அமிர்தம் நிறைந்த பொற்கலசத்தைச் சிந்தி பூமியில் கவிழ்த்தவனுக்கு ஒப்பாவான்!' என்று திருமால் ஓதியருளினார்.

## 10. பிரேத ஜன்மம் விளைவிக்கும் துன்பம்

கருடன் கேசவனைத் தொழுது 'ஸ்வாமி! பாவங்களில் எத்தகைய பாவத்தைச் செய்தவன், பிரேத ஜன்மத்தை அடைகிறான்? அந்தப் பிரேத ஜன்மத்தில் இருந்து எப்படி நீங்குகிறான்? அவன் அந்தப் பிரேத ஜன்மத்தோடு பூவுலகில் சஞ்சரிப்பது உண்டா அல்லது யமனுடைய காவலிலேயே கிடப்பானோ? இவற்றையெல்லாம் அடியேனுக்கு விளக்கமாகச் சொல்ல வேண்டும்!' என்று வேண்ட, ஆதியங் கடவுளான திருமால் கருடனை நோக்கிக் கூறலானார்.

'வைனதேயனே! பிறருடைய பொருளையும் மனைவியையும் அபகரிப்பவன் யாவனோ, அவனே இறந்த பிறகும் வேறு சரீரத்தையடையாமல் காற்று ரூபமான பிரேத ஜன்மத்தையடைந்து, பசி தாகத்தோடு வருந்தி, யமனுடைய காவலையும் நீங்கி, எங்கும் திரிவான். ஒருவன் மரித்து அவனது சரீரம் அவன் வீட்டில் கிடக்கும் போதே, அவன் இறந்ததைக் குறித்து வருத்தப்படாமல், துக்கமின்றி அவனது உற்றார் உறவினரை எல்லாம் தன் புத்தியால் வஞ்சித்து, இறந்தவனின் பொருள்களை அபகரித்துக் கொள்பவன் யாவனோ அவன்தான் தீவாய் நரகங்களையெல்லாம் அனுபவிப்பான். மரித்தவன் பொருளை அவன் வழியினுள் உள்ளோரை அடைய விடாமல் மோசஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து அபகரிக்கும் பாவியினும் கொடும் பாவி வேறு ஒருவன் இருக்கமாட்டான்.



இத்தகைய பாவஞ் செய்தவனே. பிரேஜன்மத்தையடைந்து தன்னுடைய குடும்பத்தில் உள்ளவர்களையும் பந்துக்களையும், துன்பப்படுத்துவான், அவன் பிரேத ஜன்மத்துடனேயே இருப்பானாகையால், பிதுர்க்களின் தினத்தில், வீட்டிற்கு வருகின்ற பிதுர்களை வீட்டுக்குள்ளே போக விடாமல், வாசலில் நின்று தடுத்துத் துரத்துவான் பிதுர்களுக்கு வழங்கும் அவிசுகளை அவனே வாங்கிப் புசிப்பான் வீட்டிலுள்ள பொருள்களை குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அனுபவிக்க முடியாமலும் பிறருக்கும் கொடுக்கவிடாமலும் வீணாகக் கிடக்கச் செய்வான் தன்னுடைய புத்திரன் முதலியோருக்குச் சந்ததியுண்டாகாமல் வமிசம் நாசமடையும்படிச் செய்வான். ஸீதஜ்ஜுரம், தாபஜ்வரம், வைசூரி முதலிய ரோகங்களை அப்பிள்ளைகளுக்கு உண்டாக்கி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருத்தப் படுத்துவான். தன் புத்திரன் முதலியோர் தம் வாயினின்று உமிழ்ந்த எச்சிலை உண்பான் என்று கூறியருளினார்.

அப்போது பறவைவேந்தன் பெருமாளை நோக்கி, ஆதிமூர்த்தி! பிரேத ஜன்மமடைந்தவன் வேறு என்ன செய்வான்? எவ்விதமாகத் தோற்றமளிப்பான்? ஒரு குலத்தில் ஒருவன் பிரேத ஜன்மத்தையடைந்திருக் கின்றான். என்பதை எப்படி அறிய முடியும் இவற்றை தயவுசெய்து நவின்றருள வேண்டும்' என்று வேண்ட, ஸ்ரீமந் நாராயணர் கூறுகிறார்:

'வைனதேயா! பிரேதஜன்மம் அடைந்தவன் தான் சார்ந்த குலத்தையே அதிகம் பீடிப்பான். தருமங்கள் தானங்கள் செய்பவருக்கும், ஹரி நாமசங்கீர்த்தனம் செய்தவருக்கும் பிதுர்க்களைக் குறித்து சிரார்த் தாதிகளைச் செய்பவருக்கும், திருவணை, பத்ரி முதலிய ஸ்தலங்களுக்குத் தீர்த்த யாத்திரை க்ஷேத்ராடனம் முதலியவற்றைச் செய்பவருக்கும் பிரேத ஜன்மம் அடைந்தவனால் ஒரு துன்பமும் நேராது. நற்கருமம் எதையும் செய்யாதவனுக்கும் பாகவதரை நிந்திப்பவனுக்கும் தெய்வ பக்தி இல்லாதவனுக்கும் புலால் உண்பவனுக்கும், மது அருந்துவோனுக்கும் பொய் சொல்பவனுக்கும் பிரேத ஜன்மம் அடைந்தவனால் அதிகமான துன்பங்கள் உண்டாகும்.


பாவங்களையே செய்வதும் ஆண் மக்களைப் பெறாமல் பெண்களையே பெறுவதற்கும் ஆண் குழந்தைகள் பிறந்து பிறந்து இறப்பதற்கும் சுற்றத்தாரோடு ஒற்றுமையில்லாமல் மனம் வேறுபட்டு வாழ்வதற்கும், பசுக்களை போஷிக்க முடியாமற் போவதற்கும் துண்ணெனத் துன்பங்கள் தோன்றுவதும், நண்பனோடு விரோதிக்க நேர்தலும், வைதீக உபவாச தினமாகிய ஏகாதசி தினத்தில் உபவாசமில்லாமல் அன்னம் உண்ணுதலும், ஹரி பக்தி செய்ய முடியாமல் வாழ்நாள் வீணாவதற்கும் ஜெப ஓமங்களைச் செய்ய முடியாமற் போவது பிரேத ஜன்மம் தொடர்வதினாலே நிகழும்.

மேலும், தனக்குக் கீழ்ப்பட்ட குலத்தானை தேசிப்பதற்கும் சுரரையும் பூசுரரையும் தந்தை தாயாரை இகழ்வதற்கும், அயலாரைக் கொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிப்பதற்கும் பயிர்கள் நல்விருத்தி அடைந்தும் அதற்கான பயனை அடைய முடியாமற் போவதற்கும், தனக்குத் தாழ்ந்த குலத்தில் பெண் ஒருத்தியை மனைவியாக அடைய நேரிடுவதற்கும், இழிந்தோர் செய்யும் தொழிலைச் செய்து பிழைக்க நேரிடுவதற்கும், எப்போதும் அதர்மங்களையே எண்ணுதலும், என்றும் தைரியம் இல்லாமல் இருத்தலும் அக்கினியாலும் அரசனாலும் பொருள்கள் செல்வங்கள் முதலியன அழிக்கப்படுதலும், வழியில் திருடர்களால் துன்பப்படு வதாலும் வயிற்று வலி முதலிய கொடிய நோய்க ளால் அவதிப்படுதலும், சுருதி, ஸ்மிருதி, இதிகாச புராணங்களைப் பொய் யென்று சொல்லுதலும், தெய்வபக்தி, பெரியோர் பக்தி செய்யாமலிருத்தலும், பிதுர் கர்மங்கள் விக்கினத்தால் தடைப்பட்டு குறைபட்டுப் போதலும், முகத்திலுள்ள நல்ல தோற்றம் போவதற்கும், புத்திரன் பகைவனைப் போல தூஷிப்ப தற்கும் மனைவியுடன் சேர்ந்து வாழ முடியாமல் நெடு நாட்கள் பிரிந்து வாழ்வதற்கும் அடுத்தடுத்து அவளுடன் சண்டையும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சச்சரவும் செய்வதற்கும் காரணமாக இருப்பதும் இவையெல்லாம் ஒருவனுக்கு அவன் தன் குலத்தில் பிறந்து இறந்து பிரேத ஜன்மத்தை அடைந்தவனாலேயே 'தோன்றுவனவாகும்

கருடா! எந்தக் குலத்திலே பிரேத ஜன்ம தோஷம் நேரிட்டிருக்கிறதோ, அந்த குலத்தில் துக்கமும் துன்பங்களும் சூழ்ந்து கொண்டேயிருக்கும்.

பிரேத ஜன்மத்தையடைந்தவன், பயங்கரமான முகத்தோடும், வாள் போன்ற பற்களோடும், தன் குலத்தோரின் கனவில் தோன்றி, 'ஐயையோ! என்னைக் காப்பாற்றுவோன் ஒருவன்கூட நம் குலத்தில் இல்லையோ? பசி தாகத்தோடு நான் வருந்துகிறேனே! என் பிரேத ஜன்மம் நீங்கவில்லையே!' என்று கதறுவான்! என்றார் திருமால்.

## 11. தோஷபரிகாரமும் முதன்மையானவர்களைப் பூஜித்தலும்

**நை**மிசாரணிய வாசிகளே! இவ்வாறு திருமால் கூறியதும் கருடாழ்வார், ஸ்ரீமந் நாராயண மூர்த்தியைத் தொழுது 'ஜனார்த்தனா! பிரேத ஜன்மத்தையடைந்தவன் அந்த ஜன்மத்திலிருந்து எவ்வாறு நீங்குவான்? எவ்வளவு காலம் ஒருவனுக்குப் ஜன்மம் பீடித்திருக்கும்? இவற்றைக் கூறவேண்டும் என்று பிரார்த்தித்தான்.

அதற்கு திருமால் அவனை நோக்கிக் கூறலானார்

'பட்சி ராஜனே! பிரேத ஜன்மத்தையடைந்தவன், தன் குலத்தாரின் கனவில் தோன்றினாலும் தோன்றுவான், அவ்விதம் தோன்றாமலேயே தன் குலத்தில் உள்ளவருக்குத் துன்பங்களைச் துன்பத்திற்கு மேல் செய்தாலும் செய்வான். அவன் கனவில் தோன்றினாலும் துன்பங்களைச் செய்தாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விஷயத்தைப் பெரியோரிடம் தெரிவித்து அவர்கள் விதிக்கும் தர்ம விதிகளில் சித்தம் வைத்து, மா மரம், தென்னை மரம், சண்பகம், அரசு முதலிய விருட்சங்களை வைத்துப் பயிர் செய்ய வேண்டும். மலர்ச் செடிகளையுண்டாக்கி, நந்தவனம் அமைக்க வேண்டும். அந்தணருக்குப் பூதானம் முதலியவற்றை வழங்க வேண்டும். பசுக் கூட்டங்கள் வயிறார மேய்வதன் பொருட்டு, பசும்புல் வளரத்தக்க நிலங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும். தண்ணீருக்காகக் குளம் வெட்ட வேண்டும்.

பகவத் கைங்கரியம், பாகவத கைங்கரியம் முதலியவற்றைச் செய்ய வேண்டும். கங்கை, யமுனை, காவிரி, தாமிரபருணி முதலிய நதிகளில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராடித் தான தர்மங்களைச் செய்தல் வேண்டும். துன்பங்கள் எப்போதெல்லாம் ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் இவற்றையெல்லாம் அவசியமாகச் செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், துன்பங்கள் மேலும் மேலும் விருத்தியாகும். பிரேத ஜென்மத் தோஷத்தால் தர்மச் செயல்களில் புத்தி நாடாமல் இருக்கக்கூடும். பக்தியும் ஏற்படாமல் போகலாம். புத்தி நாடாவிட்டாலும் பக்தி வராவிட்டாலும் எவன் ஊக்கத்துடன் முயன்று அந்தந்த தர்மச் செயல்களைச் செய்கிறானோ அவன் இன்பமடைவான். அதனால் பிரேத ஜன்மத்தை அடைந்தவனும் இன்பமடைந்து பூவுலகத்தையடைந்து, அங்கு தனது பிரேத சரீரத்தை நீக்கிக் கொள்வான். அவன் தனது குலம் விளங்கும் ஒரு புத்திரன் உண்டாகவுஞ் செய்வான்!' என்றருளினார்.

அதற்கு கருட பகவான், திருமாலை நோக்கி, 'ஆராவமுதே! ஒருவனுக்குத் தன் குலத்தில் ஒருவன் பிரேத ஜன்மமடைந்திருக்கிறான் என்பது தெரியவில்லை அப்பிரேத ஜன்மமடைந்தவன் சொப்பனத்தில் வந்து சொல்லவுமில்லை. அப்படியிருக்க அவனுக்கும் அவன் குலத்தினருக்கும் துன்பம் மட்டுமே உண்டாகிறது. அவன் பெரியோரிடம் அந்த விஷயத்தைச் சொல்லி செய்ய வேண்டியவை யாவை என்று கேட்கிறான். அவர்களும் பிரேத ஜன்ம தோஷத்தால்தான் இத்தகைய துன்பங்கள் நேரிடுகின்றன என்று சொல்லுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்போது அவன் செய்யத் தக்கவை யாவை? அவற்றைச் சொல்ல வேண்டும்!' என்று கேட்டான், திருமால் கருடனை நோக்கிக் கூறலானார்:

'ஓ, புள்ளரசே! இது போன்ற சமயங்களில் பெரியோர் சொல்வதைச் சத்தியம் என்றே உறுதியாக நம்ப வேண்டும். ஸ்நானம், ஜபம், ஓமம், தானம், தவம் முதலியவைகளால் ஒருவன் தன் பாவங்களை நிவர்த்தி செய்து கொண்டு, நாராயணபலி செய்தல் வேண்டும். பாவங்களை நிவர்த்தி செய்து கொள்ளாமல் பலி செய்வதற்கு முயன்றால் அது நிறைவேறாமல் செய்யும் பொருட்டுப் பூதப் பிரேதப் பைசாகங்கள் பெரிய தடைகளை ஏற்படுத்தும். ஆகையால் முதலாவதாக பாவங்களை நிவர்த்தி செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு, மற்றவைகளைப் பிறகு செய்ய வேண்டும், புண்ணிய காலங்களில் புண்ணிய க்ஷேத்திரங்களில் பிதுர்களைக் குறித்து எவன் ஒருவன் தானதர்மங்களைச் செய்கிறானோ அவன் பூதப் பிரேதப் பைசாசங்களால் தொந்திரவும் துன்பமும் அடைய மாட்டான். மனிதனுக்கு, அவனது தந்தை தாய், குரு ஆகிய மூவருமே முதல் தெய்வமாவார்கள். சரீரத்தை உண்டாக்குவதாலும் நல்ல நெறிகளைப் போதிப்பதாலும் அவர்கள் மூவருமே முதன்மையானவர்கள்.

எந்தக் காலத்திலும் அவர்களைப் பூஜிப்பது மனிதனின் கடமை. அவர்களுடைய சொற்படி நடக்க வேண்டும், தாய் தந்தையரைப் பூஜை செய்து வருகின்ற ஒருவன், தேவ ஆராதனை, பிராமண பக்தி, தீர்த்த யாத்திரை, திவ்ய தேச யாத்திரை முதலியவற்றில் எதையுஞ் செய்யாமற் போனாலும் அது பெரிய குற்றமன்று. தாய் தந்தையரைப் பூஜிக்காமல், அவர்கள் சொற்படி நடவாமல் இருந்து கொண்டு, மேற் சொன்ன அத்தர்மங்கள் அனைத்தையும் தவறாமல் செய்தாலும் அவை யாவும் வியர்த்தமாகுமேயல்லாமல், அவற்றால் சிறிதேனும் பயன் உண்டாகாது. தாய் தந்தை மரித்த பிறகு அவர்களைக் குறித்துத் தானம் தர்மங்களை எவன் ஒருவன் செய்கிறானோ அவற்றின் பயனை அவனே அடைகிறான்.

'புத்' என்ற நரகத்திலிருந்து தாய் தந்தையரைக் கரையேற்றுவதனாலேயே மகனுக்குப் புத்திரன் என்ற பெயர் உண்டாயிற்று. எவன் ஒருவன், தாய் தந்தையர் சொற்படி நடவாமல், தன் பெண்டு பிள்ளைகளின் சொற்படி நடக்கிறானோ, அவன் புலையனிலும் புலையனாவான். ஓ, கருடா! கிணற்றிலாவது நதியிலாவது விழுந்து மரித்தவனுக்கும் வாளால் வெட்டப்பட்டு இறந்தவனுக்கும் தற்கொலை செய்து கொண்டவனுக்கும் ஓராண்டுக் காலம் வரையிலும் எந்தவிதக் கிரியைகளும் செய்யலாகாது. கர்மம் செய்வதற்குள் குடும்பத்தில் திருமணம், முதலிய வைபவங்களையும் விசேஷ தர்மங்களையும் செய்யலாகாது. தீர்த்த யாத்திரை, க்ஷேத்திராடனம் முதலியவற்றிலும் ஈடுபடலாகாது. வருஷ முடிவில் கர்மம் செய்து, அதன் பிறகு யாவுஞ் செய்யலாம்' என்று கூறியருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. பிரேத ஜன்மமடையக் காரணங்கள்

ஸ்ரீமந் நாராயணர் இவ்வாறு கூறியதும் கருடபகவான், திருமகள் தலைவனைத் திருவடி தொழுது 'ஓ, அனந்த கல்யாண குண நிலையரே! ஒரு ஜீவன் எத்தகைய பாவங்களால் பிரேத ஜன்மத்தை அடைகிறான்? அத்தகைய பிரேத ஜன்மத்தை அடைந்தவன் என்ன பொருளை உண்பான் எங்கே வசிப்பான்? இவற்றை அடியேனுக்குப் புகன்றருள வேண்டும். என்று கேட்கவும் பரமபத்நாதன் பக்ஷிராஜனை நோக்கி கூறலானார்.

'புள்ளரசே! பூர்வ ஜென்மத்தில் மகாபாவம் செய்தவனே பிரேத ஜன்மத்தை அடைவான். ஒருவன் பெருவழிகளில் கிணறு, தடாகம் குளம், முதலியவற்றை வெட்டியும், தண்ணீர்ப்பந்தல் வைத்தும் சத்திரம், தேவாலயம் முதலியவற்றைக் கட்டியும் பலருக்கும் பயன்படும்படியான தருமத்தைச் செய்ய, அவனது குலத்தில் பிறந்த ஒருவன், முன்னவன் மரித்தவுடன் அவற்றை விலைக்கு விற்பானாயின், அவன் மரித்தவுடன் பிரேத ஜன்மத்தை அடைவான். மேற்சொன்ன தர்மங்களை ஒருவன் செய்து, பின்னர் ஒரு காலத்தில் அவனே அவற்றை விற்பானாகில் அவனும் பிரேத ஜன்மத்தை அடைவான்.'

'பிறருக்குரிமையான பூமியை அபகரித்தவனும் கிராமத்தின் எல்லைகளையும் வயலின் எல்லைகளையும் பூங்காவின் எல்லைகளையும், ஆரணியத்தின் எல்லைகளையும் புரட்டித் தன் நிலத்தோடு அந்த நிலத்தை சேர்த்துக் கொண்டவனும் சண்டாளனிடம் அடிபட்டு மரணமடைந்தவனும் மிருகஙகளால் கடிபட்டு இறந்தவனும் இடி விழுந்து அதனால் மாண்டவனும் நெருப்பில் குதித்து மரித்தவனும் தீயிட்டுத் தன்னைத் தானே கொளுத்திக் கொண்டவனும், மாடு முட்டி மாண்டவனும், கழுத்தில் சுருக்கிட்டு நான்று மாண்டவனும், விஷம் உட்கொண்டு உயிர் துறந்தவனும் ஆயுதத்தால் மாய்ந்தவனும் சமஸ்காரம் செய்யத் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலத்திலேயே ஒருவரும் இல்லாமல் இறந்தவனும், தேசாந்திரங்களில் ஒருவரும் அறியாதவாறு இறந்தவனும், திருடனால் மாய்ந்தவனும், விருஷோற்சர்க்கம் செய்யாமல் மாண்டவனும், தாய் தந்தையருக்குச் சிரார்த்தம் செய்யாமலேயே இருந்து இறந்தவனும் பிரேத ஜன்மத்தை அடைவார்கள்.

ஓ! வைனதேயா! பிராமணன் ஒருவன் இறந்தானென்றால், அவன் சம்பந்தப்பட்ட ஈமக்கிரியைகள் அனைத்தையுமே பிராமணன்தான் செய்யவேண்டும். எந்த ஜாதியான் இறந்தாலும், அவனது அந்திமக் கிரியைகளை, அவனவன் ஜாதியைச் சேர்ந்தவனே செய்ய வேண்டும். அவ்விதமில்லாமல் இறந்த பிராமணனுடைய சம்ஸ்காரத்திற்கான நெருப்பு, எருமுட்டை, வைக்கோல், அரிசி முதலியவற்றைச் சுடுகாட்டுக்கு ஜாதியான் எடுத்துச் செல்வானானால், இறந்த அந்தப் பிராமணனும், சம்ஸ்காரப் பொருள்களைச் சுடுகாட்டுக்குக் கொண்டு சென்றவனும் பிரேத ஜன்மத்தை அடைவார்கள். மலைமீதிருந்தோ, மலைச்சாரலில் இருந்தோ விழுந்து அந்த இடிபாட்டில் அகப்பட்டு இறந்தவனும், கட்டிலில் படுத்துத் தூங்கிக் கொண்டோ, விழித்துக் கொண்டிருக்கும் போதோ செத்தவனும், மேல் வீட்டில் உயிர் நீத்தவனும், தெய்வத் திருநாமங்களை உச்சரிக்காமல் உயிர்விட்டவனும், ரஜஸ்வாலையான பெண், சண்டாளன் முதலியோரைத் தீண்டிவிட்டு ஸ்நானம் செய்யாமல் சூதகத் தீட்டோடு இறந்தவனும், ரஜஸ்வாலையாய் இருக்கும் போது அவ்வீட்டில் இறந்தவனும், பிரேத ஜன்மத்தை அடைவார்கள்.

தாய், மனைவி, பெண், மருமகள் முதலியவர்களுடைய சரீர தோஷத்தைத் தன் கண்களால் பாராமலேயே பிறர், வார்த்தைகளைக் கேட்டு ஜாதிப் பிரஷ்டம் செய்தவனும், மனுநூலுக்கு விரோதமாகத் தீர்ப்பு வழங்குவோனும் தீர்மானஞ் செய்பவனும், அந்தணரையும் பசுக்களையும் கொல்பவனும், ஹிம்சிப்பவனும், கள் மதுபானம் முதலியவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்துவோனும், குரு பத்தினியைக் கூடியவனும், வெண்பட்டு, சொர்ணம் ஆகியவற்றைக் களவாடுவோனும் பிரேத ஜன்மத்தை அடைவார்கள். பிரேத ஜன்மம் அடைந்தோர் அனைவரும், எப்போதும் கொடிய பாலைவனங்களில் சஞ்சரித்து வருந்துவார்கள் என்றார் திருமால்.

## 13. ஜனன மரண விதிகள்

கருடபகவான் ஆதிபகவானைத் தொழுது வணங்கி, 'சர்வேசா! பூவுலகில், பிரம, க்ஷத்திரிய, சூத்திரர் நான்குவகைக் குலத்தினர் இருக்கிறார்கள் அல்லவா? அவர்களல்லாமல் மிலேச்சர் என்று ஒரு வகுப்பினரும் இருக்கிறார்களல்லவா? அவர்களில் வாலிபனாயினும், பாலனாயினும், விருத்தனாயினும், தனவானாயினும், தரித்திரன் ஆயினும், கருணையுடைய வள்ளலாயினும், கஞ்சனாயினும், கருமியாயினும், ஞானியாயினும், அஞ்ஞானியாயினும், அறிஞனாயினும், அறிவிலி ஆயினும், வித்வானாயினும், படிப்பறிவில்லாதவன் ஆயினும், உலகாளும் அரசனாயினும், ஆண்டியாயினும், பிராமணனாயினும், உத்தம பிராமணானனாயினும், மிக இழிந்த குலத்தோனாயினும் அவர்கள் ஒவ்வொரும் குறிப்பிட்ட காலத்தில் அவ்வாறு இருந்து பின்னர் இறத்தலுக்குக் காரணம் என்ன என்பதை நவின்றருள வேண்டும் என்று வேண்டினான்.

நிலங்கடந்த நெடுமுடியண்ணலான நெடுமால் 'கருடனை நோக்கி, 'வைனதேயா! நீ கேட்ட கேள்வி ஒரு சிறந்த கேள்வி தான். அதற்குரிய விடையைக் கூறுகிறேன் கேள்.' உயிரினங்கள் மரிக்கும் காலத்தில் ஜீவனைக் கவர்வதற்கென்றே காலன் என்பவன் நியமிக்கப் பெற்றிருக்கிறான். உலகத்தில் வாழ்கின்ற ஜீவர்கள், அவர்கள் செய்யும் பற்பல விதமான தோஷங்களால் ஆயுள் குறைந்து மாய்கிறார்கள். மரித்தவன் வீட்டில் உணவருந்துவோனும் பிறனுடைய மனைவியைப் புணர்வதற்கு இச்சிப்பவனும், தனக்குத் தகாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழிதொழிலைச் செய்பவனும் வாழ்நாளை இழப்பார்கள். இகவாழ்வுக்கும், பரலோக வாழ்வுக்கும் உறுதியானதான நல்வினைகளைச் செய்யாதவனும் பெரியோர்களைப் போற்றி செய்து பூஜியாதவனும், தூய்மையில்லாதவனும் தெய்வ பக்தி இல்லாதவனும், பாபங்களையே அறிந்திருந்தும் செய்பவனும் யமலோகத்தில் எப்போதும் நரகத்தில் உழல்வார்கள்.


பிறருக்குக் கேடு நினைப்பவனும் கேடு செய்பவனும், பொய்யுரைப்போனும் ஜீவன்களிடத்தில் கருணை இல்லாதவனும், சாஸ்திர முறைப்படி வாழாதவனும், தனக்குரிய அறநெறிகளைத் தவிர்த்து, பிறருக்குரிய கர்மங்களைச் செய்பவனும் யமலோகத்தில் வேதனைப்படுவார்கள். புண்ணிய தீர்த்தம் ஆடாத நாளும், ஜபவேள்விகள் செய்யாத திவசமும், தேவாராதனை செய்யாத தினமும், புனிதரான மஹான்களையும் உலகிற்கு நல்லவைகளைச் செய்யும் நல்லவர்களை வழிபடாத பகலும், சாஸ்திரம் உணராத நாளும், வீணாளேயாகும். சூத்திரமரபில் பிறந்தவன் பிரம குலத்தினரே தெய்வம் என்று நினைத்துப் பக்தி செய்து, அவரிட்ட தொழிலைப் புரிந்து, தாசனாய் இருப்பானாகில், அவன் நற்கதியை அடைவான். அவன் வேறொரு கர்மமும் செய்ய வேண்டுவது இல்லை. அவன், உயர்ந்த ஜாதியருக்குரிய கர்மங்களைச் செய்வானேயாகில் நலிவுறுவான்.

கருடா! மனித தேகம் என்ன, பூவுலகில் உடலோடு சஞ்சரிக்கும் எந்த ஜீவனின் தேகமும் நிச்சயமற்றது. நிராதாரமானதாகவுள்ளது. சுக்கில சுரோணிதத்தால் உண்டாவது. அன்னபானாதிகளால் விருத்தியடைவது காலையில் வயிறு நிரம்ப உண்ட அன்னம் மாலையில் நசித்துவிடும். உடனே பசிக்கும். மீண்டும் அன்னம் உண்ணாவிடில் மெய் தளரும், குலையும், ஆகையால் சரீரம் அநித்தியமானதென்றும் அது கர்ம வினையினால் வருவது என்றும் எண்ணி மீண்டும் பூவுலகில் பிறவி எடுக்காமல் இருக்கும் பொருட்டு, நற்கர்மங்களைச் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ, வைனதேயா! பூர்வ கர்மத்தால் வருகின்ற தேகத்தை யாருடையது என்று கூறலாம்? அதை வீணாகச் சுமந்து திரிந்து மெலிகின்ற ஜீவனுடையது என்று சொல்லலாமா? அன்னவஸ்திரம் கொடுக்கும் தலைவனது எனலாமா? கர்ப்பமுண்டு பண்ணும் தந்தையினுடையது எனலாமா? பத்து மாதம் சுமந்து பெற்ற தாயினுடையது எனலாமா? பெற்றவனாகிய மாதா மகனது எனலாமா? பிதாவைப் பெற்ற பிதா மகனது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனலாமா? விலை கொடுத்து அடிமைப்படுத்தும் எஜமானனது எனலாமா? தொழில் கொடுத்து கூலி கொடுக்கும் மற்ற ஜீவனது எனலாமா? உடலைச் சாம்பலாக்கும் அக்கினியுடையது எனலாமா? அல்லது அதனை ஈர்த்து பிய்த்துண்ணும் குள்ள நரிக்குரியது எனலாமா? ஜீவன் போன பிறகு புழுவாகவும் விஷ்டையாகவும் சாம்பலாகவும் அழியும் உடலானது, ஒருவருடையதும் அல்லவென்று முடிவதை அறிந்து ஓர்ந்து, சரீரத்தின் மீது ஆசை வைக்காமல், பகவத், பாகவத ஆசாரிய கைங்கரியங்களைச் செய்ய வேண்டும்.

பாபங்கள் என்பவை மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் செய்யப்படுகின்றன. அதிகமான பாவங்களைச் செய்தவன் நாய் நரி முதலிய இழிந்த ஜன்மம் அடைவான். ஜீவன், கர்ப்பவாசம் செய்யும் காலத்தில், தாயினுடைய மல மூத்திராதிகளால் அதிகமாகத் துன்பங்களையடைவான். இறப்பதைவிட பிறப்பதில் உள்ளதான துன்பத்தையும் கர்மாதியையும் எண்ணி, ஜீவனானவன் நல்ல ஒழுக்க நற்பண்புகளுடன் ஜீவிக்க வேண்டும். தாய் வயிற்றில் இருந்து பிறந்தவன் பால்ய வயதில் உண்ட விளையாட்டுகளால் தனக்கு உறுதியாக உள்ளது எது என்பதை அறிவதில்லை. முதுமைப் பருவத்தில் சோர்வாலும் கிலேசத்தாலும் ஒன்றையும் உணர்வதுமில்லை. இவ்விதம் உறுதியை உணராமல் ஒழிபவரே மிகப் பலராவர். பூர்வ ஜன்ம புண்ணியத்தால் உறுதியானதை உண்பவன் எவனோ, அவனே நிரதிசய இன்ப வீடாகிய நமது உலகையடைவான்.

கர்ம வினைகளாலேயே ஜீவன் பிறந்து பிறந்து இறக்கிறான். பிறந்து அதிக வயது உலகில் வாழாமல் ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக மரிப்பது என்பது மகா பாபத்தினால் என்பதை அறிவாயாக. கொடிய பாவம் செய்தவனே பிறந்தவுடனே மரித்து, மீண்டும் பிறந்து மடிகிறான். அவன் பிறத்தலுக்கும் இறத்தலுக்கும் கணக்கென்பதில்லை. பூர்வ ஜன்மத்தில் நல்ல நெறிப்படி வாழ்ந்து, தான தர்மங்களை மனங்கோணாமல் செய்து வரும் சேதனன், பூமியில் பிறந்தால் அவன் தன் மனைவி மக்களோடு நெடுங்காலம் சுகமாக வாழ்ந்து இறுதியில் நல்லுலகம் சேர்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ! வைனதேயா! கர்ப்பந் தரித்த ஆறு மாதத்திற்குள் அந்தக் கர்ப்பம் எந்த மாதத்திலாவது கரைந்து விழுந்ததாயின் விழுந்த மாதம் ஒன்றாயின் ஒரு நாளும், இரண்டானால் இரண்டு நாட்களும், மூன்றாயின் மூன்று நாட்களும், நான்காயின் நான்கு நாட்களும், ஐந்தாயின் ஐந்து நாட்களும், ஆறாயின் ஆறு நாட்களும், கர்ப்பத்தை கருவுற்றிருந்த மாதாவுக்கு மட்டுமே சூதகத் தீட்டு உளதாகும். பிதாவுக்கு அத்தீட்டு இல்லை. அவன் செய்ய வேண்டிய கர்மமும் ஒன்றுமில்லை. கருவழியாமல் பத்தாம் மாதத்தில் பிறந்து, மூன்று வயதுக்குள் மாண்டால், இறந்த அந்தக் குழந்தையை உத்தேசித்து பால் சோறும் தயிர் சோறும் ஊர்க் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். மூன்று வயதுக்கு மேல் ஐந்து வயதுக்குள் ஒரு குழந்தை இறந்து போகுமானால் மேற்சொன்னது போலவே பாலர்களுக்கு அன்னங் கொடுத்தல் வேண்டும். இவ்வி தமில்லாமல் பிறந்த மாதத்திற்குள் பிறந்த குழந்தை இறந்தால் அந்தந்த வர்ணத்தாருக்குரியப்படி செய்து தீர்த்தமும் பாலும் பாயசம் முதலிய உணவுப் பொருள்களைத் திரவ வடிவில் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும்.



உலகில் பிறந்தவன் இறப்பதும் இறந்தவன் மீண்டும் பிறப்பதும் திண்ண மாகையால் இறந்த பிறகு மீண்டும் மறு பிறவி யெடுக்காமல் மீளாவுலகெய்ய முயற்சி செய்யவேண்டும். அவ்விதம் முயற்சி செய்யாமலும், தானதர்மங்களைச் செய்யாமலும் வாழ் நாட்களையெல்லாம் வீண் நாட்களாக்கி விட்டு மாய்ந்த ஜீவன், பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்ற குலங்களில் ஏதேனும் ஒரு குலத்தில் தோன்றினாலும், ஒரு நாளில் ஒரு வேளை கூடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசியார உண்ண வழியற்ற தரித்திரனுக்குப் புத்திரனாகப் பிறந்து, கூழ் குடிப்பதற்கு வகையில்லாமல் வருந்தி விரைந்து மடிந்து மீண்டும் பிறப்பான்

'ஓ வைனதேயா! ஒருவன், தான் இறந்தால், மறு ஜன்மத்திலாவது உயர்ந்த குலத்தில் பிறக்க வேண்டும். உலகம் முழுவதையும் ஆள வேண்டும். சகல சாஸ்திரங்களிலும் நிகரற்ற நிபுணனாக விளங்க வேண்டும் என்று கருதி அதற்குரிய கர்மங்களைச் செய்வதை விட ஜென்மமே வராமைக்கு உரிய கர்மங்களைச் செய்வதே மிகவும் நல்லது. தீர்த்தயாத்திரை செய்து புனிதநதிகளில் நீராடியவன் மனத்தூய்மையும் அடைவான். பொய் சொல்லாமல், கீழ்ப்படிதலுடன் இன்சொல் பேசுவோன் சாஸ்திர சம்பன்னனாவான். ஏராளமான சம்பத்துகள் இருந்தும் தான தர்மஞ் செய்யாதவன், மறுபிறவியில் தரித்திரனாகப் பிறப்பான். ஆகையால் மனிதன், தனக்கு உள்ள சம்பத்துக்குத் தக்கபடி தான தர்மன் செய்ய வேண்டும்' என்று திருமால் கூறினார்.

## 14. புத்திரர்கள், பௌத்திரர்கள் கர்மம்

ஸ்ரீயப்பதியான ஸ்ரீமந் நாராயண மூர்த்தியானவர், கருடாழ்வானை நோக்கிக் கூறலானார்:

'ஓ காசிப புத்திரனே! மேலே சொன்னதைத் தொடர்ந்து இனி நான் சொல்லப் போவதையும் கேட்பாயாக. பூர்வஜன்மத்தில் செய்த பாபத்தினாலேயே உலகில் பிறவியெடுத்த ஜீவன் மரிக்கிறான். கர்ப்பத்திலேயே கருவானது சிதைந்து விட்டால், ஒரு கிரியையும் செய்ய வேண்டுவதில்லை. ஐந்து வயதுக்குட்பட்டு இறந்தால், சாஸ்திரத்தில் கூறியுள்ளபடி செய்து ஊர்க் குழந்தைகளுக்கு, பால், பாயாசம், போஜனம் முதலியவற்றை வழங்க வேண்டும். குழந்தை இறந்த பதினொன்றாம் நாளும் பன்னிரண்டாம் நாளும் சாஸ்திரத்தில் சொல்லி உள்ளது போலச் சில கர்மங்களைச் செய்யலாம். விருஷோற்சனமும், விசேஷ தானங்களையும் ஐந்து வயது குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரித்ததிற்காகச் செய்ய வேண்டியதில்லை. மரித்தவன் பாலகனாயினும் இளைஞனாயினும் விருத்தனாயினும் உதககும்ப தானத்தை அவசியம் செய்ய வேண்டும். மூன்றாம் வயது ஆவதற்குள் மரித்து விடுங் குழந்தைகளைப் பூமியில் புதைக்க வேண்டும். இருபத்து நான்காவது மாதம் முடிந்து இருபத்தைந்தாவது மாதம் பிறந்தவுடனே இறந்த குழந்தைகளை அக்கினியில் தகனஞ் செய்ய வேண்டும். பிறந்த ஆறு மாதங்கள் வரையில் சிசுவென்றும் மூன்று வயது வரையில் பாலகன் என்றும் ஆறு வயது வரையில் குமரன் என்றும் ஒன்பது வயது வரையில் பவுண்டகன் என்று சொல்ல வேண்டிய தென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

வைனதேயனே! பிறந்த பதினாறு மாதம் வரையில் சிசுவென்றும் இருபத்தேழு மாதங்கள் வரையில் பாலகன் என்றும் ஐந்து வயது வரையில் குமரன் என்றும் ஒன்பது வரையில் பவுண்டகன் என்றும் பதினாறு வயது வரையில் கைசோரன் என்றும் சொல்வதுண்டு. கடைக் குலத்தில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த எந்த ஜாதியாரும் பூணூலை அணியலாகாது. பிரம, சத்திரிய, வைசியரே பூணூல் அணிதல் வேண்டும். ஐந்து வயது நிறைந்ததும் பூணூல் பூண்டேனும். பூணாமலேனும் ஒருவன் இறப்பானாகில் அவனைக் குறித்து அதிக மந்திரங்களைச் சொல்லாமல், பத்து நாட்களுக்குப் பிண்டம் போட வேண்டும். அவ்வாறு இறப்பவனுக்கு உடலோடுங்கூடிய வாழ்வும், பெற்றோரோடு சிநேகமும், விஷயங்களில் உடன்பாடும் மற்றவையும் சிறிது காலமேயாகையால், கிரியைகளும் குறைவாயிற்று. ஐந்து வயதுக்கு மேல், பன்னிரண்டு வயதிற்குள்ளேனும் அல்லது பன்னிரண்டு வயது நிரம்பியேனும் மரித்து விட்டால் விருஷோற்சனம் முதலியவற்றைச் செய்ய வேண்டும். ஆனால் சபிண்டீகரணம் செய்யலாகாது. பால் தயிர், வெல்லம் முதலிய வற்றைச் சேர்த்துப் பிண்டம் போடல் வேண்டும். குடம், குடை தீபம் முதலியவற்றைத் தானம் செய்ய வேண்டும்.

அப்படிச் செய்யாவிட்டால் இறந்தவன் மறுபிறவியில் உலகத்தில் மரமாகத் தோன்றுவான. அந்த மரம் நெல் குத்தும் உலக்கை செய்யப் பயன்பட்டு விடும். பூணூலை இடது பக்கம் தரித்துக் கொண்டு, தருப்பையுடன் ஏகோதிஷ்டி சிரார்த்தங்களைச் செய்தால், மரித்தவன் மறுஜன்மத்தில் பிறந்து தீர்க்காயுளுடன் வாழ்வான். நல்ல புத்திரனையும் பெறுவான். தனக்குத் தன்னுடைய ஆன்மாவே புத்திரனாக ஜனித்தல் உண்மை ஆகையால் புத்திரன் இறந்து விட்டான் என்றால் அந்தப் புத்திரனுக்கு அவனுடைய தந்தையும், தந்தை மாய்ந்தால் அவனுடைய புத்திரனும் கர்மம் செய்ய வேண்டும். ஒருவன், தனக்குத் தானே புத்திரன் ஆகிறான் என்று வேதஞ் சொல்லுகிறது

'சூரியன் ஒருவனே உளன் சந்திரன் ஒருவனேதான். தண்ணீர் நிறைந்த குடங்களை வரிசையாக வைத்து, அவற்றின் உள்ளே பார்த்தால், ஒவ்வொரு குடத்திலும் பகற்பொழுதில் சூரியனும், பௌர்ணமி இரவுகளில் சந்திரனும் தோன்றுவது போல ஒருவனே தனக்குப் பல புத்திராகளாகப் பிறக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகையாலேதான் பெரும்பாலான பிள்ளைகள் தந்தையைப் போன்ற உருவமும் அறிவும் ஒழுக்கமும் உடையவர்களாக விளங்குகின்றார்கள். ஆயினும் குருடனுக்குக் குருட்டுப் பிள்ளையும், ஊமைக்கு ஊமைப்பிள்ளையும், செவிடனுக்கு செவிட்டுப் பிள்ளையும் பிறத்தல் என்பது இல்லை. எனவே தந்தைக்கு அமைந்துள்ள சிறப்பான அம்சங்களில் ஏதேனும் ஒன்று தனயனுக்கும் பொருந்தியிருக்கும் என்றார் திருமால்.

கருட பகவான், பரம் பதியை வணங்கித் தொழுது துதித்து, 'ஜெகந்நாதா! உலகில் தன் புத்திரன் என்றும் தன் மனைவி வயிற்றில் பிறந்த புத்திரன் என்றும், புத்திரர்கள் பத்து வகையினராக இருக்கிறார்கள் என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஒருவன் விலைமகளைப் புணர்ந்து, ஒரு புத்திரனைப் பெற்றான் என்றால் அந்தப் புத்திரன் அவனுக்குக் கருமம் செய்யலாமா? அவ்வாறு அந்த விலைமகளுக்குப் பிறந்த பிள்ளை அவனுக்குக் கருமஞ் செய்தால், அவனுக்கு நல்லுலகம் கிடைக்குமா? ஒருவனுக்குப் பிள்ளையே பிறக்காமல் பெண் மட்டுமே பிறந்திருக்கிறாள். அந்தப் பெண் வயிற்றுப் புத்திரனும் இலன். அவன் மரித்தால் அவனது கருமத்தை யார் செய்ய வேண்டும்? இவற்றை விளக்கியருள வேண்டும் என்று கேட்டான் பக்தவத்சலனாகிய பரமன், கருடனை நோக்கி கூறலானார்:

புள்ளரசே! ஒருவன் தனக்கே தனது இல்லாள் வயிற்றில் பிறந்த பிள்ளையின் முகத்தைத் தன் கண்ணால் பார்த்து விட்டானென்றால், 'புத் என்ற நரகத்தை அந்த ஜன்மத்தின் இறுதியில் காணமாட்டான். மணம் புரிந்து கொண்ட ஒருவனுக்கும் ஒருத்திக்குமே புத்திரன் பிறந்தால் அவன் குலத்துப் பிதிர்த்தேவர்கள் எல்லாம் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள். ஒருவனுக்குப் பத்துப் புத்திரர்கள் பிறந்தார்கள் என்றால் அவர்களில் முதல் மகனே அதாவது தலைச்சனே தன் தந்தை மரித்தால் அவனது ஈமக்கிரியைகளையும் கர்மங்களையும் செய்யக் கடமைப்பட்டவன் உரிமையும் உடையவன் மற்ற ஒன்பது புத்திரரும் அவனது இகலோக வாழ்வுக்குச் சாதகமாவார்களே அன்றிப் பரலோக சாதகத்துக்கு உரியவராக மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குத் தன் மனைவியின் வயிற்றில் பிறந்த புத்திரன்தான் மரித்த காலத்தில் செய்யத்தக்க செய்கடன் எல்லாம் செய்யத்தக்கவன் செய்யக் கடமைப்பட்டவனும் ஆவான் மற்ற புத்திரர்கள் இருந்தால் இவர்கள், இறந்த தகப்பனைக் குறித்து சிறிது கர்மங்களும் சிரார்த்திகளையுமே செய்யக்கடவர். ஒருவன், தனக்குப் பௌத்திரன் பிறந்து அவனை எடுத்துப் பார்த்த பிறகு மரிப்பானாகில் இறுதிக் காலத்தில் அவன் நல்லுலகை யடைவான். கொள்பேரனைப் பார்த்த பிறகு மாண்டவன் அதைவிட நல்லுலகையடைவான். பெண்ணைப் பெற்றவனுக்கு வாய்க்கும் மணமகன், அந்தப் பெண்ணுக்கு விலை கொடாமல், திருத்துழாயோடு அவன் கன்னிகாதானம் செய்து கொடுக்க, அவளை மணம் புரிந்து கொண்டு அவளோடு வாழ்ந்து புத்திரனைப் பெறுவானேல், அந்தப் புத்திரன் தன் குலத்து இருபத்தொரு தலைமுறையினரையும் கரையேற்றுவான்.

அவ்வாறு பிறந்த புத்திரனே தந்தையருக்குக் கர்மஞ் செய்யத் தக்க உரிமையுடையவன். ஒருவன் மரித்தால் அவனுடைய காதற் கிழத்தியின் மகன் சிறிது கருமம் மட்டுமே செய்யலாம். அவன் தான் செய்யத் தகுந்த சிறிதளவு கர்மத்தைச் செய்வதோடு நிற்காமல் முற்றும் செய்வானாயின் செய்தவனும் மரித்தவனும் நரகம் சேர்வார்கள். ஆனால் காமக் கிழத்தியின் மகன், தன்னைப் பெற்றவனைக் குறித்து ஆண்டுதோறும் சிரார்த்தம் செய்யலாம். பெற்றவனைக் குறித்தன்று அவன் தலைமுறையில் உள்ளோரைக் குறித்து ஒன்றும் செய்யலாகாது. காமக் கிழத்தியின் புத்திரராயினும் அவர்களைப் பெற்றவன் இறந்தால் அவனைக் குறித்துத் தானங்களைச் செய்யலாம். அந்தணர்க்குப் போஜனம் முதலியன செய்விக்கலாகாது. போஜனத்தின் பொருட்டு அரிசி முதலியவற்றைக் கொடுக்கலாம். அதைக் கொடுக்காமல் சொந்த மனைவிக்குப் பிறந்த மகனைப் போலவே தன்னை நினைத்துக் கர்மங்களைச் செய்யலாகாது.

சற்புத்திரன் தீர்த்த யாத்திரை செய்யலாம், தனது பிதுரரைக் குறித்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்ன ரூபமாயும் ஆமை ரூபமாயும் ஹிரண்ய ரூபமாயும் சிரார்த்தத்தைச் செய்யலாம். வேசி புத்திரன் தீர்த்த யாத்திரை செய்யின், அன்ன ரூபம் தவிர மற்ற இரண்டு ரூபங்களில் எந்த ரூப சிரார்த்தத்தையும் செய்யலாம். சூத்திர மரபில் எந்த ஜாதியராயினும் அன்ன ரூபமாய்ச் சிரார்த்தம் செய்தால், செய்தவனும் சாப்பிட்ட பிராமணனும் பிதுர்த்தேவரும் நரகமடைவது போல வேசி புத்திரன் அன்ன சிரார்த்தம் செய்வானாயின், அவனும் சாப்பிட்ட பிராமணனும், பிதுர்த்தேவரும் மீளா நரகம் எய்துவார்கள்.

'பறவையரசே! ஒரு பார்ப்பனிக்கும் பிராமண சாதிக்குத் தாழ்ந்த ஜாதியான் ஒருவனுக்கும் பிறந்த புத்திரனும், பிராமணன் மகளுக்கும் சந்நியாசிக்கும் பிறந்த புத்திரனும், பிரம்மகுல மங்கைக்கும் சூத்திரனுக்கும் பிறந்த புத்திரனும், சகோத்திரத்தில் மணஞ் செய்து கொண்டவருக்குப் பிறந்த புத்திரனும் சண்டாளராவர். ஒருவன் தன்னுடைய ஜாதியிலேயே ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு, அவள் மூலம் பெறுகின்ற புத்திரனே சிரேஷ்டமானவன். ஆகையால் மக்கள் அனைவரும் சற்புத்திரனையே பெறுதல் வேண்டும்!' என்றார் திருமால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. சபிண்டிகரணமும் சதிபதிகளும்

**ப**கவான் அவ்வாறு பிதுர்க் கர்மம் செய்வதற்கு உரிமையுடையவன் யார் என்பதைக் கூறிய பிறகு கருடன் அச்சுதபிரானைத் தொழுது வணங்கி, ஓ சர்வ ஜகந்நாதா! இறந்தவனைக் குறித்து சபிண்டீகரணம் என்ற சடங்கை எப்போது செய்ய வேண்டும்? சபிண்டீகரணம் செய்வதனால் இறந்தவன் அடையும் பயன் என்ன அவன் எக்கதியை அடைவான்? அதைச் செய்யாவிட்டால் அவன் எந்தக் கதியை அடைவான்? எப்போதோ மரித்தவனுக்கும் அண்மையில் மரித்தவனுக்கும் பிண்டம் ஒன்று சேர்ப்பது எவ்விதம்? ஒன்று சேர்த்தால் அவர்கள் எக்கதியடைவார்கள்? அகமுடையான் உயிரோடு இருந்து அகமுடையாள் இறந்ததால் அவளுக்குச் சபிண்டீகரணம் செய்வது எப்படி இவற்றையெல்லாம் உலக நன்மையைக் கருதி அடியேனுக்குக் கூறியருள வேண்டும் என்று வேண்டினான்.

அதற்கு, ஆதிமத்யாந்த ரஹிதராண ஸ்ரீகேசவபிரான் கருடனை நோக்கி கூறலானார்.

'ஓ விநுதையின் மகனே! உலக வாழ்வை விட்டு, உடலையும் விட்டு மாண்டவனுக்கு வருஷம் முடியும்வரை சகலமும் சாஸ்திரப்படிச் செய்து, சபிண்டீகரணமும் செய்து, அவன் குலத்தில் முன்னமே மாண்டவருடைய பிண்டத்தோடு, இறந்தவனுக்குரிய பிண்டத்தையும் சேர்த்தல் வேண்டும். அவ்வாறு செய்தால், இறந்தவன் பிரேதத்துவம் நீங்கி, பிதுர்த் தேவர்களோடு சேர்ந்து கொள்வான். இறந்தவன் இறந்த பன்னிரண்டாம் நாளிலும் மூன்றாவது பக்ஷத்திலும் ஆறாவது மாதத்திலும் சபிண்டீகரணம் செய்யலாம். தந்தை இறக்க, அவன் புத்திரன் தந்தைக்குரிய கருமங்கள் எல்லாவற்றையுஞ் செய்து சபிண்டீகரணம் மட்டுமே செய்யாமல் நிறுத்தி வைத்திருக்குஞ் சமயத்தில், கர்மஞ் செய்த புத்திரனுக்கு கல்யாணஞ் செய்ய நேரிட்டால் உடனடியாகச் சபிண்டிகரணத்தைச் செய்த பிறகுதான் மணவினையைச் செய்தல் வேண்டும். சபீண்டிகரணம் செய்யும் வரையில் மாய்ந்தவன் பிரேரத்துவத்துடனேயே இருப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகையால் கருமஞ் செய்தவனுக்கு சிறிது அசுத்த தோஷம் இருக்கும். ஆகையால் அவன் சுபகாரியங்களில் ஒன்றைக்கூடச் செய்யலாகாது. சந்நியாசிகளுக்குக்கூடப் பிக்ஷையிடல் ஆகாது. பிண்டம் சேர்த்த பிறகு, இறந்தவன் பிரேதத்துவம் நீங்கி, பிதிர்த்துவம் பெற்று மகிழ்வான். ஆதலாலும் தேகம் அநித்திய மாதலாலும், கிருத கிருத்தியம் பலவிதமாதலாலும் பன்னிரண்டாம் நாளிலேயே சபிண்டீகரணம் செய்வது மிகவும் உத்தமமாகும். ஔபாசனம் செய்வதற்கு விக்கினம் நேரிட்டாலுங்கூட பன்னிரண்டாம் நாளில் சபிண்டீகரணத்தைச் செய்யலாம். சபிண்டீகரணம் செய்த பிறகு தாய் தந்தையர் குலத்தில் மூன்று தலைமுறையில் உள்ளவருக்கும் சிரார்த்தம் செய்ய வேண்டும். ஒருவருக்கு மட்டுமே சிரார்த்தம் செய்யக்கூடாது. சோடசம், சபிண்டீகரணம் முதலியவற்றைச் செய்தால் இறந்தவன் பிரேதத்துவம் நீங்கி பிதுர்களோடு சேர்ந்து மகிழ்ந்து இன்பமடைவான். பெண்ணைப் பெற்றவன் பொருள் சிறிதும் வாங்காமல், அந்தப் பெண்ணைக் கன்னிகாதானம் செய்திருந்தால், பின்பு அவன் இறந்தால் அவளுடைய அகமுடையான் கோத்திரத்தைச் சொல்லி, சமஸ்த கிரியைகளையுஞ் செய்தல் வேண்டும்.

இறைச்சியை விற்பவனைப் போலப் பெண்ணைப் பெற்றவன், விலைபெற்றுப் பெண்ணைக் கொடுத்திருந்தால் அவள் மாண்டு போனால் அவளுக்கு அவளுடைய பிதாவின் கோத்திரத்தைச் சொல்லிக் கிரியைகளைச் செய்ய வேண்டும். பிதாவுக்கு புத்திரன் மட்டுமே கர்மம் செய்தல் வேண்டும், புத்திரன் இல்லாவிட்டால் இறந்தவனுடைய கனிஷ்டனாயினும் ஜேஷ்டனாயினும் அவர்களில் ஒருவனுடைய புத்திரர்களாயினும் கர்மம் செய்ய வேண்டும். மாய்ந்தவனுடைய சகோதரர்கள் பங்கு பிரித்துக் கொண்டு தனித் தனியாக வாழ்வாராயின், அவனுடைய அக முடையாள் கர்மம் செய்ய வேண்டும் இறந்தவனுக்கு அவனுடைய புத்திரனும் சகோதரரும், அவர்களுடைய புத்திரரும், மனைவியும் இல்லாவிட்டால், மரித்தவனுடைய தாயாதி செய்ய வேண்டும். தாயாதி இல்லாவிட்டால், அவனுக்கு மாணாக்கன் இருந்தால் அவன் கர்மம் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற் சொன்னவர்களில் ஒருவருமே இல்லாவிட்டால், புரோகிதனே இறந்தவனுக்குரிய கர்மங்களைச் செய்யலாம். நாலைந்து பேர் சகோதரர்கள் இருந்து, அச்சகோதரர்களில் ஒருவருக்கு மட்டுமே புத்திரன் இருந்தால், மற்ற சகோதரர்களும் புத்திரன் உடையவரேயாவர். அவ்விதமாகவே, ஒருவனுக்கு நாலைந்து மனைவியர் அவர்களில் ஒருத்திக்கு மட்டுமே புத்திரன் இருந்தால் மற்ற மனைவியரும் புத்திரனுடையாரேயாவர். புத்திரன் பூணூல் அணிவதற்கு முன்னமே தந்தை இறந்தால், அந்தப் புத்திரனே கர்மம் செய்ய வேண்டும். புத்திரனைப் பெறாதவள் இறந்தால், அவளுக்கு அவளுடைய கணவனே கருமஞ் செய்ய வேண்டும். இறந்தவனுக்காக சபிண்டீகரணம் செய்த பிறகு, தெரியாமையினாலாவது பிதுர்த் தேவர்கள் அனைவரையும் குறித்தல்லாமல் இறந்தவனை மட்டுமே குறித்துச் சிரார்த்தம் செய்தால், இறந்தவனும், சிரார்த்தம் செய்பவனும், சிரார்த்தத்தைச் செய்விக்கின்ற புரோகிதனும் நரகம் அடைவார்கள். இறந்தவனுக்குப் பலர் இருந்தாலும் ஓராண்டு வரையிலும் ஒருவனே கிரியைகள் அனைத்தையுஞ் செய்ய வேண்டும். வருஷம் முடியும் வரை, நித்திய சிரார்த்தத்தோடு ஒரு குடத்தில் புனல் நிறைத்து உதக கும்ப தானத்தைச் செய்தல் வேண்டும். கர்மங்களைத் தவறாமல் செய்தால், இறந்தவன் விமானம் ஏறி நல்லுலகை அடைவான்.

பாட்டன் உயிரோடு இருக்கும்போது தகப்பன் இறந்தால் அவனுக்குச் சபிண்டீகரணம் செய்யலாகாது. பாட்டன் இறந்த பிறகு அந்தப் பாட்டனுக்குச் சபிண்டீகரணம் செய்து, பின்பு இறந்த தந்தைக்குச் செய்ய வேண்டும். பிதாவும் பிதாவைப் பெற்ற பாட்டியும் உயிரோடு இருக்கும் போது, தாயார் இறந்தால் அவளுக்கு சபிண்டீகரணம் செய்யக்கூடாது. அவர்கள் இருவரும் இறந்த பிறகு, அவர்களுக்குச் சபிண்டீகரணஞ் செய்த பிறகுதான் தாய்க்குச் செய்ய வேண்டும் ஓ, வைனதேயா! இந்த விதியே உறுதியானதல்ல. இது ஒரு பக்ஷம் என்க. எவள் ஒருத்தி, தன் கணவனையே தெய்வம் என்று பதிபக்தியோடு வாழ்ந்தும், அவன் இறந்த பிறகு, சரீரத்தோடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிதைத் தீயில் தன்னுயிரையும் விடுகிறாளோ, அவள் எல்லோரையும் விட நற்கதியை அடைவாள். அவள் மகா பாவங்களைச் செய்தவளேயானாலும் தன் கணவன் இறந்ததும் அவனுடன் உயிர் மாய்த்துக் கொண்டதால், அவள் மகா புண்ணியவதியாகிக் கணவன் பாவியாக இருந்தாலும் அவனையும் புண்ணியவானாக்கிச் சுவர்க்கலோகத்தில் அவனோடு சுகமாக வாழ்வாள்.

அவ்வாறு இறந்த தாய்க்கும் தந்தைக்கும் அவர்களுடைய புத்திரன் ஒரே சபிண்டீகரணம் செய்தல் வேண்டும். விருஷோற்சர்க்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானங்களையும் தனித்தனியாகச் செய்தல் வேண்டும். அவர்கள் இருவருக்கும் தனித்தனியாக பிராமணர்களை வரித்துச் சிரார்த்தம் செய்ய வேண்டும். ஓராண்டு வரையில் யாவற்றையும் தனித் தனியாகச் செய்தால் அவர்களிருவருமே திருப்தியடைவார்கள். புண்ணிய க்ஷேத்திரங்களிலும் கிரகணம், மாளய அமாவாசை முதலிய புண்ணிய காலங்களிலும் அவ்விருவருக்கும் சிரார்த்தஞ் செய்து வேறுவேறாகப் பிண்டம் போட வேண்டும். மாசு மூடிய பொண்ணை அக்கினியிலிட்டால், அவ்வக்கினியானது அந்த மாசை மட்டுமே போக்கடித்து பொன்னைக் கெடுக்காதது போல கணவனோடு உயிர் விடும் புண்ணியவதியின் மேனியை அவ்வக்கினியானது தகிக்குமேயல்லாது, அவளைச் சிறிதும் வருத்தாது.

தாய், தந்தை, மகன், மக்கள், பேரன், அண்ணன், தம்பி முதலியோரையும் மற்றுமுள்ள சுற்றத்தாரையும், மனை முதலிய பொருள்களையும் உயிரையும் துறந்து, தன் கணவனையே தெய்வம் என்று உறுதியாகக் கருதி, அவனைப் பிரிந்து வாழக்கூடாது என்று அகமுடையானோடு உயிர் துறக்கும் உத்தமிக்கு ஒப்பானவர் உலகில் யார் உள்ளனர்? சக்கமனஞ் செய்த புண்ணியவதியானவள், மூன்றரைக் கோடி தேவ வருஷம் வரையில் சுவர்க்கலோகத்தில்தன் கணவருடன் இன்புற்றிருப்பாள். பிறகு ஒரு மகாயோகினியின் குலத்தில் கணவனும், மற்றொரு மஹாயோகினியின் குலத்தில் தானும் பிறந்து, அவனையே மீண்டும் தன் கணவனாக அடைந்து, தன் யோகச் சிறப்பினால் மேன்மையடைவாள். நாயகனுடன் இறவாத மங்கை, எந்த ஜன்மத்திலும் துக்கத்தையும் துன்பத்தையுமே அடைவாள். பிறனுக்கு உடன்பட்டு, விருப்பப்படியே அவன் நடந்து, அவன் ஏவலால், கணவனை இகழ்ந்து, பிறந்த குலத்துக்கும் தோஷம் உண்டாக்கும் பெண் பேயானவள் என்றுமே மீளாத நரகத்தையே அடைவாள்.

கணவன் நல்லவனாயினும் கெட்டவனாயினும், அறிஞனாயினும் அறிவிலியாயினும், அவன் உயிரோடிருக்கும் போதும் அவன் இறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகும் கணவனையே தெய்வம் என்று பக்திசெய்து கற்பு ஒழுக்கத்தில் நிலை நிற்பவளே உத்தமியாவாள். கொண்ட கணவனை மதிக்காமல் அலக்ஷியம் செய்து, தன் இஷ்டம்போல அலைபவள், 'சீசி! இவளும் ஒரு பெண்ணா என்று பலராலும் ஏசப்பட்டு மறு ஜன்மத்தில் ஒரு பரமதுஷ்டனைக் கணவனாக அடைந்து அவனால் அடுத்தடுத்து கண்டிக்கப்பட்டும், தண்டிக்கப்பட்டும் வருந்தி மிகவும் துன்பமடைவாள்.

கணவன் தெய்வ வழிபாடு, அதிதி ஆராதனை, விரதானுஷ்டானம் முதலியவற்றைச் செய்வானாகில், மனைவியும் அவனுக்கு அனுகூலமாக யாவையுஞ் செய்யவேண்டும். பிராமண குலத்தாருக்கு எப்படி நான்காவது வருணத்தார் ஏவல் செய்வதே குலத்திற்குரிய தர்மமாகுமோ, அதுபோலவே, கணவனுக்குப் பணி செய்வதே தர்ம பத்தினியின் தர்மமாகும். இந்தத் தருமம், எல்லாச்சாதியருக்கும் பொதுவாகும். கணவனே தெய்வம் என்று எண்ணி நடப்பவள், இறந்த பிறகு உயர்ந்த குலத்தில் பிறந்து, உத்தமனான ஒருவனைத் தனது கணவனாக அடைந்து, நல்ல மக்களைப் பெற்றுக் குலவிருத்தி செய்து, தன்னைப் பெற்ற தந்தைக்கும், மணந்த கணவனுக்கும் புகழை உண்டாக்கி, சுமங்கலி யாகவே மரித்து உத்தம லோகத்தை அடைவாள்.

ஓ! காசிப புத்திரனே! இறந்தவன் இறந்த பிறகும் துன்பப்படாமல் இன்பமடையும் பொருட்டு, இன்னும் ஒரு விஷயத்தையுஞ் சொல்லுகிறேன். கேட்பாயாக.

பன்னிரண்டாம் நாள் சாஸ்திர விதிப்படி சபிண்டீகரணம் செய்து, ஒரு வருஷம் வரையிலும் நித்திய சிரார்த்தம் செய்யவேண்டும். எவனைக் குறித்து நித்திய சிரார்த்தம் செய்யப்படுகிறதோ அவன் மட்டுமின்றி, அந்தச் சிரார்த்தத்தைச் செய்பவனும் நன்மைகளை அடைவான்! என்று திருமால் திருவாய் மலர்ந்தருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. பக்ருவாகனன் கருமம் செய்தல்

கருடன், பரமபதியைத் தொழுது வணங்கி, 'பரம புருஷா! இதற்கு முன்பு பிரேத ஜன்மத்தைப் பற்றிச் சொன்னீர்கள் அல்லவா? அத்தகைய பிரேத ஜன்மம் அடைந்தவனைக் குறித்த சரித்திரம் உள்ளதா? அத்தகைய சரிதமிருந்தால், சொல்லியருள வேண்டும் என்று வேண்டினான்.

உடனே, ஆதிநாயகரான, ஸ்ரீமந் நாராயண பகவான், கருடனை நோக்கி, கூறலானார்: 'ஓ வைனதேயனே! நீ இப்போது கேட்டது நல்லதொரு கேள்வியேயாகும். இதற்கும் ஒரு கதை உள்ளது. அந்தக் கதையைப் பக்தனாகிய உனக்குச் சொல்லுகிறேன் கவனமாகக் கேள் . திரேதாயுகத்தில் பக்ருவாகனன் என்ற அரசன் ஒருவன் இருந்தான். அவன் தன் நித்திய கர்மங்களை நியமந் தவறாமல் செய்து வந்தான். பெரியோர்களால் கொண்டாடப்பட்ட அவன், மஹோதயம் என்ற நகரத்திலிருந்து, உலகத்தை ஆண்டு வந்தான். அவன் ஒரு நாள் வேட்டையாட வேண்டும் என்று மிகவும் விரும்பினான். எனவே, தன் சிலருடன் காட்டுக்குச் சென்று வேட்டையாடினான்.

அப்போது அவனது பார்வையில் புள்ளிமான் ஒன்று தென்பட்டது. அவன் அந்த மான் மீது அம்பெய்தான். அடிபட்ட அந்த மான் கீழே விழுந்து, மீண்டும் எழுந்து ஓடிற்று. மறுபடியும் அந்த மன்னன் வில்லை வளைத்து, அம்பெய்தான். அந்த அம்பும் குறிதவறாமல் அந்தமான் மீதே பாய்ந்தது. அம்பு பாய்ந்த புண்ணிலிருந்து வழிந்து ஒழுகிய இரத்தமானது சிதறியது. அந்த மான் மீண்டும் ஓடி எங்கோ மறைந்தது. அரசன், மானின் உடலிலிருந்து தரையில் விழுந்திருந்த இரத்தச் சுவடைப் பின்பற்றிச் நெடுந்தூரம் நடந்து, வேறு ஒரு வனத்தையடைந்தான். அங்கும் அந்தப் புள்ளிமானைக் காணாததாலும், வழி நடந்த சோர்வாலும் மிகவும் சோர்வடைந்தான். அரசனுக்குப் பசியை விடத் தாகம் நெஞ்சை வறளச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


செய்தது. அவன் தண்ணீருக்காக வனம் முழுவதும் ஒரு தடாகத்தைத் தேடியலைந்தான். கடைசியில், ஒரு தாமரைப் பொய்கையைக் கண்டு அதனுள்ளிறங்கி, நீராடித் தண்புனல் பருகிக் களைப்பு நீங்கினான். குளக்கரையிலிருந்த ஆலமரம் ஒன்றின் அடியில் அமர்ந்து, தன்னுடன் வேட்டையாட வந்த தன் பரிஜனங்களின் வருகைக்காகக் காத்திருந்தான்.

அவர்கள் அரசனைத் தேடிக் கொண்டிருந்ததால் அவர்கள் வரவில்லை. நெடு நேரமாயிற்று. அந்தி மங்கியது. இருள் கவிந்தது. அரசனோ, அவர்கள் வரும் வரையில் அந்த ஆலமரத்தின் அடியில் அமர்ந்திருந்தான். அப்போது, எலும்பும் நரம்பும் தசையும் இல்லாத சரீரமுடையதும் பார்ப்பதற்கு அச்சந்தருவதுமான ஒரு பிரேதம், பல பிரேதங்களோடு அங்குமிங்கும் ஓடுவதையும், பசி தாகத்தோடு வருந்துவதையும் கண்டான். பிரேத ஜன்மமடைந்த ஓர் உயிர், பல பிரேதங்களோடு பயங்கரமாகக் கூச்சல் இடுவதைக் கண்ட அரசன் பயமும் அதிர்ச்சியும் வியப்பும் அடைந்தான். அப்போது அந்த பிரேத ஜன்மம் அரசனிடம் நெருங்கி வந்து 'அரசனே! உன்னை நான் காணப்பெற்றதால், இந்தப் பிரேத ஜன்மம் நீங்கி நற்கதியை அடைவேன் என்று நம்புகிறேன்! என்று வணக்கமாகக் கூறியது. பக்ருவாகனராஜன் அந்தப் பிரேத ஜன்மத்தைப் பார்த்து, 'நீ யார்? பார்ப்பவர்கள் பயப்படத்தக்க ரூபமுடைய பிரேதத்தைப் போலத் தோன்றும் நீ எவ்வாறு பேசுகிறாய்? உன் வரலாறு என்ன? அதை விளக்கமாகச் சொல்ல வேண்டும்! என்று கேட்டான்.

உடனே அந்தப் பிரேத ஜன்மம், அரசனை நோக்கி, 'வேந்தனே! சரித்திரத்தைச் சொல்லுகிறேன். நீங்கள் கருணையுடன் கேட்க வேண்டும். வைதிசம் என்று ஒரு பட்டணம் உண்டு. அந்தப் பட்டினத்திலே இரதகஜ துரகபதாதிகள் எப்போதும் நிறைந்திருக்கும். அந்த நகரத்தில் நான் வைசிய குலத்தில் பிறந்து, வளர்ந்து திருமணஞ் செய்து கொண்டு சுகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்ந்து வந்தேன். என் பெயர் தேவன்! நான் என் வாழ்நாள் முழுவதும் தேவாராதனை, விரதானுஷ்டானம், முதலியவற்றை செய்து வந்தேன். பிராமணரையும் பெரியோரையும் எப்போதும் வழிபட்டு வந்தேன் தேவாலயம் பிரமாலயம் முதலியவற்றைச் சீர் செய்து புதுப்பித்தேன். ஏழைகளையும் அனாதைகளையும், அகதிகளையும் நாதனற்றவரையும் ரட்சித்து வந்தேன். சகல ஜீவர்களுக்கும் என்னால் இயன்ற அளவுக்கு நன்மைகளையே செய்து வந்தேன். என் வாழ் நாள் முடிந்தது. நான் மடிந்தேன். எனக்குப் புத்திரன் இலன். சுற்றத்தாரும் இல்லை. மாய்ந்த எனக்கு யாருமே கர்மம் செய்யாததால் நான் இத்தகைய பிரேத ஜன்மத்தை அடைந் தேன். அரசனே! இந்தப் பிரேத ஜன்மத்தை நான் அடைந்து வெகு காலமாயிற்று இந்த ஜன்மத்தோடு நான் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்துகிறேன். இறந்தவனுக்குச் செய்ய வேண்டிய சஞ்சனயம், விருஷோற்சர்க்கம், சோடசம், சபிண்டீகரணம், மாசிகம், சிரார்த்தம் முதலிய சடங்குகளை இறந்தவனின் மகன் அல்லது மற்ற உறவினர்கள் ஒருவருமே செய்யாவிட்டால், இறந்தவன் பிரேர ஜன்மத்தையே அடைவான். அரசனே! உலகத்தை ஆளும் உனக்கு நான் சொல்ல வேண்டுவது எதுவுமில்லை. நீ குடிமக்களின் காவலன், உறவினன் ஆகையால் அடியேனுக்கு நீயே, மாண்டவனுக்குச் செய்தற்குரிய கர்மங்களைச் செய்து, இந்தப் பிரேத ஜன்மத்தை நீக்க வேண்டும். என்னிடம் சிறப்பான நவரத்தினங்களில் சிறந்த ஒரு மாணிக்கம் இருக்கிறது. அதை பாத காணிக்கையாக உனக்கு வழங்குகிறேன். அதை ஏற்றுக் கொள்வாயாக! என்று கூறி, அந்த இரத்தினத்தை அந்தப் பிரேத ஜன்மம் அரசனிடம் கொடுத்தது.

அரசன், அந்தப் பிரேத ஜன்மத்தை நோக்கி, 'பிரேதமே! நான் உனக்கு எப்படிக் கருமஞ் செய்வேன்? அதை நான் எவ்வாறு செய்ய வேண்டும்? நீ கொடுக்கும் இந்த இரத்தினத்தை நான் உன்னிடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடுமோ? உனக்கு உன் உறவினரில்லாமையாலும் புத்திரனில்லாமையாலும் யாருமே உனக்குக் கர்மம் செய்யாமையால் நீ பிரேத ஜன்மத்தை யடைந்ததாகச் சொல்லுகிறாயே, இந்த பிரேத ஜன்மம் எப்படி நீங்கும்! இந்தப் பிரேத ஜன்மத்தை நீ எவ்வாறு அடைந்தாய்? அவற்றை நீ எனக்குச் சொல்ல வேண்டும்!' என்று கேட்டான்.

அதற்கு பிரேதம் அரசனை நோக்கி, 'அரசே! அந்தணோத்தமர்களின் பொருள்களையும், தெய்வ சொத்துக்களையும், ஸ்திரீ, பாலன், அந்தகன், ஊமை, செவிடன் ஆகியோரது பொருள்களையும் மோசம் செய்து அபகரித்தவன் எவனாயினும் அவன் எத்தகைய தானங்களைச் செய்தவனாயினும் இத்தகைய பிரேத ஜன்மத்தையே அடைவான்! தவம் புரிகின்ற மங்கையையும் தன் கோத்திரத்தில் பிறந்த பெண்ணையும் பிறனுக்குரியவளையும் விரும்பியவன் பிரேத ஜன்மத்தை அடைவான். தாமரை மலர்களையும், நவரத்தினங்களையும், பொன்னையும் மங்கையர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்பிலணியும் கச்சையையும் திருடியவன் பிரேத ஜன்மத்தையடைவான். போரில் புறங்காட்டி ஓடியவனும் செய்ந்நன்றி மறந்தவனும், நல்லது செய்தவனுக்கே தீமைகளைச் செய்தவனும் பிரேத ஜன்மத்தை அடைவார்கள்!' என்று கூறியது. அதைக் கேட்டதும் அரசன் அந்தப் பிரேதத்தை நோக்கி, 'ஓ பிரேதமே! பிரேத ஜன்மம் அடைந்த பிறகு, அவனுக்கு நேர்ந்த அந்த ஜன்மம் எப்படி நீங்கும் அத்தகையவனுக்கு எத்தகைய கர்மத்தைச் செய்ய வேண்டும்? அதை எவ்விதம் செய்ய வேண்டும் என்பதைச் சொல்! என்றான்.

உடனே பிரேத ஜன்மம், அரசனை நோக்கி, 'வேந்தனே! இந்த விஷயத்தை உனக்குச் சுருக்கமாகச் சொல்கிறேன், கேள்! நாராயணபலி சகிதனாய், ஸ்ரீமந்நாராயணனைப் போலத் திவ்விய மங்கள விக்கிரகம் ஒன்றைச் செய்து, சங்கு, சக்கர பீதாம்பரங்களைக் கொண்டு அலங்காரஞ் செய்து, கிழக்குத் திசையில் ஸ்ரீதரனையும் தெற்குத் திக்கில் மகாசூரனையும் மேற்குத் திசையில் வாமனனையும் வடக்கில் கதாதரனையும் நடுவில் பிரமருத்திராதியரோடு ஸ்ரீ மகாவிஷ்ணுவையும் நிலைநிறுத்தி, ஆராதனை செய்து, வலம் வந்து வணங்கி, அக்கினியிலே ஹோமஞ் செய்து, மீண்டும் நீராடி விருஷோற்சர்க்கம் செய்து, பதின்மூன்று பிராமணர்களை வருவித்து, அவர்களுக்குக் குடை, மாரடி, மோதிரம், பலகை, வஸ்திரம், பொன் முதலியவற்றை வழங்கி, பிருஷ்டான்ன போஜனம் செய்வித்து, சய்யாதானம், கடகதானம் முதலிய தானங்களைக் கொடுத்தால், மரித்தவன் பிரேத ஜன்மத்தில் இருந்து நீங்குவான்! என்று கூறியது.

அந்தப் பிரேத ஜன்மம் அவ்வாறு சொன்னதுமே, மன்னனைத் தேடிக் கொண்டிருந்த பரிவாரங்கள், அவன் அமர்ந்திருந்த தடாகக் கரைக்கு வந்து கொண்டிருந்தார்கள். பெருந்திரளான ஜனக் கூட்டத்தைக் கண்டதும் பிரேத ஜன்மம், ஒருவருடைய கண்ணிற்கும் புலப்படாமல் மறைந்து விட்டது. அரசன், அந்தப் பிரேத ஜன்மம் மறைந்ததைக் குறித்து யோசித்தான். 'இதென்ன விந்தை! நமது சேனை வீரர்களைக் கண்டதுமே நம்முடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்த பிரேத ஜன்மம் மறைந்துவிட்டதே! இனி அந்தப் பிரேத ஜன்மம் நம்மிடம் வேண்டியவாறு, அதற்குரிய கர்மங்களையும் தர்மங்களையும் நாமே செய்யவேண்டும்' என்று எண்ணி, வனத்தை விட்டுத் தன் நகரத்தையடைந்து, அந்தப் பிரேத ஜன்மத்தை குறித்து, அதற்குரிய கர்மங்களையும், தர்மங்களையும் முறைப்படி செய்தான். உடனே, அந்தப் பிரேதம், தனக்கு நேரிட்ட ஆவிப் பிறவியை நீங்கி, நல்லுலகையடைந்தது என்று திருமால் கூறினார்.

அதைக் கேட்டதும் கருடன் ஜகத்காரணனை நோக்கி, 'சர்வலோக சரண்யனே! இவை தவிர வேறு என்ன கர்மங்களைச் செய்தால் பிரேத ஜன்மம் நீங்கும்? அதனையும் எனக்குக் கூறியருள வேண்டும் என்று வேண்டினான்.

அதற்கு ஆழி வண்ணன், 'கருடா! எண்ணெய் நிறைந்த ஒரு குடத்தைப் பெரியோர்களுக்குத் தானம் கொடுத்தாலும் சகல பாவங்களும் நசித்துப் பிரேத ஜன்மமும் நீங்கி விடும். மரித்தவன் இன்பமுடன் மீளாவுலகை அடைவான். பொன்னால் குடங்கள் செய்து, அவற்றில் பாலும் நெய்யும் நிரம்ப வார்த்து, திக்கு பாலகரையும் அஜசங்கரரையும் ஸ்ரீஹரியையும் ஆராதனை செய்து, அக்குடங்களை அந்தணோத்தமர்களுக்குத் தானம் கொடுப்பது மிகவும் சிறப்புடையது ஆகும்! என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. எள், தருப்பை முதலியன

கருடன், திருமாலைப் பணிந்து, 'சர்வேசா! தாங்கள் இதுவரை கூறிய விஷயங்களை மிகவும் சுருக்கமாகச் சொல்லி விட்டீர்கள். இது போதாது. கருமங்களைச் செய்யும்போது கருமஞ் வேண்டிய ஸ்தலத்தைக் கோமயத்தால் ஏன் மெழுக வேண்டும்? பிதுரர்களுக்குரிய கர்மங்களைச் செய்யும் போது மட்டும் எள்ளையும் தர்ப்பைப் புற்களையும் உபயோகிப்பானேன்? கட்டிலில் படுத்துறங்கியபடியே இறந்தவனும் உப்பரிகையில் மாய்ந்தவனும் நற்கதியை அடையமாட்டான் என்று தேவரீர் முன்பு ஒரு சமயம் கூறியிருக்கிறீர்கள். அப்படியானால் இறக்கும் நிலையை அடைந்தவன் எந்த இடத்தில் எப்படி இறத்தல் வேண்டும்? தானங்களையெல்லாம் எப்படிச் செய்தல் வேண்டும்? அவ்வாறு செய்யப்படும் தானங்களுக்கு ஏற்படும் பயன்கள் யாது? இவற்றையெல்லாம் அடியேனுக்குத் தெளிவாகவும் விளக்கமாகவும் கூறியருள வேண்டும்! என்று பிரார்த்தித்தான்.

கருடாழ்வான், அவ்வாறு பரமகாருண்யனான ஸ்ரீபுருஷோத்தமன், கருடனை நோக்கிக் கூறலானார்:

வைனதேயா! நல்ல கேள்வி! இந்தக் கேள்வியைக் கேட்டது சரியானதுதான். மாய்ந்தவனைக் குறித்துச் செய்ய வேண்டியவற்றையெல்லாம் விளக்கமாகக் கூறுகிறேன். நீயும் கவனமாகக் கேட்பாயாக. புத்திரனைப் பெறாதவனுக்கு எந்தவுலகத்திலும் இன்பம் இல்லை. இகத்திலும் பரத்திலும் இன்பத்தைப் பெற வேண்டும் என்று இச்சிப்பவன், நிச்சயமாகக் கருமமும் தவமும் செய்த நற்புத்திரனைப் பெறவே வேண்டும். தர்மமும் தவமும் செய்யவில்லையென்றால் அவனது மனைவியின் வயிற்றில் கர்ப்பம் தரியாது. அப்படியே தரித்தாலும் அது பத்து மாதம் நிரம்புவதற்கு முன்னாலேயே கரைந்து, கழிந்து போகும். கருவானது கரைந்து சிதைந்தால் புருஷனுக்கு நற்கதி கிடைக்காது. நல்லதொரு நன்மகனைப் பெற்றவனே, எல்லா உலகங்களிலும் நன்மையை அடைவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைதனேயா! கருமங்களைச் செய்யத் துவங்குவதற்கு முன்னாலேயே ஒரு குறிப்பிட்ட ஸ்தலத்தை திருவலகால் துடைத்துச் சுத்தம் செய்து, கோமயத்தால் நன்றாக மெழுகிய பிறகே, எந்தக் கர்மத்தையும் செய்ய வேண்டும். அவ்வாறு சுத்தஞ் செய்யமால் கிரியைகளைச் செய்தால், அரக்கரும் பூதங்களும் பிரேதங்களும் பைசாசங்களும் அங்கு வந்து அக்கருமங்களை அங்கு செய்யவிடாமலும், அக்கர்மங்களை முற்றுப் பெற முடியாதவாறும் தடுத்து நிறுத்தி விடும். சுத்தம் செய்த ஸ்தலத்தில் கருமம் செய்யத் துவங்கினால், தேவர்கள் அவ்விடம் வந்து அக்கருமங்களை நிறைவேறச் செய்வார்கள். மரித்தவன் தானே அவனுக்குச் செய்யும் கர்மங்களை எங்கு செய்தால் தான் என்ன? என்று எண்ணி, தூய்மை செய்யாத இடத்தில் கருமங்களைச் செய்தால், அக்கருமங்களைச் செய்ததனாலடையும் பயனை, இறந்தவன் அடையமுடியாமல் போவதோடு, இறந்தவன் நரகத்தையே அடைய நேரிடும்.

'எள்' என்பது எனது வியர்வையிலிருந்து தோன்றியதாகையால், அந்தத் தானியம் மிகவும் பரிசுத்தமானதாகும். அந்த எள் இரு வகைப்படும். கறுப்பு எள், வெள்ளை எள் என்ற இருவகையில் எந்த நிறமுள்ள எள்ளையேனும் தானங்களோடு சேர்த்துக் கொடுத்தால் அதிகப் பயன் உண்டாகும். அதாவது சிறப்புடையதாக அமையும். சிரார்த்த காலத்தில் கறுப்பு எள்ளைச் சேர்த்தால், பிதுர்த் தேவர்கள் மிகவும் திருப்தியடைவார்கள். சூசைப் புல்லாகிய தர்ப்பைப்புல், ஆதியில் ஆகாயத்தில் உண்டாயிற்று! அந்தத் தருப்பையின் இரு கடையிலும் பிரமனும் சிவனும், அதன் நடுவே, ஸ்ரீஹரியும் வாசஞ் செய்கின்றனர். தர்ப்பை இல்லாமல் சிரார்த்தம் முதலிய கர்மங்களௌதையும் செய்யலாகாது. பிராமணருக்கும் மந்திரத்திற்கும் தர்ப்பைக்கும் அக்கினிக்கும் திருத்துழாய்க்கும் நிர்மாலிய தோஷமில்லை. ஆகையால் பயன்படுத்திய தர்ப்பைப் புல்லையே மீண்டும் உபயோகப்படுத்தலாம். ஏகாதசி விரதமும் திருத்துழாயாகிய துளசியும், பகவத் கீதையும் பசுவும் பிராமண பக்தியும் ஸ்ரீஹரியின் சரணமும் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையனைத்தும் சம்சார சாகரத்தைக் கடக்க வேண்டியவருக்கு நல்ல தெப்பமாகும். இறக்கும் நிலையை அடைந்தவன், கோமயத்தில் நன்றாக மெழுகப்பட்ட ஸ்தலத்தில், கூசைப் புல்லைப் பரப்பி, அதன் மீது எள்ளை இறைத்து, அந்தத் தர்ப்பைப் புல்லணையின் மீது சயனித்து, தருப்பைப் புல்லையும் திருத்துழாயையும் கையில் ஏந்தி, எனது நாமங்களை வாயாரப் புகன்ற வண்ணம் மடிவானாகில், அவன் அயனரனாதியருக்கும் அரியதாகிய நிரதிசய இன்ப வீடாகிய நமது உலகத்தை வந்தடைவான். மாய்பவன், தர்ப்ப சயனத்தில் குப்புறப்படுக்கலாகாது, முதுகு கீழுறவே சயனஞ் செய்தல் வேண்டும். உயிர் நீங்கும் முன்பே திருத்துழாயோடு, தனது நல்லுலக வாழ்வைக் கருதிய தானங்களையெல்லாம் கொடுத்து விடவேண்டும். அவற்றில் உப்பைத் தானம் செய்வது மிகவும் சிறப்பாகும். உப்பானது, விஷ்ணு லோகத்தில் உண்டானதாகும். ஆகையால் அதற்கு மகிமை அதிகம். மரித்தவன் உப்பைத் தானம் செய்வதால் சுவர்க்க லோகத்தை அடைவான்! என்றார் திருமால்.

## 18. பலவகைத் தானங்கள்

திருமால் திருவாய் மலர்ந்து கூறலானார். 'கருடா! தானங்களைச் செய்ய வேண்டிய முறைகளையும், அத்தானங்களால் ஏற்படும் பயன்களையும் கூறுகிறேன் கேள்.

தானங்கள் யாவற்றிலும் பருத்தி தானமே மிகவும் சிறந்தது. அந்தப் பருத்தி தானமே மகாதானம் என்ற பெயரைப் பெற்றது. அறப்படி வாழ்ந்து அறங்களையே புகன்று நான்கு வேதங்களையும் நன்றாக அறிந்த அந்தணர்கள் பூணுகின்ற, பூணூலுக்குப் பருத்தியே ஏதுவானது. சகலஜீவன்களும் உலகில் வாழ்கின்ற காலத்தில் அவர்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானத்தைக் காப்பதற்குரிய ஆடைகளையணிவதற்கும் பருத்தியே பயனாவதால் அது மிகவும் சிறப்படையது பருத்தித் தானம் செய்வதால் மாமுனிவர்களும், பிரமருத்திர இந்திராதி தேவர்களும் திருப்தியடைவார்கள், பருத்தி தானஞ் செய்தவனது வாழ்நாள் முடிந்த காலத்தில் சிவலோகத்தையடைந்து, அங்கேயே வாசஞ் செய்து, பிறகு சகலகுண சம்பன்னாய் அழகிய மேனியையுடை யவனாய், மஹா பலசாலியாய், உலகாளும் அரசனாய், தீர்க்காயுள் உடையவனாய் மீண்டும் பூமியில் பிறந்து, யாவரும் போற்றிப் புகழ நெடுங்காலம் வாழ்ந்து சுவர்க்கலோகத்தையடைவான். தில தானமும், கோதானமும், பூமிதானமும், சிவர்ணதானமும், தானிய தானமும் செய்தால், மகா பாவங்கள் அனைத்தும் உடனே விலகி விடும்.

திலதானமும் கோதானமும் சிறப்பான தானங்களாகும். அவ்விரண்டு தானங்களும் மிகக்கொடிய பாவங்களையும் நசிக்கச் செய்வன. ஆகையால் இந்தத் தானங்களைச் சாதாரண, சாமானிய பிராமணர்களுக்குக் கொடுக்கலாகாது. உத்தம பிராமணருக்கே இவ்விரண்டு தானங்களையும் வழங்க வேண்டும். மங்கையருக்கும் தனக்கு வேண்டியவருக்கும் அம்மூன்றையும் உத்தேசமாகக் கொடுக்கலாமே தவிரத் தானமாகக் கொடுக்கலாகாது. தானங்கள் செய்வதற்குச் சிறந்த காலம், ஜீவன் மரிக்கும் காலத்தில் செய்வதேயாகும். கிரகண புண்ணிய காலமும் செய்வதற்குச் சிறந்ததுதான்.

வைனதேயா! எந்த மனிதனும் தான் இன்பமாயும் மகிழ்ச்சியாயும் வாழுங்காலத்திலேயே தனக்கான தான தருமங்களைச் செய்து கொள்வது நல்லது அவ்வாறு தானம் செய்ய விரும்புவோனுக்குப் புத்திரன் இருந்தால் அவனிடம் தான் தனக்காகத் தானம் செய்ய விரும்புவதைச் சொல்லி, அவனுடைய ஒப்புதலைப் பெற்ற பிறகே தானத்தைச் செய்தல் வேண்டும். ஒருவன் மரிக்கும் காலத்தில் திலத்தையும், இரும்பையும் லவணத்தையும், பருத்தியையும், தானியத்தையும், பொன்னையும், பூமியையும், கோவையும் தானம் செய்தால் மிகவும் விசேஷமாகும். எள்ளையும், இரும்பையும் செய்தால், யமதர்மன் மகிழ்ச்சியடைவான் லவணத்தானம் செய்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறப்பவனுக்கு யமனிடத்தில் பயம் உண்டாகாது. பருத்தித் தானத்தைச் செய்தால் யம தூதர்களிடத்தில் பயம் உண்டாகாது. பருத்தி தானத்திற்கு முன்புச் சொன்னதை தவிர, இந்தப் பயனும் உண்டு.

தானியங்களைத் தானம் செய்தால், கூற்றுவனும் அவனது தூதர்களும் மகிழ்ந்து ஜீவனுக்கு வேண்டியவற்றையெல்லாம் வழங்குவார்கள். சுவர்ண தானத்திற்கும், கோதானத்திற்கும் பாபங்களையெல்லாம் நசிக்கச் செய்யும் ஆற்றல் உண்டு என்று முன்னமேயே உனக்குச் சொல்லியிருக்கிறேன். மரணமடையும் நிலையை அடைந்தவன், நம்மையே தியானித்து, நமது திருநாமங்களையே உச்சரிப்பானாகில் அவன் நிரதிசய இன்ப வீடாகிய நமது வைகுண்ட லோகத்தை அடைவான். தந்தை இறந்த பிறகு அவனுடைய புத்திரன், கயா சிரார்த்தம் செய்வதைவிட தந்தை இறக்கும் சமயத்தில் அவன் தன் தந்தையின் அருகிலேயே நெருங்கியிருந்து தான தருமங்களைச் செய்வதே உத்தமமாகும்.

கூடாரமும், முசலமும், சூரிகையும், இரும்புத் தண்டமும் காலனுக்கு ஆயுதங்களாகும். பொதுவாகக் கூறவேண்டுமானால் அவனது ஆயுதங்கள் அனைத்துமே இரும்பால் ஆனவைகள். அதனால்தான் ஒருவன் மரிக்கும் காலத்தில் இரும்பை தானம் செய்தால் யமன் மகிழ்வான் என்று சொன்னேன். எவன் இறக்கும் போது எவனுடைய கிரகத்தில் இரும்பு தானம் செய்யப்படுகிறதோ, அந்த கிரகத்தில் யமதூதர்கள் அடி வைக்கவும் அஞ்சுவார்கள். இறப்பவன் யாராயினும் இரும்புதானம் செய்தல் வேண்டும். அந்தத் தானத்தைச் செய்தால் கண்டாமிருகன், ஔதும்பரன், சம்பரன், சார்த்தூலன் முதலிய யமதூதர்கள் திருப்தி அடைவார்கள்.

'வைனதேயா! ஜீவனுடைய அங்கங்களாகிய கால் முதல் தலை வரையிலுமுள்ள உறுப்பினர்களில் பிரும்மருத்திர இந்திராதி தேவர்களும் ஸ்ரீகிருஷ்ண பகவானும் இருக்கிறார்கள். தாயும், தந்தையும், குருவும், சுற்றமும் ஜீவர்களுக்கு ஸ்ரீ விஷ்ணுவேயன்றி மற்றொருவருமில்லை. 'சர்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷ்ணு மயம் ஜகத் என்ற அருள் வாக்கை நீயும் உணர்ந்திருக்கிறாய் அல்லவா? நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சுவர்ணம், தானியம், தேன், நெய், பசு, யாகம், அந்தணர் அஜசங்கர இந்திராதி, தேவர்கள் யாவுமே விஷ்ணு மயமேயாகும். ஒன்றைக் கொடுப்பவனும் வாங்குபவனும் பிறகு யாவரும் யாமேயன்றி வேறொன்றும் இல்லை. ஜீவர்கள் பூர்வத்தில் செய்த கர்மத்தை அனுசரித்து பாப புண்ணியங்களில் அவர்களது புத்தியை நாமே நாடச் செய்கின்றோம். புண்ணியஞ் செய்தவன் சுவர்க்கம் அடைவான் பாபம் செய்தவன் நரகத்தை அடைவான்..

## 19. தானச் சிறப்பும் உயிர் பிரியும் விதமும்

ஜகத்காரணரான ஸ்ரீமந்நாராயணர், கருடனை நோக்கி 'வைனதேயா! என்னை ஆராதித்து எனது புண்ணிய ஷேத்திரங்களில் தான தருமஞ் செய்பவன் புண்ணியங்களை அதிகமாக அடைவான். மாய்ந்து போன ஜீவனைக் குறித்து பூமி தானஞ் செய்தால் பூமியானது எத்தனை அடிகள் ஆழமாக இருக்கிறதோ, அத்தனையாண்டுகள் அந்த ஜீவன் சுவர்க்கலோகத்தில் வசிப்பான். மாரடிதானம் செய்தால் குதிரை மீதேறி நல்லுலகு சேர்வான் என்பது மட்டுமல்ல, அவன் செல்லும் மார்க்கத்தில் முள் முதலியவற்றால் துன்பம் ஏதும் அடையாமல் செல்வான். குடை தானம் செய்தால், நிழலுள்ள பாதை வழியாக யமபுரம் செல்வான் மழை ஏதும் வந்தாலும் அதனால் இன்னலுறான்.

தீபதானம் செய்தால் இருள் வழியில் பிரகாசத்தோடு செல்வான். ஐப்பசி, கார்த்திகை, மாசி ஆகிய மூன்று மாதங்களிலாவது, சதுர்த்தசியிலாவது, பௌர்ணமியிலாவது ஒருவன் இறந்த தினத்திலாவது தீபதானம் செய்வது சிறப்பாகும். ஒருவன் இறந்த நாள் முதல் ஓராண்டு காலம் வரையிலும் தினந்தோறும் தீபதானம் செய்தால் மாண்டவன் மேடுபள்ளம் இல்லாத நல்லதொரு வழியாக யமபுரியைச் சார்ந்து, அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலத்தைச் சேர்ந்தவர்கள் அந்த யமபுரியில் இருந்தால் அவர்களையும் நல்லுலகம் சேர்த்து தானும் நற்கதியை அடைவான். தீப தானத்திற்குள்ள மதிப்பு சிறிதல்ல. பிரமாலயத்திலும் தேவாலயத்திலும் வடக்கு முகமாக வாவது கிழக்கு முகமாகவாவது தீபம் வைக்க வேண்டும். தீபதானம் செய்பவன் தனக்கு எதிர்முகமாக தீபத்தைச் சுடர் விட்டெரியச் செய்து கொடுக்க வேண்டும்.



மனிதனாக பிறந்தவன், என்றாவது ஒருநாள் இறந்தே தீர வேண்டும் என்பதை உணர்ந்தவன் மேலே சொன்ன தானங்களைத் தனக்குத் தானே செய்து கொள்ள வேண்டும். ஆசனப் பலகையையும் செப்புத் தாலியையும் சுயம்பாகப் பொருளையும் தானஞ் செய்தவன், மரித்த பிறகு ஆகாயமார்க்கமாகவே இனி தாகச் செல்வான். அரிசியும், எள்ளும், பதின் மூன்று கடகமும், மோதிரமும், குடையும், விசிறியும் பாதரக்ஷை யையும் அவசியமாகத் தானஞ் செய்ய வேண்டும். யானை, குதிரை இவற்றைத் தானஞ் செய்தால் விசேஷமான புண்ணியம் உண்டாகும். எருமைக் கிடாவைத் தானஞ் செய்யும் போது அதனுடன் ஏராளமான பொருள்களையும் தானஞ் செய்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பாகும். வெற்றிலை, பாக்கு, புஷ்பம் ஆகியவற்றைத் தானஞ் செய்தால் யமதூதர்கள் மகிழ்ச்சியடைந்து ஜீவனை வருந்தச் செய்ய மாட்டார்கள். ஆடைகளைத் தானஞ் செய்தால், கார்மேகம் போன்று கருத்த மேனியும், பிறைபோன்ற கடைவாய்ப் பற்களும் செம்பட்டை ரோமமும் அச்சந்தரும் பயங்கர உருவமும் கொண்ட யமதூதர்கள் ஜீவனின் முன்பு நல்ல உருவத்துடன் தோன்றுவார்கள் என்றருளிச் செய்தார்.

கருடன் அவரை நோக்கி, 'ஸ்ரீ ஹரியே! அடியார்க்கெளிய ஆபத்பாந்தவரே! மனிதனின் சரீரத்திலிருந்து உயிரானது எப்படி நீங்குகிறது? இதை திருவாய் மலர்ந்தருள வேண்டும்! என்று கேட்க,சர்வாந்தர்யாமியான பகவான் கூறலானார்:

'கருடா! உயிரானது மனிதனது சரீரத்தைவிட்டு விலகும்போது கண் வழியாகவோ, நாசி வழியாகவோ, ரோமக் கால்கள் (துவாரம்) வழியாகவோ, நீங்கிவிடும். ஞானிகளுக்குக் கபாலம் விரிந்து நீங்கும். பாபிகளுக்கு அபான மார்க்கமாக உயிர் நீங்கும். உயிர் நீங்கியதும் மனித உடல் கட்டையைப் போலக் கிடக்கும். பிறகு அந்த உயிரற்ற உடல், மரக்கட்டையைப் போன்ற அந்த உடல் பஞ்சபூதாத்மகம் ஆகலாம். உடல் கூறுகள் பஞ்சபூதத்தால் உருவானவை. ஆகையால் பிரித்வி – மண்ணிலும், அப்பு – புனலிலும், தேயு – அக்கினியிலும், வாயு – காற்றிலும், ஆகாயம் – ஆகாயத்திலும் லயமாகிவிடும்.

காமம், குரோதம், லோபம், மோகம், மதம், , மாச்சரியமாகிய ஆறும், கர்மேந்திரியம் ஐந்தும், ஞானேந்திரியம் ஐந்தும் மனித சரீரத்தில் திருடர்கள் போலப் பதுங்கி ஒளிந்து ஒன்றோடொன்று உறைந்து இருப்பன. உயிரானது நீங்கும் போது அவையனைத்தும் மனத்தோடு ஒன்றாகும். சேதனனானவன் தனது கர்மத்தாலேயே மறுபிறவியை அடைகிறான். பழைய வீட்டில் வசிப்பவன் பொருள் சம்பாதித்து நல்லதொரு புதிய வீடு கட்டிக் கொண்டு அதில் குடியேறுவதைப் போலவே, புண்ணியஞ் செய்த ஜீவன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வாழ்நாள் முடிந்த பிறகு இந்திரியங்கள் ஐந்தும் அமைந்த ஒரு திவ்விய தேகத்தில் அவன் குடியேறுவான் மல மூத்திரங்களும் பயன் தராத கற்பனைகளும், ஊனும், ஊனும் நரம்பும் எலும்பும் மெய்யோடு நசிக்கப்பட்டோ எரிக்கப்பட்டோ நாசமடைந்து விடுவதே மனித உடலாகும். ஓ, கருடா! மனிதன் மரிக்கும் விதம் இதுவேயாகும். இனி, மனிதன் இறந்த பிறகு, மீண்டும் பிறக்கும் விதத்தையும் சொல்கிறேன், கேட்பாயாக!

'பல நரம்புகளோடு தூணைப் போல் ஒரு பெரிய நரம்பைக் கொண்டதும் இந்திரியங்கள் பொருந்தியதும் காமக் குரோத லோப மோக மதமாற்சரியமாகிய உட்பகைகளுடன் கூடியதும், காம, குரோத, இச்சை துவேஷங்களால் வியாபிக்கப்பெற்றதும் மாயையோடு கூடியதுமான தேகம், எல்லாப் பிராணிகளுக்கும் உறுதியாய் உளதாகும். சமஸ்தலோகங்களுக்கும் உரிய சமஸ்த தேவர்களும் தேகத்திலேயே இருக்கிறார்கள்!' என்று கூறியருளினார்.

## 20. தேவேந்திரன் மயங்கிய கதையும் மாதவிலக்கு, தாம்பத்திய உறவு, கருவளர்ச்சி, உடலியல் பற்றிய விளக்கங்களும்

கருடன் பரமபத நாதனைத் தொழுது, 'சர்வலோக சரண்யரே! மனிதனின் உடலில், தோல், நரம்பு, எலும்பு, இரத்தம், மாமிசம், தலை, கைகள், கால்கள், நாக்கு, நாசி, இரகசிய உறுப்பு, நகம், ரோமம் முதலியவற்றால் அமைக்கப்பட்டு, இந்திரஜாலம் போலத் தோன்றுகிறதே! இந்த சரீரம் எங்ஙனம் உண்டாகிறது? அதை அடியேனுக்குச் சொல்ல வேண்டும்' என்று பிரார்த்தித்தான்.

பலவுலகங்களையும் படைத்துக் காக்கும் பரந்தாமன், பறவைக்கரசனாகிய கருடனை நோக்கிக் கூறலானார் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிப முனிவரின் மைந்தனே! நீ கேட்ட கேள்வி, நல்லதொரு கேள்வியாகையால், அதற்குரிய பதிலைத் தெளிவாகச் சொல்லுகிறேன், கேள்...

'மாத விலக்கான பெண்கள், நான்கு நாட்கள் வரையில் குடிமனைக்குப் புறம்பே இருக்க வேண்டும், முன்பு ஒரு காலத்தில், இந்திரன் தன் அரியணையில் அமர்ந்து அரம்பையர்கள் ஆடிய ஆட்டத்திலும் கந்தர்வர்கள் இசைத்த கானத்திலும் மதி மயங்கியிருந்தான். அந்தச் சமயத்தில் தேவகுருவான வியாழ பகவான் அங்கு வந்தான். இந்திரன் மங்கையர் மயக்கத்தில், தன் ஆசிரியன் வந்ததையும் கவனியாமல், அவருக்குச் செலுத்த வேண்டிய மரியாதையையும் செலுத்தாமல், ஆடுகின்ற அரம்பையரின் அங்க நெளிவுகளிலும் வளைவுகளிலும் ஆசை வயப்பட்டிருந்தான். ஆசிரியனுந் தன்னை ஆயிரங் கண்ணன் வரவேற்பளித்து கௌரவிக்காமல் இருந்ததைக் கண்டு மனம் புழுங்கி அங்கிருந்து வெளியேறினான்.

'ஆசிரியனை மதியாததால், இந்திரனின் செல்வ வளங்கள் சிதைந்தன. அதையறிந்த இந்திரன் வியாழனை இகழ்ந்ததால் வந்த வினையென்பதை ஆராய்ந்து உணர்ந்தான். திகைத்தான். ஆசிரியனைத் தேடிச் சென்றான். அவனது இருப்பிடத்திலும் பிற இடங்களிலும் அவனைக்காண முடியாததால்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழம்பிய உள்ளத்தோடு நான்முகனிடம் சென்று நடந்தவற்றை அவனிடம் முறையிட்டான்.

நான்முகன் சிந்தித்தான். குல குருவை இழந்ததால் தீவினை கொழுந்து விட்டு வளர்ந்துள்ளது. அதனை அருந்தும் செவ்வியும் கிட்டியது என்று உணர்ந்து, அதற்கேற்ப, இந்திரனை நோக்கி, 'இந்திரா! நீ செய்த பிழை பிழையேதான். அதற்கு உன் ஆசிரியன் உனக்களித்த தண்டனையும் சரியானதுதான். ஆகையால் உன் ஆசான் வருமளவும் இடைக் காலத்தில் உனக்கு ஓர் ஆசான் வேண்டுமல்லவா? தானவனான துவஷ்டா என்று ஒருவன் இருக்கிறான். அவன் மகன் விச்சுவவுருவன் என்று ஒருவன் இருக்கிறான். அவன் முத்தலையன். சீரிய ஒழுக்க முடையவன். அறிவிற் சிறந்தவன் அவனையே உனது குருவாக கொள்வாயாக என்று கூறினான்.

பிரமதேவன் கூறிய அறிவுரையை ஏற்ற இந்திரன் விச்சுவவுருவனைத் தன் ஆசிரியனாகக் கொண்டான். இந்திரன் வேள்வி யொன்று செய்ய விரும்பினான். அந்த விருப்பத்தைத் தன் புதிய ஆசானிடம் புகன்றான். வேள்வி துவங்கியது. வஞ்சகனான தானவன், அந்த வேள்வியில், தன் குலத்தைச் சேர்ந்த தானவர்களுக்கு ஆக்கங் கூறி மந்திரங்களைச் சொல்லி வேள்வியைச் செய்தான். புதிய ஆசிரியனது வஞ்சகச் செயலை அறிந்த இந்திரன் கோபங்கொண்டு தன் குருவாகிய விச்சுவவுருவனைத் தன் வஜ்ராயுதத்தால் வெட்டினான். அவனது மூன்று தலைகளையும் இந்திரன் வெட்டியவுடன் அந்த வஞ்சகன் ஒழிந்தான். ஆனால் அவனுடைய தவவலிமையினால் சோம பானஞ் செய்யும் அவனது தலைகளில் ஒன்று காடையாயிற்று சுராபானஞ் செய்யும் தலை ஊர்க்குருவியாயிற்று. அன்ன பானஞ் செய்யும் தலை கிச்சிலிப் பறவை ஆயிற்று.

விசுவவுருவன் தானவனாயினும் அவன் குருவான படியால், அவனைக் கொன்ற இந்திரனுக்கு பிரமஹத்தி தோஷம் பீடித்தது. தேவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் தலைவனைப் பீடித்த பிரமஹத்தி தோஷத்தை நிவர்த்திப்பதற்கு ஒரு வழி செய்தார்கள். அவர்கள் பெண்களையும் மண்ணையும் தண்ணீரையும் வேண்டி, இந்திரனைப் பீடித்த தோஷத்தை பங்கிட்டுக் கொடுத்தார்கள் அவர்கள் தேவர்களை நோக்கி, 'இதனை நாங்கள் போக்கிக் கொள்வது எப்படி? என்று கேட்டார்கள்.


அதற்குத் தேவர்கள், "நீரிலே தோஷம் நுரையாகக் கழியும், மண்ணிலே உவராகக் கழியும், பெண்களுக்குப் பூப்பாகக் கழியும்! என்றார்கள். அதற்கு அவர்கள் மூவரும், 'பழி சுமக்கும் எங்களுக்குப் பயனேதும் உண்டா?' என்றார்கள். அதற்கு தேவர்கள், 'பெண்கள் கருவுயிர்க்கும் வரையில் கணவரை மருவிக் களிக்கலாம். மண்ணகழ்ந்த குழி தானே நிறையும்! நீர் இறைக்க இறைக்க சுரக்கும்! மரம் வெட்ட வெட்டத் துளிர்க்கும்!' என்றார்கள்.

இவ்வாறு இந்திரனைப் பீடித்த பிரமஹத்தி பாவம், மங்கையர் முதலானவரிடம் போய்ச் சேர்ந்தது. அதன்படியே ரஜஸ்வலையாகும் அப்பெண்கள் அந்தப் பாவத்தை ஏற்று கழிக்கலாயினர். ஆகையால், பயிஷ்டையான (மாதவிலக்கான) ஸ்திரீயை நான்கு நாட்கள் வரையில் பிறர் பார்க்கலாகாது. பார்த்தால் பாவம் வந்து அடையும். பயிஷ்டையானவள், முதல் நாளன்று சண்டாள ஸ்திரீயைப் போலிருப்பாள் இரண்டாம் நாள் பிரமஹத்தி செய்தவளை ஒப்பாவாள். மூன்றாம் நாள் ஆடை ஒலிப்பாளைப் போலாவாள். நான்காவது நாள் புனலாடிய பிறகு, சிறிது தூய்மையடைவாள், ஐந்தாம் நாள் குடும்பக் காரியங்களை எல்லாம் செய்வதற்கு உரியவளாகச் சுத்தியை அடைவாள், பயிஷ்டையான ஆறாவது நாள் முதல் பதினெட்டாவது நாள் வரையிலுள்ள இரட்டை நாள் ஏழில் இரவில் அவளோடு கூடி மகிழ்ந்தால் புருஷப் பிரஜை உண்டாகும்.

ஆகையால் ஆண்மகனைப் பெற விரும்புகிறவன் தன் மனைவியை இரட்டை நாளிலேயே சேர வேண்டும் நான்கு தினத்துக்குமேல் பதினெட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாள் வரையில் இரவுக் காலத்தில், இரட்டை நாளில் கர்ப்பந்தரித்தால் குணவானாகவும், தனவானாகவும் தர்மிஷ்டனாகவும் ஸ்ரீ விஷ்ணு பக்தி உடையவனாகவுமுள்ள ஒரு புத்திரன் பிறப்பான். பயிஷ்டையான நான்கு தினங்களுக்கு மேல் எட்டு நாளைக்குள் பெரும்பான்மையாகக் கர்ப்பந்தரிக்கும். ரஜஸ்வலையான ஐந்தாம் நாள் ஸ்திரீகள் பாயசம் முதலிய மதுர பதார்த்தங்களையே அருந்த வேண்டும். காரமமான பதார்த்தங்களை உண்ணலாகாது ஸ்திரீ புருஷர்கள் சந்தன, புஷ்ப, தாம்பூல வஸ்துக்களைத் தாரணம் செய்து கொண்டு குவிந்த மெய்யினர்களாய், சித்தத்தில் அதிக மோகமுடையவர்களாய்ச் சேர்தல் வேண்டும் அவ்வாறு அவர்கள் இருவரும் சேர்ந்தால், சுக்கில சுரோணிதக் கலப்பால் ஸ்திரீ வயிற்றில் கருத்தரித்து, வளர்பிறைச் சந்திரனைப் போல் அந்தக் கருவானது விருத்தியாகும். மன்மதனும் மனமும் ஒத்த காலத்தில் இருவராலும் விடப்படும் சுக்கில சுரோணிதங்களால் ஆணின் சுக்கிலம் அதிகமானால் ஆண்பிள்ளையும் பெண்ணின் சுரோணிதம் அதிகமானால் பெண்ணும் பிறக்கும். சுக்கில சுரோணிதங்கள் இரண்டும் ஏற்றக் குறைவில்லாமல் சமமாயின் பிறக்கும் பிள்ளைஅலியாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தரிக்குமானால் புணர்ந்த ஐந்தாவது நாளன்று, கர்ப்பப் பையினுள்ளே குமிழியுண்டாகும். அது பதினான்கு நாட்களில் தசையால் சிறிது பெருக்கும். இருபதாவது நாளில் மேலும் அதற்குச் சிறிது தசையுண்டாகிறது. இருபத்தைந்தாவது நாளில் அது மேலுஞ் சிறிது புஷ்டியடைகிறது. ஒரு மாதத்தில் அதனிடம் பஞ்சபூதத்தின் சேர்க்கையுண்டாகிறது. இரண்டாவது மாதத்தில் தோல் உண்டாகிறது. மூன்றாவது மாதத்தில் நரம்புகள் உண்டாகின்றன. நான்காவது மாதத்தில் மயிரும் புறவடிவும் உண்டாகும். ஐந்தாவது மாதத்தில் காதுகளும் மூக்கும் மார்பும் தோன்றும். ஆறாவது மாதத்தில் கழுத்தும் சிரசும், பற்களும் உண்டாகும், ஏழாவது மாதத்தில் ஆண் மகவாயின் ஆண் இனக்குறியும் பெண் மகவாயின் பெண் இனக் குறியும் உண்டாகும். எட்டாவது மாதத்தில் எல்லா அவயவங்களும் உண்டாகி ஜீவனும் பிரவேசிக்கிறான். ஒன்பதாவது மாதத்தில் ஜீவன், சுழி முனை என்ற நாடியின் மூலத்திலிருந்து, பூர்வஜென்ம கர்மங்களை நினைத்து தனக்குப் புதிய பிறவி வந்ததைக் குறித்துத் துக்கித்துக் கொண்டே, பத்தாவது மாதத்தில் பிறக்கிறான்.

வைனதேயா! பஞ்ச பூதாத்மகமாகிய தேகமானது, பஞ்ச இந்திரியங்களையடைந்து, பத்து நாடிகளால் அலங்கரிக்கப்பட்டு, பிராண, அபான, வியான, உதான, சமான, நாக, கூர்ம, கிருக, தேவதத்த, தனஞ்சயன் என்ற தசவித வாயுக்களோடு சேர்ந்துள்ளது. மேலும் அந்தச் சீரம், சுக்கிலம், எலும்பு, நீர், ரோமம், இரத்தம் என்ற ஆறு கோசங்களுடனும் அமைந்துள்ளது. நரம்புகளால் கட்டப் பட்டிருக்கும் ஸ்தூல சரீரத்தில் (பருவுடலில்) தோலும் எலும்பும் மயிரும், மாமிசமும் நகமும் பிரித்வி யின் (மண்ணின்)குணத்தால் உருவாகின்றன. வாயில் உண்டாகும் உமிழ்நீராகிய எச்சிலும், சிறுநீரும், சுக்கிலமும் ஊனீரும், புண்ணீரும் அப்புவின் (நீரின்) குணமாகின்றன. பசி, தாகம், நித்திரை, சோம்பல், காந்தி முதலியவை தேயுவின் (நெருப்பின்) குணமாகின்றன. இச்சை, கோபம், நாணம், பயம், மோகம், இயக்கம், சுழலுதல், ஓடுதல், கைகால்களை மடக்கி நீட்டுதல், ஒரு வினையும் செய்யாமலேயே இருத்தல் ஆகிய அனைத்தும் வாயுவின் (காற்றின்) குணமாகும். சப்தம், எண்ணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி, காம்பீர்யம், சத்தி ஆகியவை ஆகாயத்தின் குணமாகும். காதுகள், கண்கள், மூக்கு, நாவு, தொக்கு ஆகிய ஐந்தும் ஞானேந்திரியங்களாகும். இடை பிங்கலை, சுழிமுனை என்ற மூன்றும் முக்கியமான பெரிய நாடிகளும் காந்தாரி, கஜசிம்மஹி, பூழை, யச்சு, அலாபு, குரு, விசாகினி என்ற ஏழு நாடிகளும் சரீரத்தின் மிக முக்கியமான நாடிகளாகும்.

ஜீவன் உண்ணுகின்ற சாறு முதலியவற்றை மேலே சொன்ன வாயுவே, அந்தந்த இடத்தைச் செயற்படச் செய்கிறது. வயிற்றில் அக்கினிக்கு மேல் தண்ணீரும், அந்தப் புனலுக்கு மேல் அன்னமும் உள்ளன. அந்த அக்கினியை வாயுவானது விருத்தி செய்கிறது! சரீர முழுவதும் மூன்றரைக் கோடிக்கு மேற்பட்ட ரோமங்களும் முப்பத்திரண்டு பற்களும், இருபது நகங்களும். இருபத்தேழு கோடி கூந்தல் மயிர்களும், ஆயிரம் பலம் இறைச்சியும், நூறுபலம் இரத்தமும், பத்துப்பலம் மேதஸும், பத்துப்பலம் தொக்கும், பன்னிரண்டு பலம் மஜ்ஜையும் மூன்று பலம் முக்கிய இரத்தமும் கபமும் மலமும் மூத்திரமும் முடிவாக அமைந்துள்ளன அண்டத்திலுள்ளவை யெல்லாம் பிண்டத்திலுமுண்டு. பிண்டத்திலுள்ளவை யெல்லாமே மனித தேகத்திலும் இருக்கின்றன. உள்ளங்காலை அதலலோகம் என்றும், கணுக்காலை விதலம் என்றும், முழங்காலை சுதலம் என்றும் அதற்கு மேற்பட்ட பகுதி நிதலம் என்றும், ஊறு, தராதலம் என்றும், குஹ்யத்தை ரசாதலம் என்றும், இடையைப் பாதலம் என்றும், நாபியைப் பூலோகம் என்றும், இதயத்தைச் சுவர்க்கலோகம் என்றும், தோளை மகாலோகம் என்றும், முகத்தை ஜனலோகம் என்றும், நெற்றியைத் தவலோகம் என்றும், சிரசைச் சத்தியலோகம் என்றும் சொல்லுகிறார்கள்.

திரிகோணத்தை மேருகிரியென்றும் கீழ்க்கோணத்தை மந்தர பருவதம் என்றும், அந்தக் கோணத்துக்கு வலது புறம் கைலாயம் என்றும், இடது புறம் ஹிமாசலம் என்றும், மேற்பாகம் முகபர்வதம் என்றும், தென்பாகம் கந்தமாதன பர்வதம் என்றும், உள்ளங்கையிலுள்ள ரேகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருணபர்வதம் என்றும் வழங்கப்படும். எலும்பு நாவலந்தீவு என்றும், மேதசு, சரதகத் தீவு என்றும், தசை சூரைத்தீவு என்றும், நரம்பு கிரௌஞ்சத் தீவு என்றும் தொக்கு சான் மலித் தீவு என்றும், ரோமத்திரள் பிலட்சத் தீவு என்றும், உகிர்புஷ்கரத் தீவு என்றும் வழங்கப்படும். மூத்திரம், உப்புக்கடல் என்றும் நீர் பாற்கடல் என்றும், கபம் சுராசிந்து என்றும், மஜ்ஜை – நெய்க்கடல் என்றும், வாய்நீர் கருப்பஞ்சாற்றுக் கடல் என்றும், இரத்தம் தயிர்க்கடல் என்றும், வாயில் உண்டாகும் இனிய புனல், சுத்தோதக சிந்து என்றும் வழங்கப்படும்.

சரீரத்தில் இரண்டு சக்கரங்கள் உள்ளன. நாத சக்கரத்தில் சூரியனும் பிந்து சக்கரத்தில் சந்திரனும் நேத்திரங்களில் அங்காரகனும் இதயத்தில் புதனும் வாக்கில் தேவ குருவும், சுக்கிலத்தில் அசுர குரு சுக்கிரனும், நாபியில் சனியும், முகத்தில் இராகுவும், காலில் கேதுவும் உள்ளனர். உடலில் பதினான்கு உலகங்களும் சப்தகுலாசலங்களும் தீவுகளும் நவக்கிரகங்களும் இருக்கும் வகையை மேலே சொன்னேன். ஜீவன், கர்ப்பவாசம் செய்யும்போது, தானே அந்த ஜீவனுக்கு ஆயுள் இவ்வளவுதான் என்றும் இன்ன வித்தை இவ்வளவுதான் என்றும் கோபம், யோகமும், போகமும் இவ்வளவுதான் என்றும் இன்ன சமயத்தில் இன்னவி தமாக மரணமுண்டாகத்தக்கது என்றும் பூர்வ கர்மானுசாரத்தை அனுசரித்து, பிரமன் விதித்து நிச்சயித்து விடுகிறான்.

ஆகையால் தீர்க்க ஆயுளும் உயர்ந்த வித்தையும் போகமும் யோகமும் மற்ற யாவுமே மறுஜன்மத்திலாவது ஒருங்கே அடைவதற்காகவாவது ஜீவன் நற்கர்மங்களைச் செய்ய வேண்டும் என்று சாஸ்திரங்கள் அறிவித்துள்ளன. ஜீவன் தன் பூர்வ ஜன்மத்தில் செய்த கர்ம வினைப்பயனையே மறு ஜன்மத்தில் அடைகிறான் என்பதில் ஒரு சிறு சந்தேகமும் வேண்டியதில்லை. கருடா! காசியபன் மைந்தனான உனக்கு, இவை அனைத்தையும் உலக நன்மையைக் கருதிக் கூறினேன், இனி, நீ கேட்க வேண்டியது ஏதாவது இருந்தால் அதையும் நீ கேட்கலாம் நான் அதற்கும் பதில் சொல்லுகிறேன்! என்று திருவாய் மலர்ந்தருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. யமன் அரண்மனை, சித்திரகுப்தன் மண்டபம், பாப அவத்தைகள்

கருடன் சிறிது யோசித்து விட்டு, மணிவண்ணப் பெருமானைத் தொழுது 'சர்வ வியாபியே! யமபுரி என்பது எங்குள்ளது? அந்த எமலோகத்துக்குச் செல்லும் மார்க்கம் எப்படிப்பட்டது மீண்டும் எனக்கு விளக்கமாகக் கூற வேண்டும்' என்று பிரார்த்தித்தான்.

திருமால், கருடனை நோக்கிக் கூறலானார்:

வைனதேயா! யமபுரி மார்க்கத்தைப் பற்றி முன்னமே நான் கூறியிருக்கிறேன். மீண்டும் அதைப் பற்றிக் கேட்டதால் எஞ்சியவற்றை இப்போது சொல்லுகிறேன், கேட்பாயாக. யமபுரிக்குச் செல்லும் வழியில் சிறிது தூரம்வரை செம்பை உருக்கி வார்த்தது போல கனல் காந்திக் கொண்டிருக்கும். அதற்கப்பால் சிறிது தூரம் இண்டை முட்களாலும் தீக் கொள்ளிகளாலும் நிறைந்திருக்கும். சிறிது தூரம் பொறுக்க முடியாத குளிர்ப் பிரதேசம் அமைந்திருக்கும். பூலோகத்திற்கும் எமலோகத்திற்கும் இடையே எண்பத்தாறாயிரம் காத வழி உள்ளது என்று முன்னமே உனக்குச் சொல்லியிருக்கிறேன். அத்தனைக் காத வழியிலும் பாபஞ் செய்த ஜீவனுக்கு அந்த வழி நெடுகிலும் மரத்தினிழலும் பருகுவதற்குத் தண்ணீரும் சிறிதளவுகூடக் கிடைக்காது. பாபிகளுக்கு யமலோகமும் அதற்குச் செல்லும் மார்க்கமும் மிகவும் கொடுமையாகவே இருக்கும்

கருடா! இனி யமலோகத்தின் தன்மையைச் சொல்லுகின்றேன் கேட்பாயாக தென்திசைக்கும் நிருதியின் திசைக்கும் நடுமய்யத்தில் யமபுரியானது வஜ்ஜிரமயமாயும், தேவர்கள் அசுரர்கள் ஆகிய இரு தரத்தாராலும் சிதைக்கத்தகாததாயும் அமைந்திருக்கும் அந்தப் பட்டினத்திற்கு நடுவில் சச்சதுரமாய் நூறு யோசனை விஸ்தீரணமுள்ளதாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தைந்து யோசனை உயரமுள்ளதாயும் அநேகஞ் சாளரங்களைக் கொண்டதாயும், துகிற் கொடிகள், முத்துக் கோவைகள், தோரணங்கள் இவற்றால் அலங்கரிக்கப் பெற்றதாயும் சுவர்ணமயமாகவும் எமதர்மராஜனின் அரண்மனை அமைந்திருக்கும் அந்த அரண்மனையின் உள்ளே பத்து யோசனை அகல நீளமுள்ள அநேகமாயிரம் வைரத்தாலான தூண்கள் நிறுத்திய மண்டபமும் மாளிகையும் அமைந்திருக்கும். அங்கு



சைத்திய சௌரப்பியமான மென்காற்று இயங்குவதாயும் எப்போதும் ஆடலும் பாடலும் இடைவிடாது நிகழும் ஒரு திவ்விய மண்டபம் இருக்கும் அந்த மண்டபத்தில் யமதூதர்கள் கரங்குவித்த வண்ணம் ஒரு புறம் நின்று கொண்டிருப்பார்கள். ரோகங்கள் எல்லாம் கோர உருவத்துடன் நின்று கொண்டிருக்கும். அவர்களுக்கு நடுவில் கண்டவர் அஞ்சும்படியான ரூபத்தோடு மகிழ்ச்சியாக யமதர்மன் வீற்றிருப்பான்.

அவன் வீற்றிருக்கும் அந்த மண்டபத்திற்கு அருகில் இருபத்தைந்து யோசனை அகல நீள முள்ளதாகவும் பத்து யோசனை உயரமுள்ளதாயும் பலவித அலங்காரங்களால் அழகு செய்யப்பட்ட சித்திர குப்தனுடைய அரண்மனை இருக்கிறது. அந்த அரண்மனையில் ஒரு திவ்விய மண்டபத்தில் சித்ரகுப்தன் வீற்றிருப்பான். அவன் சகல ஜீவன்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் பாப புண்ணியங்களை ஒன்று கூட விடாமல் கணக்கு எழுதிக் கொண்டிருப்பான். அவன் எழுதும் கணக்கில் சிறு பிழையும் உண்டாக மாட்டாது.

அந்தச் சித்திரகுப்தனுடைய அரண்மனைக்குக் கிழக்குத் திசையில் ஜுரத்துக்கும், தென் திசையில் சூலை நோயோடு வைசூரி நோய்க்கும், மேற்குப் பக்கத்தில் காலபாசத்தோடு கூடிய அஜீர்ணத்துக்கும் அருசிக்கும் வடக்குப் பக்கத்தில் வயிற்று வலிக்கும், தென் கிழக்கில் மயக்கத்துக்கும், தென்மேற்கில் அதிசார நோய்க்கும் வடமேற்கில் ஜன்னிக்கும் தனித்தனியே கிரகங்கள் அமைக்கப்பட்டிருக்கும். அவ்ரோகங்கள் யாவும் யமனுடைய உத்திரவை எதிர்பார்த்துக் கொண்டே அம்மனைகளில் வசித்துக் கொண்டிருக்கும்.

'கருடா! யமனுடைய அரண்மனைக்குத் தென் திசையில் பாபஞ்செய்த சேதனர்களை, யமகிங்கரர்கள் பற்பலவிதமாக ஹிம்சை செய்வார்கள்.



சில ஜீவர்களை உலக்கைகளால் நையப் புடைக்கிறார்கள். சிலரைக் கூரிய கொடிய ஆயுதங்களால் சிதைக்கிறார்கள். சிலரைச் சூரிகையால் சீவுகிறார்கள். சிலரைச் செக்கிலிட்டு வதைக்கிறார்கள். சிலரை இரும்புச் சலாகையில் கோர்த்துப் பெருந்தணலில் வாட்டுகிறார்கள். இன்னுஞ் சிலரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினிக் குண்டத்தில் வேக வைக்கிறார்கள். வைனதேயா! அங்கு செம்பினால் செய்யப்பட்ட ஆண்பாவைகளும் பெண்பாவைகளும் அக்கினியில் சூடேற்றப்பட்டு தகத்தகாயமாய் தகித்துக் கொண்டிருக்கின்றன. பரஸ்திரீகளைக் கூடி மகிழ்ந்த ஜீவர்களை யமதூதர்கள் பார்த்து, 'பாவிகளே! தருமமும் மானமும் பாராமல் பிறன் மனைவியரைப் புணர்ந்த இன்பம் பூவுலகத்தில். இவ்வுலகத்தில் மாற்றான் பட்ட மனத்துன்பமே, இப்போது நீங்கள் அனுபவிக்க நேரிடும் பயனாகும் அந்தப் பயன் இதுவேதான்!" என்று அதட்டிச் சொல்லி, நெருப்பெனக் கொதிக்கும் பெண் பதுமையோடு, பாவிகளை ஒன்று சேர்ப்பார்கள். பரபுருஷரோடு சேர்ந்த மங்கையரை, தகிக்கின்ற ஆண் பதுமையோடு அங்ஙனமே ஒன்று சேர்ப்பார்கள்.

விநுதையின் மைந்தனே! புருஷனானவன் தன் மனைவியைத் தவிர, பரஸ்திரீயை கூடிக் கலந்ததற்கும், ஸ்திரீயானவள் தனது கணவனையன்றிப் பரபுருஷனைக் கூடியதற்கும், யமலோகத்தில் விதிக்கப்படும் தண்டனையைப் பார்! இத்தகைய கொடிய தண்டனை உள்ளதாக இருந்தும் ஸ்திரீ புருஷர்களில் நல்லொழுக்கத்தில் நிற்பவர்களைப் பூவுலகில் காண்பதற்கே அரிதாகி வருகிறது. யமபுரியில் சில பாவிகளைக் கரும்புகளை கரும்பாலையில் சிக்க வைத்து கசக்கி சாறு பிழிவதைப் போல ஆலையில் கொடுத்து வதைக்கிறார்கள். சிலரை நகரங்களில் தள்ளி அடியாழம் வரையிலும் அழுத்துகிறார்கள். கடன் வாங்கிக் கொண்டு, திருப்பிக் கொடுக்காதவர்களை, யமகிங்கரர்கள் அழைத்துச் சென்று கடன் கொடுத்தவனுக்கு அதைத் திருப்பிக் கொடுப்பதை விட்டு அவனிடம் வன்கண்மை பேசினீர்களே! என்று முனிந்து நையப் புடைக்கிறார்கள். பாவிகள் படுகின்ற துயர்களை விளக்கிச் சொல்வதால் பயன் என்ன? இன்னவன் அறநெறியாளன் இன்னவன் அதருமிஷ்டன் இன்னவன் சுவர்க்கம் புக வேண்டியவன் இன்னவன் நரகம் செல்ல வேண்டியவன் என்பதை அவரவர் ஒழுக்கத்தைக் கொண்டே உணரலாம். தர்மம் செய்தவனே சுவர்க்கம் புகுவான் என்பது நிச்சயம். ஆகையால் யாவரும் தர்மநெறியிலேயே வாழ்ந்து, தருமஞ்செய்வதே இகலோக வாழ்வுக்கும் பரலோக வாழ்வுக்கும் நல்லது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. சில தர்மங்களும் தீட்டுகளும்


அகார வார்ச்சியரான திருமால் வேதவுருவினனான கருடனை நோக்கி, 'கருடா! நான் உனக்குச் சில தர்மங்களைச் சொல்லுகிறேன். கேள்.

கருடா! கிருதயுகத்தில் மகாதவம் செய்வது மானிடர்க்கு உத்தமமானது் திரேதாயுகத்தில் தியானஞ் செய்வது உத்தமமாக இருந்தது, துவாபரயுகத்தில் யாகங்கள் செய்வது உத்தமமாக இருந்தது் கலியுகத்தில் தானங்கள் செய்வதே உத்தமமாகும். இல்லறத்தில் இருப்பவனுக்கு, எந்த யுகமானாலும் யாகாதி கர்மங்கள் செய்வதும், கோயில், குளம், சத்திரம், தோட்டம் முதலியவற்றை உண்டாக்கித் தர்மஞ் செய்வதும் அதிதியாராதனம் செய்வதும் உத்தமமான செயல்களாகும். இல்லறத்தில் இருப்பவன், தன் தாயாதிகளில் யாரேனும் இறந்துவிட்டால், அவரைக் குறித்து தர்ப்பணம் செய்வது அவசியம். இறந்தவன், அந்தப் புனலைப் பெற்று மகிழ்வான். இறந்த தினத்தின் மூன்றாம் நாளில் மூன்று சிறு கற்களைக் கயிற்றில் கட்டி இரவு நேரத்தில் எறிய வேண்டும். சஞ்சயனம் செய்த பிறகு தாயத்தார் அனைவரும் இறந்தவனுக்குத் தர்ப்பணம் செய்ய வேண்டும்.

முதல் மூன்று வர்ணத்தாராகிய பிரம, க்ஷத்திரிய, வைசியருக்குச் சூத்திரன் தர்ப்பணம் செய்யலாம். பிரம, க்ஷத்திரியருக்கு வைசியன் தர்ப்பணம் செய்யலாம். க்ஷத்திரியன் பிராமணனுக்குத்தர்ப்பணம் செய்யலாம். பிராமணன் தன் மரபினருக்கல்லாமல் மற்ற குலத்தாருக்கு ஒன்றுமே செய்யலாகாது. சூத்திரனுடைய சவத்தோடு பிராமணன் சுடுகாட்டுக்குச் சென்றால், அந்தப் பிராமணனுக்கு மூன்று நாட்கள் ஆசௌசம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூன்று நாட்கள் கழித்து, அந்தப் பிராமணன் காவிரி போன்ற புனித நதியில் குளித்துத் தூய்மையாக வேண்டும். மாய்ந்தவனுக்குக் கர்மம் செய்பவன் யாராயினும் அவன் பஞ்சணையில் படுத்துறங்கக் கூடாது. இறந்தவனுடைய நல்ல குணங்களையே எடுத்துச் சொல்ல வேண்டும். எமனைக் குறித்து ஸ்தோத்திரம் செய்ய வேண்டும். இறந்தவனுக்கு, அவனைக் குறித்துப் போடப்படும் பிண்டங்களாலேயே சரீரம் உண்டாகிறது. எனவே, பத்து நாட் கிரியைகளையும் தவறாமல் முறைப்படிச் செய்வது அவசியம். பத்துநாள் கருமங்களைச் செய்யாவிட்டால், மாய்ந்தவன் சரீரம் பெற முடியாமல் வருந்துவான்.

தனுர்வேதமுணர்ந்த வில்லாளன் ஒருவன், குறி வைத்து அம்பை எய்தால், அந்த அம்பானது குறி தவறாமல் குறித்த இடத்தில் தைப்பது போல, கலைகள் உணர்ந்த சற்புத்திரன் மரித்த தன் தந்தையர்க்குரிய கர்மங்களைச் செய்தால், அக்கர்ம வயலர்கள் அவர்களைத் தவறாமல் சென்றடையும். மரித்த ஜீவன், மூன்றாவது நாள் நீரிலும், மூன்று நாட்கள் அக்கினியிலும், மூன்று நாட்கள் ஆகாயத்திலும் ஒரு நாள் தனது வீட்டிலும் ஆவியுருவில் வசிப்பான். முதல் நாளிலும், மூன்றாவது நாளிலும், ஐந்தாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளிலும், ஏழாவது நாளிலும், ஒன்பதாவது நாளிலும், பதினொன்றாம் நாளிலும் நவசிரார்த்தம் செய்ய வேண்டும். முதல் நாளன்று, எந்த இடத்தில் தர்ப்பணம் முதலியவை செய்யப்பட்டனவோ, அதே இடத்தில் மற்ற பத்து நாள் கிரியைகளையும் பத்து நாட்களிலும் செய்ய வேண்டும். பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களில் எந்தக் குலத்தவருக்கு எத்தனை நாட்கள் ஆசௌசம் விதிக்கப்பட்டிருக்கிறதோ, அத்தனை நாட்களும் பிண்டத் தர்ப்பணம் செய்தல் வேண்டும். அது அவசியமாகும்.

எந்த திதியில் ஒரு ஜீவன் மரிக்கிறானோ, அந்த திதியில் மாசிகம் செய்தலும் அவசியம். பதினொன்றாம் நாள் பலகாரத்தோடு சோறு சமைத்து நாற்சந்தியில் கொட்டி ஸ்நானம் செய்ய வேண்டும். ஒருவன் அதிக வருத்தப்பட்டு இறந்து விட்டான் என்றால், அவனை குறித்து ஏகோதிஷ்ட சிரார்த்தம் சிறப்பாக செய்யப்படுமானால், அவன் வருத்தம் நீங்கி இன்பமடைவான். அந்த ஏகோதிஷ்ட சிரார்த்தத்தை க்ஷத்திரியன் பன்னிரண்டாவது நாளிலும் வைசியன் பதினைந்தாவது நாளிலும் செய்யவேண்டும். தாய் தந்தை மரித்தாலும் மகவு பிறந்தாலும் சூத்திரக் குலத்தாருக்கு ஒரு மாதம் வரையில் ஆசௌசம் உண்டு. அரை மாதம் உண்டு என்று சொல்வாரும் உண்டு. சூத்திரன் பதினைந்து நாட்களுக்குப் பிறகு, ஏகோதிஷ்ட சிரார்த்தம் செய்ய வேண்டும். ஒருவன் இறந்தால், பத்து நாட்கள் தீட்டுடைய அவனுடைய தாயாதிக்காரன் கருமம் முடிந்த பிறகு மூன்று மாதங்களுக்குள்ளாக இறந்த செய்தியை எப்போது கேட்பினும் அத்தாயத்தானுக்கு மூன்று தினம் தீட்டு உண்டு. மூன்று மாதத்திற்குப் பிறகு ஒரு வருஷத்திற்குள் கேட்டால் ஒரு தினம் மட்டுமே தீட்டு உண்டு. ஒரு வருஷம் முடிந்த பிறகு கேட்டால் கேட்டவுடனேயே ஸ்நானம் மட்டும் செய்தல் போதும் இந்த விதி எல்லா வருணத்தாருக்கும் பொதுவாகும்.

'வைனதேயா! முன்பே சய்யாதானம் செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். எந்தப் புருஷனும் அன்ன தானத்தைத் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையாலேயே செய்ய வேண்டும். நல்ல மரத்தில் கட்டில் செய்து சொர்ணத்தாலும், வெள்ளியாலும் பூண்கள் போட்டு, முத்து மாலைகளாலும் மலர் மாலைகளாலும் அந்தக் கட்டிலை அலங்கரித்து பாயில் விரித்துத் தீபம், சந்தனம், புஷ்பம், தாம்பூலம் இவற்றுடன் நறுமண முடைய மற்ற யாவும் நீருடன் செம்புத்தாலியும் அலங்காரத்திற்கும் லீலார்த்தமாகவும் ஸ்திரீ புருஷர்களுக்கு வேண்டியவைகளை அந்தக் கட்டிலில் வைத்து, நவக்கிரகங்களைப் பூஜித்து, சிவன் முதலிய தேவர்களும், பார்வதி முதலிய தேவமங்கையரும், லட்சுமி நாராயணரும் இந்தச் சய்யாதானத்தால் திருப்தியடைய வேண்டும் என்று சொல்லி, யோக்கியனாகவும் குடும்பஸ்தனாகவும் உள்ள உபாத்தியாயனுக்குத் தானஞ்செய்து அவனை வலம் வந்து சேவிக்க வேண்டும் என்றருளினார்.

## 23. சமக்கிரியைகள்

கருடன், முராரியை நோக்கி, 'சர்வேசா! தாயைப் பெற்றவளும் அவளைப் பெற்றவளும், அவளை பெற்றவளும், தந்தையைப் பெற்றவனும் அவனைப் பெற்றவனும், அவனைப் பெற்றவனும் உயிரோடு இருக்கும் போது, தாயாவது தந்தையாவது இறந்துவிட்டால் அவர்களுக்குப் புத்திரன் எவ்வாறு பிண்டஞ் சேர்க்கவேண்டும்? இந்த விஷயத்தை அடியேனுக்குக் கூறவேண்டும் என்று வேண்டினான். அதற்குப் பகவான் கூறலானார்:

'வைனதேயா! தாயின் தலைமுறையிலும் தந்தையின் தலைமுறையிலும் உயிருடன் இருப்பவர்களுக்கு மேலே மூன்று தலைமுறைப் பிதுர்க்களின் பிண்டத்தோடு இறந்தவனின் பிண்டத்தையும் சேர்க்க வேண்டும். பிண்டம் உண்ணும் பிதுரர் மூவர், தியாசகர் மூவர், லேபகர் மூன்று பேர், பிண்டம் போடும் பந்தியில் வருவோன் ஒருவன், இவ்வாறு தந்தையின் மரபிற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துப் பேர்களும் உள்ளார்கள். ஒருவன் மரித்துப் பிதுரர்களோடு சேர்ந்ததும், நான்காம் பாட்டன் முதல் தியாசகன் ஆகிறான். மூன்றாம் தியாசகன் முதல் லேபகன் ஆகிறான். மூன்றாம் லேபகன் பந்தியில் வருவோனாகிறான். பந்தியில் வருவோன் வராமல் ஒழிகிறான். புத்திரன் சிரார்த்தம் செய்தால் மாண்டு போன தந்தை மகிழ்ந்து, அந்தப் புத்திரனுக்கு ஒரு புத்திரனைத் தருகிறான். சிரார்த்தம் செய்வதில் பிதுரர்களுக்குத் திருப்தியுண்டாதலன்றிச் செய்பவனுக்கு மிக்க பயன் உண்டு. அவிட்டம் முதல் ரேவதி நட்சத்திரம் வரையிலுள்ள ஐந்து நாட்கள் சிறப்பானவையல்ல. அந்த ஐந்து நட்சத்திரங்களில் மரிப்பவனுக்கு உடனடியாகச் சமஸ்காரங்களைச் செய்யலாகாது. அந்நக்ஷத்திரங்கள் கழிந்த பிறகே சமஸ்காரங்களைச் செய்ய வேண்டும். உயிர் நீங்கிய பிறகு தேகத்தை வைத்திருக்க சிறிதும் அமையாது. ஆகையால் உடனே சமஸ்காரம் செய்யவேண்டும். தனிஷ்டா பஞ்சகத்தில் இறந்தால் தோஷ நிவர்த்தியின் பொருட்டுச் சாஸ்திரத்தில் கூறியுள்ளபடி சில கருமங்களை அதிகமாகச் செய்தல் வேண்டும்.

மேலே சொன்ன ஐந்து நட்சத்திரங்களிலும் இறந்தவர்கள் நற்கதியை அடைவார்கள். ஆகையால் எள்ளும், கோவும் ஹிரண்யமும் நெய்யும் தானம் கொடுக்க வேண்டும். கனிஷ்டா பஞ்சகத்தில் மாய்ந்தவர்க்கு சாஸ்திரத்தில் சொல்லிய படிச் செய்யாவிட்டால் கருமஞ்செய்யுங் கர்த்தா துன்பம் அடைவான். பிரேதத்தை உத்தேசித்து செய்யப்படும் சிரார்த்தத்தில் பிராமணர் ஆசிர்வதித்தலும் அன்னவர் க்ஷேமங்கோருதலும், இரட்டை குசையையும் பணவமும், ஓமமும் எச்சிலையும் நாய் நுகரலாகாது என்ற விதியும் சேஷத்தை உண்ணலும் விகிரமும் ஸ்வதா என்ற சப்தமும் பிதுர்சப்தமும், உடன் சொல்லுதலும் ஆவாகனமும், நமஸ்காரமும் எல்லை வரையில் பின் செல்லுவதும் வலம் வருவதும், சம்பிரதாயப்படி புண்டரம் தரித்தலும், அக்கினியில் பூர்ணாகுதி செய்தலும், ஏகோதிஷ்டமும் பதினெட்டும் வேண்டுவதில்லை. இதை அறியாமல் இவற்றைச் செய்தவன் நரகம் அடைவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருடா! ஒருவன் மரித்தவுடன் அவனது கால்களையும் கைகளையும் கட்ட உறவினரெல்லாம் சவத்தின் அருகிலேயே இருக்க வேண்டும். ஒரு கிராமத்தில் ஒரு சவம் கிடந்தால், அந்தக் கிராமத்தில் உள்ளவர்கள் அனைவரும் சோறும் நீரும் உண்ணலாகாது. அவர்கள் சோறும் நீரும் உண்டால் மாமிசம் உண்ட தோஷமும் இரத்தம் பருகிய தோஷமும் அடைவார்கள். தாம்பூல தாரணமும் செய்யக் கூடாது. தந்த சுத்தியும் செய்யலாகாது: இரவில் பிணங்கிடக்கும்போது ஆண் பெண் கூடியின்புறுதல் கூடாது என்றார் திருமால்.

## 24. பிரயோபவேசம், தலயாத்திரைகள், உலக வாழ்க்கை


கருட பகவான், பரமபத நாதனைத் தொழுது, 'எந்தையே! பிரயோபவேசம் செய்தல் என்பது யாது? அது எந்த வகையில் சிரேஷ்டமாயிற்று? பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து வந்த வீட்டை விட்டு நீங்கிப் புண்ணிய க்ஷேத்திரத்திற்குச் சென்று, அங்கு மரிப்பதால் ஏற்படும் பயன் யாது? தீர்த்த யாத்திரை செய்யப் புறப்பட்டுச் சென்ற மார்க்கத்தில் ஒருவன் மாய்ந்தான் என்றால் அவனுக்கு என்ன விளைவு உண்டாகும்? நாளெல்லாம் தீர்த்த யாத்திரை செய்பவனுக்குப் பயன் என்ன? சந்நியாச ஆஸ்ரமம் பெற்றவன் அவ்வாசிரமத்திற்குரிய ஒழுக்கத்திலிருந்து தவறுவானாகில் அவன் எக்கதியை அடைவான்? இவற்றையெல்லாம் அடியேனுக்கு சவிஸ்தாரமாகச் சாற்றியருள்வீராக! என்று வேண்டினான்.

அதற்குப் பரமபத நாதன் மகிழ்ந்து கூறலானார்:

'வைனதேயா! எவனொருவன் ஆகார வியவகாரம் ஒன்றுஞ் செய்யாமல் நியமத்தோடு தர்ப்பாசயனஞ் செய்து, என்னையே தியானஞ் செய்து கொண்டு மரிக்கிறானோ, அவன் நமதுலகை அடைவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதனாலேயே, பிரயோபவேசம் என்பது ஏற்றமுடையதாயிற்று. ஒருவன் பிரயோபவேசம் செய்த நாட்கள் எத்தனையோ அத்தனை நாட்களு க்கும் நாள் ஒன்றுக்கு ஒரு வேள்வி செய்த பயன் அவனுக்குக் கிடைக்கும். உலகியலின் உண்மை யையும் வாழ்வியலின் இரகசியத் தையும் தெய்வீக இயலின் மெய்மை யையும் உணர்ந்து, இனி வாழ்வு வேண்டியதில்லை என்று பிரயோப வேசம் செய்து நல்லுலகமடைவான். ஒருவன் இனி வாழ்வு வேண்டிய தில்லை மரித்து விடுவோம் என்று மனந்துணிந்து, அதை நல்ல முறையில் பிரயோபவேசம் செய்து மரித்து விடுவோம் என்று செயலில் இறங்கி, நடுவில் எழுந்து இல்வாழ்க்கையை ஏற்க விரும்பினால், அவன் அந்தணர் மூலமாகப் பிராயச்சித்தங்களைச் செய்து கொண்டு, பிறகு தர்ம மார்க்கத்தில் ஒழுகுதல் வேண்டும்.

சந்நியாசம் செய்து கொண்டு, நியமத்துடனிருந்து, இறந்தவனுக்கு அவன் சந்நியாச ஆசிரமத்தை ஏற்ற நாள் முதல் மரித்த நாள் வரையிலுமுள்ள நாட்களுக்கு, நாள் ஒன்றுக்கு இரண்டு வேள்விகளின் பயன்கள் அவனைச் சாரும். பிணிகளினால் துன்பமடைந்தும் மரண காலம் நெருங்கி விட்டதென்று எண்ணி சந்நியாச ஆசிரமம் பெற்றுப் பிறகு பிணி நீங்கப் பிழைத்து, இல்வாழ்க்கையை ஏற்று வாழ விரும்பினாலும் இல்லற வாழ்வுக்கு உடன்பட்டாலும் அவன் மஹாரோகம் அடைவான். அவனை விடப் பாவியானவன் ஒருவனும் இல்லை. அத்தகையவனை ஒருவனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கலாகாது. வீடு, மனைவி, மக்கள் முதலியோரையெல்லாம் நெடுங்காலம் பிரிந்து, நெடுந்தூரம் தீர்த்த யாத்திரை செய்ய வேண்டும் என்ற வைராக்கியத்துடன் யாத்திரை செய்பவனுக்கு பிரம்மாதி தேவர்கள் எல்லாம் வேண்டியவற்றைக் கொடுக்கிறார்கள். திவ்விய தேச யாத்திரை செய்ய உத்தேசித்துச் சென்று செல்லும் வழியில் விதியால் ஒருவன் மரித்தால் அவன் சுவர்க்கத்தை அடைவான்.

சந்நியாசிகளையும் தீர்த்த யாத்திரை செய்பவர்களையும் க்ஷேத்ராடனம் செய்பவர்களையும், தேவர்கள் எல்லோருமே காப்பாற்றுகிறார்கள். குறிப்பாக விஷ்ணு கணங்களே அவர்களை ரட்சிப்பார்கள். ஒருவன் மரிக்க வேண்டும் என்றே ஒரு புண்ணிய க்ஷேத்திரத்தில் நெடுங்காலம் வசித்து சிறிது தீவினை காரணமாக வேறொரு இடத்திற்குச் செல்ல நேரிட்டு, அந்த இடத்தில் மரிப்பானாகில், அவன் மறு பிறவியில் காவிரி தீரத்தில் வைதீக பிராமணக் குலத்திலும் குடும்பத்திலும், சர்வசாஸ்திர சம்பன்னனாகவும் நல்ல ஒழுக்கம் உடையவனாகவும் பகவத் பாகவத ஆசார்ய பக்தியுடையவனாகவும் பிறந்து, இறுதியில் நல்ல உலகத்தை அடைவான்.

இன்ன க்ஷேத்திரத்திற்குச் சென்று அங்குதான் நான் மரிப்பேன் என்றும் அங்கு அவ்விடம் மரிக்காமல் மீளமாட்டேன் என்றும் ஆற்றங்கரையில், நான்கு வேதங்களும் அறிந்த அந்தணர் முன்பு சங்கற்பம் செய்துகொண்டு, யாத்திரை சென்றவன் மீண்டும் தன் ஊருக்கும் தன் வீட்டுக்கும் வருவானேல் அவன் மஹாபாவியாவான். அவனும் பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும். மரண காலம் நெருங்கி விட்டது என்பதை உணர்ந்த ஒருவன், விஷ்ணுக்ஷேத்திரங்கள் ஏதாவது ஒன்றில் மரிக்க வேண்டும் என நினைத்து, அவன் யாத்திரை செய்ய நடக்கின்றான் என்றால், அடிகளுக்கெல்லாம் அடியொன்றுக்கு ஒரு பசுவைத் தானம் செய்த பயனையடைவான். எந்த காரணத்தாலாவது அவ்வாறு சென்றவன் வீடு திரும்பிவிட்டால் அவன் நடந்து சென்ற அடிகளுக்கு அடியொன்றுக்கு ஒரு பசுவைக் கொன்ற தோஷத்தையடைவான். ஒருவன் தன் இல்லற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் செய்த பாவங்கள், அவன் திவ்விய தேசங்களில் செய்யும் பகவத் பாவத சேவையாலும் தீர்த்தப் பிரசாதங்களாலும் நிவர்த்தியாகிவிடும். க்ஷேத்திரங்களில் அவன் பாபஞ் செய்து விட்டால், அப்பாவங்கள் எவற்றாலும் எந்த நாளிலும் நிவர்த்தியாகாது.

'கருடா! அன்னியருக்கு உதவி செய்வதை விடத் தன் தாய் தந்தையருக்கும் தன்னுடன் பிறந்தவருக்கும் பிறந்தவளுக்கும் கொடுப்பதே சிறப்பானது. ஒரு புத்திரன் தன் தந்தைக்குப் பொருள் முதலியவற்றைக் கொடுத்தால், அந்தச் செயல் உத்தம பிராமணனுக்கு கொடுக்கும் தானத்தால் வரும் புண்ணியத்தைவிட நூறு பங்கு அதிகமான புண்ணியமாகும். தாய்க்குக் கொடுத்தால் அந்தப் புண்ணியப் பயன் ஆயிரம் பங்கு அதிகம்! சகோதரிக்குக் கொடுத்தால் லட்சம் பங்கு அதிகப் பயன் பெறுவான். சகோதரனுக்குக் கொடுத்தால் புண்ணியத்தைக் கணக்கிடுவதற்கேயில்லை. ஒருவன் தான் வருந்திச் சம்பாதித்த பொருளை, நல்ல முறையில் விநியோகிக்க வேண்டும். எவன் ஒருவன் மனிதனாகப் பிறந்தாலும் ஒரு நாள் இறக்கத்தான் வேண்டும் என்பதை மறந்து தன்னுடைய நிலையில்லாத உடலை மிகவும் அக்கறையாகப் போஷணை செய்து ஆடையாபரணங்களால் அதை அலங்கரித்துச் சம்சார சாகரத்திலேயே மூழ்கித் தவிக்கிறானோ இத்தகையவனைப் பார்த்து, 'இந்தச் சீவனின் அறிவுத் திறன்தான் என்னே! இவன் மானிட ஜன்மம் பெற்றும், இவனது கருமத்தால் அல்லவோ இவன் நம் கையிலகப்படப் போகிறான்! என்று யமன் சிரிப்பான்.

மங்கை ஒருத்தி பரபுருஷனைச் சேர்ந்து அவன் மூலம் பெற்ற குழந்தையை தனது சொந்த கணவன் எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டு கொஞ்சிக் குலாவும் போது, அவளோ, குழந்தையை இவனோ பெற்றான் எனக்குத்தான் கணவனே ஒழிய இந்தக் குழந்தைக்கு தந்தையாவானோ? இவனோ பெற்றான்? என்னைக் கூடிக் குலாவிக் குழந்தையைப் பெற்றவன் வேறொருவன் இருக்க அதை உணராத இவன் இவனே இக்குழந்தையைப் பெற்றவனைப் போலவும், தனக்குரியது போலவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடுகிறானே என்று நினைத்து தன் கணவன் குழந்தையோடு கொஞ்சிக் குலாவுவதைக் கண்டு, அக்கப்பட மனைவியானவள் தானும் மகிழ்பவளைப் போல இதழ் நெளித்து புன்னகை புரிவாள். பூமி தேவியானவளும், அளவற்ற நிலத்தையும் கொள்ளக் குறையாத நிதியையும் அடைந்தும் கூட, தான் உடுக்காமலும் உண்ணாமலும் பிறருக்குக் கொடுக்காமலும் பொருளீட்டி வைக்கும் மூட மகனைப் பார்த்து. யாம் இவனுக்கு உரியோமோ? இதையுணராத இந்தப் பேதை மகன் எனது எனது! என்கிறானே! என்று வாய் விட்டுச் சிரிப்பாள்.

பூமியும் மற்ற பொருள்களும் ஒருவனுக்கே உரியவையல்ல. தமது தம்முடையது என்று பிதற்றிக் கொண்டு திரிபவர்களெல்லாம். இறுதியில் அரைஞாண் கயிறும் தமக்குச் சொந்தமாக எடுத்துச் செல்லாமல் அல்லவோ எமனுலகு சென்று விடுகிறார்கள்! நல்ல ஒழுக்கத்திலும் நல்ல நெறியினும் ஒழுகி, உயிரினங்களுக்கு உற்ற சமயத்தில் உதவி செய்து பூதானம் செய்பவனைக் கண்டு புவி மகள் நம்மாளுடையான் நல்லான்! அவனால் சத்பிராமணன் கையில் கொடுக்கப்பட்டோமே!' என்று மகிழ்ச்சியடைவாள். பூதானம் செய்தவனும், புனலில் மூழ்கியேனும் பஞ்சாக்கினி நடுவிலேனும் இருந்து தவஞ் செய்தவனும், வேள்விகளைச் செய்தவனும், யுத்தத்தில் புறங்காட்டாமல் போரிட்டு முன்னேறியவனும் இகத்திலும் பரத்திலும் இன்பம் பெறுவார்கள்!' என்றார் திருமால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. சுவர்க்கமும் மோட்சமும் அடைய வழிகள்!

ஆதிமத்யாந்தரஹிதரான ஸ்ரீமந் நாராயணரை, கருடாழ்வான் வணங்கி, 'ஜெகதீசா! நித்திய சிரார்த்தம் என்பதை எவ்வாறு செய்ய வேண்டும் அதை விளக்கியருள வேண்டும். என்று வினா வினான். அதற்கு அறவாழி யந்தணன் புள்ளரசனை நோக்கிக் கூறலானார்



வைனதேயா! நாள் தோறும் சத் பிராமணனுக்குப் போஜனம் செய்வித்து அன்னத்தையும் புனலையும் ஒரு கடத்தில் நிறைத்து, அதை அவ்வேதியனுக்குத் தானமாக கொடுக்க வேண்டும். இத்தகைய விதத்தில் நித்திய சிரார்த்தம் செய்வதால் மாய்ந்த ஜீவன், இன்பமடைவான். ஓராண்டுக் காலம் வரையில் அந்த ஜீவனை யமபுரம் வரையில் வழி நடத்திச் செல்லும் யமகிங்கரர்கள் அந்தச் சிரார்த்தத்தால் திருப்தி அடைவார்கள். அதனால் அவர்கள் ஜீவனுக்கு நன்மை செய்வார்கள். ஒருவன் இறந்த பன்னிரண்டாம் நாளன்று இறந்தவனைக் குறித்து சங்கற்பப் பூர்வகமாய் பன்னிரண்டு கடங்களைத் தானஞ் செய்ய வேண்டும். தரித்திரனாக இருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீவிஷ்ணுவைக் குறித்து பெரியதான ஒரு கடத்தையும் சித்திர குப்தனைக் குறித்து ஒரு கடத்தையும் தானம் கொடுக்க வேண்டும்!' என்று திருமால் கூறினார்.

அதைக் கேட்டதும் கருடன் அவரை வணங்கி, பரமபத நாதரே! மோக்ஷமும் சுவர்க்கமும் எந்தெந்த க்ஷேத்திரத்தில் மரித்தால் கிடைக்கும்? எத்தகைய கர்மங்களைச் செய்தால், அவை இரண்டும் கிடைக்கும்? அதை அடியேனுக்கு அறிவிக்க வேண்டும்!' என்று வேண்டினான்.

ஸ்ரீவைகுண்டநாதப் பெருமாள், கருடாழ்வானை நோக்கிக் கூறலானார்:

'வைனதேயா! அயோத்தி, மதுரை, கயா, காசி, அவந்திகா, துவாரகா என்ற சப்தபுரிகளில் ஏதாவது ஒன்றில் மரிப்பவன் நிரதிசய இன்பவீடாகிய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முலகை அடைவான். சந்நியாசிரமம் பெற்று மரித்தவனும் ஸ்ரீவிஷ்ணு பக்தி செய்து மரிப்பவனும் ஸ்ரீராம கிருஷ்ணாதி நாமங்களைச் சொல்லிக் கொண்டே மரிப்பவனும் பேரின்ப வீட்டை அடைகின்றனர். திருத்துழாய் பயிரிட்டவனும் அதற்குப் புனல் பாய்ச்சுகிறவனும் பாபம் நீங்கி நல்ல உலகத்தை அடைகிறார்கள். பசுவுக்கும் அந்தணருக்கும் குழந்தைகளுக்கும் ஆபத்து நேரிட்டபோது தன்னுயிரை இழக்கத் துணிந்தோனும் அவர்களை எவன் ஒருவன் ரட்சிக்கிறானோ அவன் இறுதியில் தேவர்களெல்லாம் எதிர்கொள்ளச் சுவர்க்கலோகத்தை அடைவான்.

ஸ்ரீரங்கம், காசி, குருக்ஷேத்திரம், பிருகுக்ஷேத்திரம், பிரபாசதீர்த்தம். ஸ்ரீகாஞ்சி, திரிபுஷ்கரம், பூதேஸ்வரம் ஆகிய புனித நகரங்களில் மாண்டவன் மோட்சமடைவான், ஏழு அல்லது எட்டு வயதுள்ள கன்னிகையை மணம் புரிந்தவனும் சாஸ்திரங்களை யுணர்ந்தவனும், கன்னிகை, பூமி, கிருகம், திகம், யானை இவற்றைத் தானம் கொடுத்தவனும் சுவர்க்கம் அடைவான். கிணறு, நடைவாவி, குளம், தேவாலயம் முதலியவற்றைப் புதுப்பித்தவர்கள் அவற்றை முன்பே உண்டாக்கியவர்களை விட அதிக புண்ணியத்தை அடைந்து விண்ணுலகை அடைவார்கள். குசைபுல்லால் வீடு கட்டித் தானம் செய்த எவனும், விருஷோற்சர்க்கம் செய்தவனும் சுவர்க்கம் அடைவார்கள்!' என்றார் திருமால்.

## 26. ஆசௌசம்

கேளுங்கள் முனிவர்களே! பரமாத்மா கருடனுக்கு நித்திய சிரார்த்தத்தைப் பற்றியும், புண்ணிய தீர்த்த ஸ்தலயாத்திரையை பற்றிச் சொல்லி முடிந்ததும், கருடன், பகவானை நோக்கி, 'சர்வேசா! ஆசௌசம் என்பது யாது? அதைப் அடியேனுக்குத் தெளிவாகச் சொல்ல வேண்டும்' என்று பிரார்த்தனை செய்தான்.

ஆதிநாயகன், கருடனை நோக்கிக் கூறலானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ, வைனதேயா! பிராமணனுக்குப் புத்திரன் பிறந்தாலும், பிராமணன் இறந்தாலும் அவனது தாயாதிகளுக்கு பத்து நாட்கள் வரையில் ஆசௌசம் உண்டு. ஆசௌசமுடையவர்கள் ஓமங்களையும் தேவதா ஆராதனைகளையும் செய்யக் கூடாது. ஆசௌசமுடையவர்கள் வீட்டில், அந்தத் தீட்டு நீங்கும் வரையில் யாருமே உணவருந்தக் கூடாது. நெருப்பில் வீழ்ந்து இறந்தவனுக்கும் சிங்கம், புலி முதலிய மிருகங்களால் இறந்தவனுக்கும், நாடுவிட்டு நாடு சென்றபோது வேறு ஊரில் இறந்தவனுக்கும், உடனே கருமம் செய்யக் கூடாது. ஆகையால், அந்தக் கிரியைகளைச் செய்யத் துவங்குகிற நாள் முதல் அவனது குடும்பத்திலுள்ளவர்களுக்கும் உறவினர்களுக்கும் ஆசௌசம் உண்டாகும். ஒருவன், இறந்தான் என்ற செய்தியைக் கேட்டவுடன் ஸ்நானம் செய்துவிட வேண்டும்.

அரசனுக்கும் தவஞ்செய்யும் பூசுரனுக்கும் மகவேள்விகளைச் செய்யும் விப்பிரனுக்கும், அவர்களது தாயத்தார் இறந்தால் ஆசௌசம் இல்லை, ஒருவனுக்குப் பெண் பிறந்தால் அதன் தாயத்தாருக்கு ஆசௌசம் இல்லை. பெற்ற தாய்க்கு மட்டும் பத்து நாட்கள் ஆசௌசம் உள்ளது என்பதும், தந்தைக்கு ஸ்நானம் மட்டுமே போதுமானது என்பதும் சிலரது அபிப்பிராயம். திருமணக்கோலம் கொண்டிருக்கும் காலத்திலும் யாகஞ்செய்யும் காலத்திலும் உற்சவம் செய்வதற்காகக் கங்கணம் பூண்டிருக்கும் காலத்திலும் ஆசௌசம் நேர்ந்தால், அந்த ஆசௌசம் அந்தத் தொழிலில் முனைந்து உள்ளவர்களுக்கு அந்தக் காலங்களில் இல்லை. ஓர் அசௌசம் சேர்ந்த காலத்தின் இடையிலே வேறொரு ஆசௌசம் வந்தால் பின்னர் முன்னதாக வந்த ஓர் ஆசௌசத்தோடு வந்த ஆசௌசமும் தாயத்தாருக்கு நிவர்த்தியாகும். ஆசௌசம் வருவதற்கு முன்னதாகவே, பிராமணருக்குத் தானம் கொடுக்க உத்தேசித்துள்ளவற்றை ஆசௌசம் வந்த பிறகு கொடுக்கலாம். அவற்றைப் பிராமணர்களும் வாங்கலாம்.) பசுக்களையும் பிராமணர்களையும் மங்கையரையும் பாதுகாக்கும் விஷயத்திலும் : யுத்த பூமியிலும் ஒருவன் தன் உயிரை இழந்தால், அவனைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு நாள் மட்டுமே ஆசௌசம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசௌசமே இல்லையென்றும் ஸ்நானம் செய்தாலே போதும் என்று சொல்பவர்களும் உண்டு!" என்று கூறியருளினார். திருமால்

## 27. துர்மரணமடைந்தால்?

கருடன் மாதவப் பெருமாளை நோக்கி, 'ஜகத்ரக்ஷகரே! துர்மரணம் அடைந்தவன் என்ன கதியை அடைகிறான்? அவனுக்கு எவ்வி தமான கர்மம் செய்யத்தக்கது? இதை எனக்குக் கூற வேண்டும் என்ற வேண்டினான்.

ஸ்ரீ லக்ஷ்மிகாந்தன் கூறலானார்:

'கருடா! காலால் தாண்டியதாலும் கழுத்தில் சுறுக்கிட்டுக் கொண்டதாலேனும் விஷம் அருந்தியேனும் அக்கினியில் விழுந்தும் வைரத்தைப் பொடி செய்து உண்டேனும், பறவைகளின் அலகினாலும், எருதுகள் முட்டியேனும், ஜலத்தில் விழுந்தேனும், நாய் நரிகள் கடித்தேனும் மடிந்தவர்களும், குஷ்ட ரோகத்தினாலும் தேகத்தில் புழு வுண்டாகி இறந்தவனும், பிராமண வைணவர்கள், மிலேச்சர்கள், சண்டாளர்கள் இவர்களில் யாராலேனும் அடிபட்டு மரணமடைந்தவனும் இடி விழுந்து இறந்தவனும், மரம் வீழ்ந்து மடிந்தவனும், சூத்திர மங்கையர் , ஆடை வெளுக்கும் வண்ணாத்தி, இவர்களைத் தீண்டிவிட்டு, ஸ்நானம் செய்யாமல் மரித்தவனும் நற்கதியடைய மாட்டார்கள். அவர்கள் நரகத்தையே அடைவார்கள்.

அவ்வாறு மரித்தவரைச் சார்ந்தவருக்கு ஆசௌசம் இல்லை. அவர்களுக்காக உடனடியாகக் கிருத்தியங்களைச் செய்ய வேண்டியதுமில்லை. நாராயண பலியைச் செய்த பிறகே கருமங்களைச் செய்யலாம். துர்மரணத்தை அடைந்தவன், அவன் பிராமணனாயின் ஆறு மாதங்களுக்குப் பிறகும், அவன் க்ஷத்திரியனாயின் இரண்டு மாதங்களுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிறகும், வைசியனாயின் பதினைந்து நாட்களுக்குப் பிறகும், சூத்திரனாயின் அவன் இறந்தவுடனேயும் அவரவர்க்குரிய கர்மங்களைச் செய்ய வேண்டும். கங்கா தீரத்திலாவது, யமுனா தீரத்திலாவது நைமிசாரணியத்திலாவது: புஷ்கர க்ஷேத்திரத்திலாவது, அரசமர நிழலிலாவது, மாட்டுக் கொட்டிலிலாவது, இல்லத்திலாவது நாராயணபலியைச் செய்தல் வேண்டும்.

'வேத மந்திரங்களால், பகவானை ஸ்தோத்திரம் செய்து, ஆராதனை செய்து, தெற்கு முகமாக இருந்து கொண்டு சங்கு சக்கர பீதாம்பரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரித்தவராயும், நித்தியராகவும் ஸர்வாந்தர்மியாகியும், திவ்விய மங்கள விக்கிரக அனந்த கல்யாண குண விஸ்வஷரூபராகியும் இருக்கும் ஸ்வாமீ! மரித்தவனுக்குத் தேவரீரே நற்கதி கொடுக்க வேண்டும்! என்று அந்தப் பகவானைப் பிரார்த்தனை செய்து, தியானஞ்செய்து, பக்தியுடன் பிராமணர்களுக்கு போஜனம் செய்வித்து, தானிய தானம் கொடுத்து பிண்ட தர்ப்பணம் முதலியவற்றைச் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்த தினத்திற்கு மறுதினம், சுவர்ணத்தினால் ஸ்ரீவிஷ்ணு பிரதிமை ஒன்றையும் தாமிரத்தினால் ருத்திரப் பிரதிமை ஒன்றையும் வெள்ளியினால் பிரமாவின் பிரதிமை ஒன்றையும் இரும்பினால் யமனுடைய பிரதிமை ஒன்றையுஞ் செய்வித்து, மேற்கில் ஸ்ரீ விஷ்ணுவையும் கிழக்கில் பிரமனையும் தெற்கில் யமனையும் வடக்கில் ருத்திரனையும் மத்தியில் மரித்தவனையும் வைத்துப் பூஜித்து, ஐந்து கும்பங்கள் வைத்து, அவற்றில் நவரத்தினங்கள் பெய்து, பூணூல் சாற்றி, அலங்காரஞ் செய்து, மேலே சொன்ன ஐந்து தேவர்களையும் குறித்து சிரார்த்தம் செய்து, பிண்டம் வைத்து, எட்டு வகைத் தானங்களையும் செய்து, செப்புப் பாத்திரத்தில் திலகமும் ஹிரண்யமும் வைத்துத் தானம் வழங்கி, ரிக் வேதம் ஓதியவருக்குப் பயிரோடு கூடிய பூதானத்தையும், யஜூர் வேதம் ஓதியவருக்குக் கன்றுடன் கூடிய பசுவையும் சாமவேதம் ஓதியவருக்கு சம்பா நெல்லும் கொடுக்க வேண்டும். முந்நூற்று அறுபது பலாச இலைகளில் காம்புகளினால், மரித்தவனது உடலைப் போலப் பிரதிமை ஒன்றையும் செய்ய வேண்டும்.

'கருடா! அந்த முந்நூற்று அறுபது காம்புகளுக்கும் வி வரம் சொல்லுகிறேன்!" கேட்பாயாக.

சிரசுக்கு நாற்பதும், கழுத்துக்குப் பத்தும் மார்புக்கு இருபதும், வயிற்றுக்கு இருபதும், இரு கரங்களுக்கு நூறும், இடைக்கு இருபதும் தொடைகளுக்கு நூறும், முழந்தாள்களுக்கு முப்பதும், இனக் குறிக்கு நாலும், விருஷணங்களுக்கு ஆறும், கால்களுக்குப் பத்தும் வைத்து, மீண்டும் சிரசுக்குத் தேங்காயும் முகத்துக்குப் பஞ்சரத்தினமும், நாவுக்கு வாழைப் பழமும், மூக்கிற்கு எட்பூவும், காதுக்கு எள்ளும், நரம்புக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரைத் தண்டும், தசைக்கு அன்னமும், இரத்தத்திற்குத் தேனும், மயிர்களுக்கு சவுரியும், தோலுக்கு கிருஷ்ணாஜீனமும் ஸ்தனப் பிரதேசத்துக்கு குன்றியும், நாபிக்குத் தாமரைப் பூவும் விருக்ஷணங்களுக்கு பனங்காய்களையும் வைத்து, சந்தன புஷ்பங்களால் அலங்காரஞ் செய்து, சாஸ்திர முறைப்படிக் கிருத்தியங்களைச் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் துர் மரணம் அடைந்தவன் நற்கதியை அடைவான். இவ்வி



தமாகக் கர்மம் செய்யும் புத்திரனுக்குப் பத்து நாட்களும் மற்ற தாயத்தார்களுக்கு மூன்று தினமும் ஆசௌசம் உண்டு!.

## 28. காமியா விருஷோற்சர்க்கம்)

புராணிகரான சூதமாமுனிவர், சௌனகாதி முனிவர்களை நோக்கி, 'மறந்து புறந்தொழாத வைணவ ஆசார, நைமிசாரணிய வாசிகளே!' என்று கூறலானார்.

சர்வக்ஞரான பெருமான், கருடனை நோக்கிக் கூறியது:

'வைனதேயா! விருஷோற்சர்க்கத்தைப் பற்றிய வேறொரு வகையையும் சொல்லுகிறேன்' கேள்.

'முன்பு சொன்ன தினங்களில் ஒரு நாள், ஸ்தல சுத்தி செய்த பிறகு, அக்கினிப் பிரதிஷ்டை செய்து, ஒரே நிறமாக உள்ள காளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்று ஒன்றையும் அதற்குச் சிறிதான கிடாரிக் கன்று ஒன்றையும் கொண்டு வந்து அவ்விரண்டையும் மஞ்சள் நீராட்டி ஆடையாபரணங்களால் அலங்காரம் செய்து, அவற்றின் வாலில் தர்ப்பணம் செய்து விடுத்து, நாந்தி சிரார்த்தம் செய்து ஒரு பக்ஷம் பதினைந்து நாட்கள் வரையில் பிராமணர்களுக்குப் போஜனம் செய்வித்து, வெள்ளி, திலம், உதககும்பம், ஆடைகள் ஆகியவற்றைத் தானம் செய்தால் நூற்றொரு தலைமுறையில் உள்ளவர்களும் சுவர்க்கத்தை அடைவார்கள். இதற்குக் 'காமிய விருஷோற்சர்க்கம்' என்று பெயர்.

## 29. இன்ப துன்பங்களுக்குக் காரணங்களும் தானத்தால் வரும் பயன்களும்

'வைனதேயா! மரித்தபிறகும் ஒரு ஜீவன் இன்ப துன்பமடைவதற்கும், மரிப்பதற்கு முன்பு இன்ப துன்பம் பெறுவதற்கும் அந்த ஜீவன் செய்த நல்வினை, தீவினைகளே காரணமாகும். ஜீவர்கள் பலராக இருக்க ஒரு ஜன்மத்தினால் ஒரு ஜீவனால் செய்யப்பட்ட கர்மம் தன்னைச் செய்தவன் இன்னவன்தான் என்று எப்படி அறிந்து, மறு ஜன்மத்தில் அவனை எப்படிப் போய்ச் சேரும் என்று உனக்கு ஓர் ஐயம் தோன்றக் கூடும். இதில் சந்தேகம் வேண்டாம். ஓரிடத்தில் பசுக்கள் கூட்டமாகவும் மந்தை மந்தையாகவும் இருக்கிறதென்றாலும், அந்தப் பசுக் கூட்டத்தில் பல பசுக்கள் இருந்தாலும், அந்த மந்தையிலுள்ள ஒரு கன்று, தன்னை ஈன்ற பசுவையே அடைவது போலவே, கர்மமும் தன்னைச் செய்தவன் எவனோ அவனைத்தவற விடாமல், அவனையே சென்றடையும்.

வைனதேயா! பூதானம் செய்வதை விட உயர்ந்த உத்தமமான தானம் வேறில்லை. உண்மை பேசுவதை விடப் புண்ணியம் வேறில்லை. பொய் பேசுவதையும், பொய்ப் பத்திரம் எழுதுவதையும் விடப் பாவம் வேறில்லை. பூமி முதற் கடவுளாகிய ஸ்ரீவிஷ்ணுவுக்குச் சம்பந்தியாதலாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுரபிகள், சூரியனுடைய திருக்குமாரத்திகளாகையாலும் சுவர்ணம் அக்கினியின் மகவாதலாலும் அம்மூன்றையும் தானம் செய்வோர் அம்மூன்று உலகங்களையும் அடைபவர்களாகித் தான் தானம் செய்த பயன்களையடைவார்கள். ஒரு பசுவின் தோலின் அளவு பூ தானம் செய்தால், மஹாபாபத்திலிருந்து நீங்குவான். பூமியைத் தானம் கொடுத்து விட்டு, அதற்குப் பிறகு அவாவினால் அந்தத் தானம் கொடுத்தப் பூமியை அபகரிக்க முயன்றவனும், தானம் கொடுத்த பூமியின் பயனைத் தானம் பெற்றவன் அடையாமல் கெடுத்தவனும், தானம் கொடுத்த நிலத்தின் பேரில் ஒருவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கிட்டால் தானம் வழங்கியவனுக்கு உதவி செய்தவனும் பிரளயகாலம், வரையில் நரக வாசம் செய்வார்கள்.

ஒருவன், ஒரு தொழிலைச் செய்து வாழ்ந்து கொண்டிருக்கும் போது அந்தத் தொழிலைக் கெடுத்தவன் ஆயிரம் பசுக்களைக் கொன்ற பாவத்தையடைவான். ஒருவனுக்கு ஒரு ஜீவன் உபாயத்தைச் செய்து கொடுத்தவன் லக்ஷம் கோதானம் செய்த பயனையடைவான். நூறு பசுக்களைத் தானம் செய்வதை விட, ஒரு பசுவைக் கோல் கொண்டு ஓச்சாமலும் களவாடாமலும் இருப்பதே நல்லது. ஒருவன் ஒரு பசுவைக் கொன்று விட்டு, நூறு பசுக்களைத் தானம் செய்தாலுங்கூட, பசுவைக் கொன்ற பாவமே மேலாகும். ஒருவன் நல்ல ஒழுக்க சீலனாய், நான்மறைகளைப் பயின்ற ஓர் உத்தமப் பிராமணனை வழிபட்டு, கிருத கிருத்தியங்களில் அவனுக்குச் சிந்தனைத் துன்பமில்லாமல் செய்பவன் அசுவமேத யாகம் செய்வதை விடப் பயன் அடைவான். அவன் யாகஞ் செய்தால், தேவர்கள் திருப்தியடையாமல் அசுரர்கள் உளம் உவப்பர், யாகத்தால், பிரத்தியட்சனாகிய பூசுரன் உவப்படைகிறான். அரசன், அந்தணருடைய பொருளை அபகரித்துச் சதுரங்கச் சேனைகளைச் சேர்த்து யுத்தம் செய்தால், அந்த சேனை யுத்த பூமியில் ஒருங்கே மடியும். தன்னாலாவது தனது முன்னோர்களாலாவது விப்பிரனுக்குத் தானமாக கொடுத்த பொருளை, எக்காரணத்தாலும் அபகரிக்கலாகாது. அதனை எந்தக் காரணத்தாலாவது அபகரித்தவன், நூற்றுப் பதினாயிரம் ஆண்டுகள் மலத்தில் கிருமியாகப் பிறந்து அதிலேயே உழல்வான்.

பொருள் மீதுள்ள ஆசையால் கபடமாக நட்புக் கொண்டு, அந்தணர்க்குரியதை அபகரித்தவன், நெடுங்காலம் நரகத்தில் உழல்வான். இரும்புப் பொடியையோ, கருங்கற் பொடியையோ, விஷத்தையோ உண்டு, ஒரு வினையால் ஜீரணம் செய்து கொண்டாலும் கொள்ளலாம். பிராமணர் பொருளையுண்டு ஜீரணம் செய்ததற்கு மூவுலகிலும் ஒரு வினையும் இல்லை. தெய்வத்தின் பொருளை அபகரித்தாலும் வேதியரது பொருளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபகரித்தாலும் அந்த விப்பிரரை அவமதித்தாலும், அவ்வாறு செய்தவனின் குலம் நாசமடையும், சாஸ்திரப் பயிற்சியும் உத்தம ஒழுக்கமுடைய உத்தமப் பிராமணனை பிறர் ஆராதித்து வரும்போது, அவற்றைச் சிறிதும் அறியாத நிலையில் அந்தப் பிராமணனை அவமதித்தால் தோஷமில்லை.

சத்பிராமணனுக்குத் தானம் கொடுப்பது யாகத்தீயில் தேவர்களுக்கு ஆகுதி கொடுப்பதை ஒக்கும். அசத்தான பிராமணனுக்குக் கொடுப்பது சாம்பலில் ஆகுதி செய்வதை ஒக்கும். சங்கராந்தி புண்ணிய காலத்தில் தான தர்மங்களைச் செய்தால் அவற்றை ஆதித்தன் அளவில்லாமல் விருத்தி செய்வான். இரு பிறப்பாளருக்குரிய ஆறு தொழில்களில் ஓதுவித்தலும் யாகம் செய்வித்தலும் தானம் ஏற்றலும் ஆகிய மூன்று தொழில்களில் தானம் வாங்குதலில் தோஷம் இல்லை. வாங்குவதால் உண்டாகும் பாபம், ஸ்நான ஜபங்களால் நிவர்த்தியாகும். மற்ற இரண்டினால் வருகின்ற பாவம் நிவர்த்தியாவது என்பது அரிது. ஒழுக்கத்திலிருந்து நீங்காமலும் பரான்னம் புசிக்காமலும் உள்ள பிராமணன் கடல் சூழ்ந்த பூமி முழுவதையும் வாங்கினாலும் அவன் தோஷத்திற்கு உட்படாமல், தானம் கொடுத்தவனுக்கு விசேஷ பயன்கள் ஏற்படச் செய்வான்.

## 30. குழந்தைகளின் பாபங்கள் தர்ப்பணங்கள்

வாசுதேவன், விநுதையின் மகனாகிய கருடனை நோக்கிக் கூறலானார்:

வைனதேயா! நான்கு வயதுக்கு மேல் பன்னிரண்டு வயது வரையில் குழந்தைகள் செய்கின்ற பாவங்கள் அக்குழந்தைகளின் பெற்றோரையே சேரும். தாய் தந்தையரில்லையென்றால் அக்குழந்தைகளை ரட்சிப்பவர்களைச் சாரும். அத்தகைய பாபங்களுக்காக அவர்கள் பிராயச்சித்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து கொள்ள வேண்டும், பாபஞ்செய்யும் குழந்தைகளுக்குப் பாபமில்லை, குழந்தைகளை அரசன் தண்டிக்கக்கூடாது. இது நிற்க.

பிணியால் பீடிக்கப்பட்டு, ஸ்நானம் செய்ய முடியாமல் இருப்பவனுக்கு ஆசௌசம் நேர்ந்தால் ஆசௌசம் இல்லாத ஒருவன், பத்தரவர்த்தி ஸ்நானம் செய்து, ஓராவர்த்தி அவனைத் தீண்டி, மீண்டும் அவ்வாறு பத்தரவர்த்தி ஸ்நானம் செய்து பத்தரவர்த்தி தீண்டுவானாயின், அவன் சுத்தனாகிறான். பகவான் இல்லையென்று பிதற்றுவோன் யாவனோ, அவன் மஹாபாபியாவான். அவனுக்கும் துன் மரணம் அடைந்தவனுக்கும் உத்தரக்கிரியை செய்ய வேண்டியதில்லை. அவ்வாறு இறந்தவன் யாகம் செய்தவன் அக்கினியைத் தண்ணீரிலும் ஔபாசனத்தை நாற்சந்தியிலும் எறிய வேண்டும். பிறகு, வருஷம் முடியும் சமயத்தில் தயையுடைய அவன் மகன் சுக்கிலபக்ஷ ஏகாதசியில் ஸ்ரீ விஷ்ணுவையும் யமனையும் ஆராதித்து, மரித்தவனைக் குறித்து பத்து பிண்டங்களைப் போட்டு, அவற்றை எடுத்துக் கொண்டு, நதி, அல்லது நீர் நிலைக்குச் சென்று, அவற்றைப் புனலில் போட்டு தெற்குமுகமாக நின்று, மரித்தவனுடைய பெயரை மூன்று முறைகள் இரைந்து சொல்லி விட்டு, நீராடி வீட்டுக்குச் சென்று உபவாசம் இருந்து,

மறுநாள் வேதசாஸ்திரம் ஓதிய ஏழு அல்லது ஐந்து பிராமணர்களை வரித்து, மத்தியானத்தில், வடக்கு முகமாக அவர்களை ஆசனத்தில் உட்காரவைத்து, ஆராதித்து, பீதக ஆடைப்பிரானைப் பூஜித்து, அவ்வந்தணர்களுக்குப் போஜனம் செய்வித்து, ஸ்ரீ விஷ்ணுவுக்கும், பிரமனுக்கும் உருத்திரனுக்கும் தூதர்களுடன் வந்த யமனுக்கும், மரித்தவனுக்கும் கிரமமாக ஐந்து பிண்டம் வைத்து இறந்தவனுடைய பெயரையும் கோத்திரத்தையும் சொல்லி, ஸ்ரீ விஷ்ணு நாமங்களையுச்சரித்து, மாய்ந்தவன் பிதுரர்களுடன் சேராததால் அவனது ஐந்தாம் பிண்டத்தை எடுத்து அகற்றி, பிறகு நமஸ்கரித்து, தானங்களைக் கொடுத்து மேலே சொன்ன பிராமணர்களில் மரித்தவனின் ஸ்தானத்தில் இருப்பவனுக்கு அதிக தக்ஷிணை கொடுத்து பகவான் திருப்தியடைந்து சுபிட்சிக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பிரார்த்தனை செய்து, அவ்வந்தணர்களைப் பிரதக்ஷண நமஸ்காரம் செய்து, பிறகு தெற்கு முகமாக இருந்து தர்ப்பணம் செய்ய வேண்டும். இன்னமும் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று புத்திரனுக்கு மனவிருப்பம் இருந்தால், சுவர்ணத்தில் சர்ப்பஞ் செய்து, சாஸ்திரம் விதித்துள்ளபடி, யாவும் செய்யலாம்' என்றார் திருமால்.

## 31. வருஷ நித்திய சிரார்த்தங்கள்


ஷட்குண பரிபூரணனாகிய பகவான், கருடனை நோக்கிக் கூறலானார்:

'காசிபன் மகனே! புத்திரன் முதலியோர், தன் தாய் தந்தையர்களைக் குறித்து ஆண்டு தோறும் சிரார்த்தம் செய்ய வேண்டும். தந்தை தன் மகனுக்கும், தமையன் தன் தம்பிக்கும் சிரார்த்தம் செய்யும்படி நேரிட்டால், தன் தலைமுறையில் உள்ளவரைக் குறிக்காமல், இறந்தவனைக் குறித்து மட்டுமே செய்யவேண்டும். ஆசௌசம், விருத்தி முதலியவை நேரிட்டால், அவை நீங்கிய தினத்தில் சிரார்த்தம் செய்ய வேண்டும். மரித்தவனுக்குக் கிருத்தியம் செய்யும் பொழுதே, சபிண்டீகரணம் செய்யாமல் மாசிகம் மட்டுமே செய்து வரும்போது, ஆசௌசம் நேர்ந்து மாசிகம் நிறுத்தப்படுமானால், அந்த மாசிகத்தை மறு மாசிகத்தோடு சேர்த்துச் செய்யல் வேண்டும். சபிண்டீகரணம் செய்து மாசிகம் செய்யப்பட்டு வந்தால், ஆசௌசத்தால் நின்ற மாசிகத்தை, அந்த ஆசௌசம் நீக்கிய தினத்தில் செய்யலாம்.

பூணூல் பூணாத புத்திரன், சிரார்த்தம் செய்யும்படி நேரிட்டால் சங்கற்ப விதானத்தோடு செய்ய வேண்டும். ஒரே காலத்தில் தேசாந்திரத்தில் பலர் இறந்தார்கள் என்று கேள்வியுற நேரிட்டால், யாவன் இறந்தான் என்று முன்பு கேட்டானோ அவனுக்கு முன்னதாகவும் மற்றவருக்குப் பிறகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிரியைகளைச் செய்ய வேண்டும். தினம் தெரிந்து, மாதம் தெரியாவிட்டால், ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி ஆகிய இந்த மாதங்களில் கிருஷ்ணபக்ஷத்தில் அஷ்டமியிலாவது, அமாவாசையிலாவது செய்யலாம். தேசாந்தரத்தில் ஒருவன் இறந்தால், அவன் இறந்த தினமாவது மாதமாவது தெரியாவிட்டால், அவன் தேச யாத்திரைக்குப் புறப்பட்ட திதியில் செய்ய வேண்டும். ஒரு குடும்பத்துக்குத் தலைவனாக இருந்தவன். அவனைச் சார்ந்த சிலரோடு தேசாந்திரம் சென்ற போது, அவர்களில் ஒருவன் இறந்துவிட்டால், அந்தத் தலைவன், அங்கேயே ஆசௌசம் அனுஷ்டித்து பிறகு மனைக்கு வருவானால், அந்தக் காலத்தில் அவனது புத்திரன் வேறு ஒருவனுக்கு சிரார்த்தம் செய்து கொண்டிருந்தால், வந்த தலைவன், சிரார்த்தம் செய்து முடியும் வரையில் சற்று தூரத்தில் இருந்து, பிறகே வீட்டுக்கு வருதல் வேண்டும்.

சிரார்த்தத்துக்கு வரிக்கப்பட்ட பிராமணன் மேற்கூறிய செய்தியை முன்னதாக உணர்ந்தும் அதைச் சிரார்த்தம் செய்யும் புத்திரனுக்குச் சொல்லாமல், சிரார்த்தத்தில் சாப்பிட்டால் தோஷம் அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமணனையே சாரும். தாய் தந்தையர்கள் இறந்த திதியை மறந்து விட்டால் அஷ்டமியிலாவது, ஏகாதசியிலாவது, அமாவாசையிலாவது நீத்தார் கடன்களைச் செய்தல் வேண்டும். அவற்றைச் செய்யாமல் விட்டு விடக்கூடாது. சிரார்த்தம் செய்யாமல் விடுபவன் எவனோ, அவனே சண்டாளன். ஒருவன் மரிக்கும் காலம் வரையில் நாள்தோறும் நித்திய சிரார்த்தம் செய்வானாகில் அவனுக்கு மிகவும் நன்மையுண்டாகும். இறந்தவனைக் குறித்தல்லாமல் உயிரோடு இருப்பவன் தன் க்ஷேமார்த்தமாகச் செய்யத் தக்கதாகிய இந்த நித்திய சிரார்த்தத்துக்கு விதியொன்றும் இல்லை. ஆவாஹன முமில்லை. பிராமணார்த்தம் சாப்பிடுகிறவனுக்கு யாதொரு நிர்ப்பந்தமான விதி முறை யெதுவுமில்லை. தினந்தோறும் ஒரு பிராமணனுக்குப் போஜனம் செய்வித்தல் மட்டுமே போதுமானது.' என்று திருமால் கூறியருளிவிட்டுக் கருடனை நோக்கி, 'கருடா! நீ என்னைக் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் உரிய பதில்களைச் சொல்லி விட்டேன். இனி, கேட்க வேண்டியது ஏதாயினும் கேட்பாயானால் அதற்கும் பதில் சொல்கிறேன்' என்றார்.

## 32. முற்பிறப்பின் நல்வினை தீவினை அறிகுறிகளும் மறுபிறவிகளும்


கருடன், ஸ்ரீ வாசுதேவனைத் தொழுது, 'ஸ்வாமீ!! உலகத்தில் தோன்றும் ஜீவர்களில் ஒரு சில குறிப்பிட்ட ஜீவர்களை, இந்த ஜீவன் பூர்வ ஜன்மத்தில் இன்ன பாவத்தை செய்தவன், இந்த ஜீவன் இன்ன புண்ணியம் செய்தவன் என்பதைப் பகுத்தறியும் அறிவாற்றலால் அறியலாமோ? பாபஞ் செய்தவரைத் தண்டிப்பவன் யமனைத் தவிர வேறு ஒருவரும் இல்லையா? இந்த விஷயத்தைப் பற்றி அடியேனுக்கு விளக்கமாகச் சொல்ல வேண்டும்!' என்று வேண்டினான்.

அதற்குப் பரந்தாமன், பக்தனாகிய கருடனை நோக்கிக் கூறலானார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிப முனிவரின் மகனே! இந்த ஜீவன் இன்ன பாவத்தைச் செய்தவன் என்பதை நன்றாக அறிந்து கொள்ள முடியும். மாணவன் ஒருவன் தவறுதல் செய்து விட்டால், அவனை அவனது ஆசாரியன் சிக்ஷிக்கிறான். அவன் துஷ்டனாக இருந்து, ஆசாரியனது ஆணைக்கு அடங்காதவனாக இருந்தால் அவனை அரசன் தண்டிப்பான். சிஷ்டனாயினும் துஷ்டனாயினும் யாரும் அறியாதவாறு பாபஞ் செய்தால் அவனை யமன் நன்றாகத் தண்டிப்பான். பாபஞ்செய்தவன், அந்தப் பாப நிவர்த்தியின் பொருட்டு, பிராயச்சித்தம் எதுவும் கொள்ளாமல் மரித்து விட்டான் என்றால், அவன் யமலோகத்தில் நெடுங்காலம் நரகவாசஞ் செய்து, நாய் நரி முதலிய இழிவான பிறவிகளை அடைந்து, பிறகு மீண்டும் மானிடப் பிறவியை அடைந்து, முன்பு மாண்ட ஜன்மத்தில் செய்த பாபத்தை, யாவரும் அறியத்தக்க அடையாளங்களுடன் விளங்குவான்.



வார்த்தைகள் எதையும் சொல்ல முடியாதவாறு நெஞ்சடைப்பு உடையவனைக் கண்டால், அவன் பூர்வ ஜென்மத்தில் பொய் சொல்லியதால் நரகவாசம் செய்தவன் என்று அறிந்து கொள்ளலாம். மூங்கையானை சுரபி விஷயத்தில் இழிவான செயலைச் செய்தவன் என்றும், பிறரது வீட்டுக்குத் தீயை வைத்தவன் என்றும், குஷ்ட ரோகியை பிரமஹத்தி செய்தவன் என்றும், புழுக்களுடைய பற்களுடையவனை மத்தியபானஞ் செய்தவன் என்றும், புழுநெளியும் நரகத்தில் தொழில் செய்பவனை சுவர்ணம் திருடியவன் என்றும், விகாரமான மேனியையுடையவனைக் குரு பத்தினியைச் சம்போகம் செய்தவன் என்றும், சண்டாள ஜன்மத்தை அடைந்திருப்பவனை அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் ஜாதியை விட்டு, பரஸ்திரீயை சேர்ந்தவன் என்றும், வறிஞனைக் கண்டால் அவன் முன் ஜன்மத்தில் ஒருவனுக்கும் ஒன்றையும் கொடுக்காத லோபி என்றும் அறியலாம்.

கருடா! பதி தனக்கும் அசத்தான சூத்திரனுக்கும் புரோகிதனாக இருந்தவன், பன்றியின் பிறவியை அடைவான். ஒரு கிராமத்துக்குப் புரோகிதர்கள் பலரும் இருந்து, ஒருவன் பாபஞ் செய்வானென்றால், அந்தப் பாபம் அந்த ஒருவனையே சாராமல், அந்தக் கிராமத்திலுள்ள புரோகிதர்கள் அனைவரையுமே சாரும். அவ்வி தமில்லாமல், ஒரு கிராமத்துக்குப் புரோகிதன் ஒருவனே இருப்பானாகில், அந்தப் பாபம் யாவும் அவனையே சாரும். அவன் கழுதையின் பிறவியை அடைவான். ஸ்நானமும், சந்தியாவந்தனமும் தேவதா ஆராதனையும் செய்யாமல் புசித்தவன் காக்கையின் பிறவியை அடைவான். வீடு அல்லது பந்தல் முதலிய இடங்களில் அருந்தாமல் வெட்ட வெளியில் அருந்தியவன் மனித சஞ்சாரமேயில்லாத காட்டில் ஒரு குரங்காக ஜன்மம் எடுப்பான்.

எல்லோரையும் அஞ்சத்தக்க விதத்தில் அதட்டிப் பேசியவன் பூனை ஜன்மத்தை அடைவான். செடிகளைக் கொளுத்தியவன் மின்மினிப் பூச்சியின் ஜன்மத்தையடைவான். பிராமணருக்கு, அவர்கள் அறியாதவாறு தீய பதார்த்தத்தைக் கொடுத்தவனும், கூடக் கூடாத சூத்திரப் பெண்ணைக் கூடி மகிழ்ந்த பிராமணனும், வண்டி இழுக்கும் எருதின் ஜன்மத்தை அடைவார்கள். விப்பிரனுக்குப் பழைய சோற்றைக் கொடுத்தவன் கருங்குரங்கு ஜன்மத்தையடைவான். காரணமில்லாமல் யாரையும் விரோதித்தவன் குருடனாகவே பிறக்கிறான். புஸ்தகங்களைத் திருடியவன் உலகில் பிறந்த சிறிது காலத்திற்கெல்லாம் குருடனாகி விடுவான். பிராமணக் குடும்பத்தை நசிக்கச் செய்தவன், தான் பெறுகின்ற பிள்ளைகளையெல்லாம் இழப்பான். பசியோடு, சோறு கேட்டவனுக்கு அன்னங் கொடாதவன் மக்களைப் பெறாத மஹா பாபியாவான். ஆடை களைத் திருடியவன் உடும்பு ஜன்மத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவான். பிறரை இறக்கச் செய்ய விஷம் கொடுத்தவன், சர்ப்பமாகப் பிறப்பான். சந்நியாச ஆசிரமம் பெற்றவனுடைய மனைவியைக் கூடிக் குலாவியவன் பைசாசப் பிறவியை அடைவான். மற்ற அன்னிய ஸ்திரீகளைக் கூடியவன் சிறு வயதில் இறப்பான். குருவின் மனைவியை அணைய வேண்டும் என்று இச்சித்தவன், ஓணானின் ஜன்மத்தை அடைவான். குளம் வெட்டிக் கிணறு எடுத்து, பிறகு அவற்றைத் தூர்த்தவன் மீன் ஜன்மம் அடைவான். நீதிக்கு விரோதம் செய்தவன், கோட்டான் பிறவியை அடைவான். ஏகோதிஷ்டம் சாப்பிட்டவன் நாயின் ஜன்மத்தை அடைவான். தத்தாபகாரம் செய்தவன் நரிப் பிறவியை அடைவான்.

இராஜஸ்திரீயைக் கூடியனுபவித்தவன் இழிந்த பிறவியை அடைவான். வேதியருக்குத் தோஷம் கற்பித்தவன் ஆமையின் ஜன்மத்தை அடைவான். மூன்று ஆண்டுகள் வரையில் தக்ஷணை பெற்று ஆராதனை செய்தவனும் வேதம் ஓதுவித்தவனும் சண்டாள் ஜன்மத்தை அடைவார்கள். கனி காய்களுடன், பூவும் பிஞ்சுமாய் இருக்கும் மரங்களை வெட்டியவன், ஒரு தகுதியும் இல்லாதவனாகிறான். வாசனைப் பொருள்களைத் திருடியவன் துர்நாற்ற முடையவனாய்ப் பிறப்பான். பிறருடைய பொருள்களில் எதையேனும் கவர்ந்தவன், புழு, கிருமி, முதலிய இழிந்த பிறவியை அடைவான்.

யமபுரிக்குச் செல்லும் வழியில், சீழாலும் இரத்தத்தாலும் பலவகை விசித்திர மிருகங்களாலும் முதலைகளாலும் கிரீடங்களாலும் நிறைந்த வைதரணீ என்று ஒரு நதியுள்ளது என்று முன்பே சொல்லி இருக்கிறேனல்லவா? அந்த நதியில் உருக்கிய நெய் போல ஊன் நீர் பெருகிக் கொண்டிருக்கும். மஹா பாபங்களைச் செய்தவர்களுக்கெல்லாம் அந்தத் துர்நாற்ற நதியே ஸ்நானத்திற்குரியதாக இருக்கும்.

எவற்றாலும் எனக்கு இணையான ஒருவன் இருக்கிறானோ என்று செருக்குற்றவனும் தாய் தந்தையரையும் குருவையும் புரோகிதனையும் அவமதித்தவனும் தன்னை நேசித்தவனுக்கும் தனக்குப் பிழைப்பதற்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜீவன் உபாயத் தொழிலைத் தந்தவனுக்கும், அந்தத் அந்தத் தொழிலைத் தேடிக் கொடுத்தவனுக்கும் ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் கண், முதலிய உறுப்புக் குறையுள்ள அங்கஹீனர்களுக்கும் தீங்கு செய்தவனும், விவாக விஷயத்திலும் பிராமண விஷயத்திலும் தான விஷயத்திலும் விரோதம் புரிந்தவனும், பிராமணருக்கு ஏதேனும் ஒன்றைத் தருகிறேன் என்று வாக்களித்து விட்டு இன்று நாளை என்று சொல்லி அலைய வைத்தவனும், புரோகிதனின் மனைவியைக் கூடி அனுபவித்தவனும், ஸ்ரீமந் நாராயண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாரத பாகவத புராணங்களைப் படிக்கும் இடத்திலும், சொற்பொழிவாற்றும் இடத்திலும், வீண் வார்த்தைகளைப் பேசியவனும், திருமணஞ் செய்யும் சமயத்தில் கன்னியருக்கு குறை சொன்னவனும், தோஷம் கற்பித்தவனும், பசு முதலிய மிருகங்களுக்குச் சமமாகத் தண்ணீர் வார்க்காமல் தனக்குரியவைகளுக்கு மிகுதியாயும், பிறனுக்குரியவற்றுக்குக் குறைவாகவும் கொடுத்தவனும், ஒரு பொருளை ஒருவனுக்கு கொடுத்துவிட்டு, பிறகு அதை அவனுக்குக் கொடுத்து விட்டோமே என்று துக்கிப்பவனும், பிராமணர்களுக்குரிய தர்மானுஷ்டானங்களை விட்டு, புலால் உண்ட பிராமணர்களும், பகவான் இல்லை என்று வீண் வாதம் செய்தவனும், எப்போதும் பிறரைக் கோபித்தவனும் பிறன் பழி கூறியவனும் அந்த வைதரணி நதியிலேயே மூழ்கி, மிருகங்களாலும், முதலைகளாலும் கீடங்களாலும் மிகவும் துன்பம் அடைவார்கள்.

'வைனதேயா! தீவினை செய்யாமல் நல்வினை செய்த ஜீவன், இறுதியை அடைந்த பிறகு, சுவர்க்க வாசம் செய்து, நல்ல க்ஷேத்திரத்தில் உத்தம குலத்தில் சர்வசாஸ்திர சம்பன்னனாய் தர்ம சிந்தையுடையவனாய்ப் பிறந்து நல்வாழ்வு வாழ்வான். தந்தை மரித்தபொழுது, ஆசௌசம் நீங்குவதற்குள்ளாக புத்திரனானவன், இந்தப் புராணத்தைக் கேட்பான் என்றால் அத்தந்தை நிரதிசய இன்ப வீடாகிய நமது நல்லுலகை அடைவான். தாய் மரித்தபோது இந்தப் புராணத்தைக் கேட்டால் அந்தத் தாய் புருஷ ஜன்மத்தை அடைந்து சுவர்க்கத்தை அடைவாள். பிதுரர்களும் நற்கதியை அடைவார்கள்.

சங்கராந்தியிலும் விஷுவென்னும் புண்ணிய தினத்திலும் கிரகண புண்ணிய காலத்திலும், சிரார்த்த தினத்திலும் இந்தப் புராணத்தைப் படிப்பவர்களும் கேட்பவர்களும் படிக்கச் செய்வோரும் தம் வாழ்வின் இறுதியில் நல்லுலகை அடைவார்கள். கோடி கன்னிகாதானம் செய்வதாலும், நூறு முறைகள் சோடச மஹாதானம் செய்வதாலும் கயாசிரார்த்தம் செய்வதாலும் வருகின்ற புண்ணியங்கள் அனைத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தப் புராணத்தைப் படிக்க வைத்து கேட்டாலும் படித்தாலும் உண்டாகும். ஜீவனுக்கு யமலோக பயத்தைப் போக்குவதும் மோட்ச மார்க்கத்தை தெரிவிப்பதுவும் ஆகிய இந்தப் புராணத்தை உலக நன்மையின் பொருட்டு உனக்கு நான் சொன்னேன் என்று திருமால் திருவாய் மலர்ந்தருளினார்.

பிறகு பரமகாருண்ய, பரமகிருபா நிதியாகிய பகவானைக் கருடன் வலம் வந்து, அவரது திருவடிகளைத் தொழுது வணங்கி, 'வேதாவுக்கு வேதம் ஓதியருளிய திருநாவால், சர்வேசனாகிய தேவரீர் புராணஞ் சொல்லியருளப் பெற்றேனே! அடியேன் செய்த பாக்கியமே, பாக்கியம், இதைக் கேட்க நான் என்ன என்று தவஞ் செய்தேனோ?' என்று மகிழ்ந்தான்.

இவ்வாறு சூத புராணிகர், நைமிசாரணிய முனிவர்களுக்குச் சொல்லி விட்டு அவர்களை நோக்கி, முனிவர்களே! புராணச் சிரவணம் செய்ய வேண்டும் என்று விரும்பிய உங்களுக்கு இந்தப் புராணத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீங்கள் விரும்பியவாறே சொன்னேன்!' என்று கூறிவிட்டு, ஹரி நாமங்களை, நாமணக்க வாய் மணக்க போற்றியிசைத்துக் கொண்டிருந்தார்.

அப்போது, இந்தப் புராணத்தைக் கேட்டு மகிழ்ந்த நைமிசாரணிய முனிவர்கள், ஆனந்தத்தில் மூழ்கி, மகிழ்ந்து, சூத புராணிகரை நோக்கி, மாமுனிவரே! அடியோர்களிடத்தில் கருணை கொண்டு, இந்தப் புராணத்தைச் சொன்னீர்கள். நாங்கள், தங்கள் வாயிலாக அநேகம் புராணங்களைக் கேட்டிருக்கிறோம். ஜீவனுக்கு உறுதி கற்பிக்கும் இந்த புராணம் மிகச் சிறந்தது. தங்களுக்கு எங்களால் இயன்ற கைம்மாறைப் பெரிதாகச் செய்யவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்குத் திண்ணமாக இருக்கிறது. எங்கள் நிலைமை தங்களுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாததன்று' என்று கூறி, கைந்நீர், அடிநீர், உண்ணீர் கொடுத்துப் போற்றினார்கள்.

அவர்களுள் ஒருவர், இத்தகைய புராணத்தை வெறுமனே கேட்டதாக இருக்கக்கூடாது என்று எண்ணியவராய், புராணிகருக்கு ஒரு கடத்தைக் கொடுத்தார். ஒருவர் புலித்தோல் கொடுத்தார், ஒருவர் பூணூலைக் கொடுத்தார். ஒருவர் எதைக் கொடுப்பது என்று சிறிது ஆலோசித்து விட்டுக் கடைசியில் தூசைப்புல்லைக் கொடுத்தார். ஒருவர், 'சூதரைப் போலப் புராணஞ் சொல்பவர், மூவுலகிலும் இருக்கிறார்களோ' என்று வாயாரப் புகழ்ந்தார். ஒருவர், சூத புராணிகரைப் பலமுறை பணிந்து வணங்கினார். யாவரும் புராணிகரை வலம் வந்து, வணங்கித் தத்தமது ஆசிரமத்தையடைந்தார்கள்.

சுபம் –

ஸ்ரீ கருட புராணம் வசனம் சம்பூரணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

"நன்றி மறப்பது நன்று அன்று: நன்று அல்லது
அன்றே மறப்பது நன்று"


25.02.2022 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் கேதீஸ்வரன் மோகனேஸ்வரி (அன்னியம்மா) அவர்கள் எமைப்பிரிந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறியோருக்கும். தேவையறிந்து உடனிருந்து உதவிகள் பல புரிந்த அயலவர்கள், நண்பர்கள் யாவருக்கும் இறுதிக் கிரியை தொட்டு தகனக்கிரியை வரைக்கும் தவறாது சமூகம் தந்து பணிகள் பல புரிந்த அன்பர்களுக்கும், பத்திரிகை வாயிலாகவும், தொலைபேசி வாயிலாகவும், துண்டுப்பிரசுரங்கள் மூலமும் அஞ்சலி செலுத்திய அன்பு நெஞ்சங்களுக்கும், இவ் மலரினை அச்சிட்டுத் தந்த வேழன் பதிப்பகத்தினருக்கும், இன்றைய அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து சிறப்பித்த எல்லோர்க்கும் எமது குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவர் சார்பிலும் நன்றியைத் தெரிவிப்பதில் மன நிறைவடைகின்றோம்.

நன்றி

இங்ஙனம்
குடும்பத்தினர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நூல்

உலகில் உயிரினங்களுக்கு பிறப்பும் இறப்பும் எந்தக் காரணத்தால் உண்டாகின்றன? ஜனனம். எடுத்து பூமியிலே வாழ்ந்து வளர்ந்து அனுபவமடைந்து மரணம் அடைந்த பிறகு. எந்தச் செய்கையால் சுவர்க்கமும் நரகமும் அடைய நேரிடுகிறதெனக் கூறப்படுகிறது? எந்தக் காரணத்தால் தீராத நோய்கள் வருகின்றன? எப்போது பிரேத ஜனனம் என்ற பூதப்பிரேத பைசாசாதி ஆவிப்பிறவிகள் தோன்றுகின்றன? எதனால் முக்திமோட்சம் கிடைக்கும்? என்று நைமிசாரண்ய வாசிகள் கேட்டார்கள்.

அதற்கு சூத மாமுனிவர் கூறிய
புராணம் இது

வாழ்விற்கு அப்பால் ஜீவன் செல்லும்
வழி வகைகளை விளக்கும் நூல்.

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org